
7
விரும்புகிறேன்

# விரும்புகிறேன்

''டேய்...! பிரணவ்... இந்தாடா ஒரு வாய் மம்மு வாங்கிண்டுப் போடா...''

செண்பகம் தன் ஒரு வயது பேரன் பிரணவ்விடம் மல்லுகட்டிக் கொண்டிருந்தாள். ''என்னங்க... அவனை அப்படியே பிடிங்க..'' தாத்தா ராஜாதிராஜனிடம் சொல்லிக் கொண்டே மூச்சிரைக்க சாப்பாட்டுக் கிண்ணத்துடன் வராண்டாவுக்கு வந்தாள், செண்பகம். தாத்தாவின் பின் ஒளியப்போன, பிரணவ்வை பிடித்து இழுத்து கடைசி வாய் சாதம் வாயில் திணிக்கப்பட்டது.

''டேய், ஜெயேஷ்...! என்னால முடியலடா... உன் பொண்டாட்டி, ஏழு மாச குழந்தையை விட்டுட்டு, போய் சேர்ந்து மூணு மாசமாச்சு... புண்ணியவதி அவ போன பின்னாடி, உன் பிள்ளை பின்னாடி ஓடி எனக்கு மாளல...''

''என்னை என்னம்மா பண்ணச் சொல்றே.. பிரணவ் கொஞ்சம் துறுதுறு கனிதா இருந்திருந்தா..''

''ஆமா... நீ நாள் பூரா போனவளை நினைச்சே உருகிட்டிரு.. இங்க நான் எவ்ளோ கஷ்டப்படறேன்னு உனக்கு எங்க தெரியுது..?''

''என்ன செய்ய? நீயே சொல்லு...''

''முதல் காரியமா பிரணவ்வ பாத்துக்க விட்டோட ஆள் ஏற்பாடு பண்ணு. இந்த வார கடைசில நானும், அப்பாவும் நம்ம கிராமத்துக்குப் போயிட்டு வரலாம்னு இருக்கோம். எல்லாம் அங்க போட்டது போட்டபடி இருக்கு..''

''என்னவோ செய்மா... அக்கம்பக்கத்துல சொல்லிவை பணத்தை பத்தி கவலைப்படாத நல்ல ஆயாவா பாத்து வை..''

ஏதோ இப்போது தான் நடந்த மாதிரி இருக்கிறது. மூன்று மாதங்கள் முன்பு, வழக்கம் போல் காலை பிரணவ்வை, கிரெச்சில் விட்டுச் சென்ற கனிதா சாயங்காலம் வழக்கமாகக் வந்து கூப்பிடும் நேரமாகியும் வராததால், அதன் பராமரிப்பாளர் பயந்துப் போய் ஜெயேஷுக்குப் போன் செய்தாள்.

கிரெச்சுக்குப் போய், குழந்தையை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து வெகு நேரமாகியும், கனிதாவை காணாமல் பதை பதைத்தது நெஞ்சம். அவன் செல்லும் தொடர்பின்றி இருந்தது.

**-வாணி**



அவனுடைய உயிரே அவள் தானே. தன்னிடம் சொல்லாமல் மூச்சு விடக்கூட யோசிப்பவள். ''அலுவலகம் முடிந்து நேரமாகும் எனத் தெரிந்திருந்தால், தன்னிடம் ஒரு வார்த்தையாவது கூறிவிட்டுப் போயிருப்பாளே..''

அழும் பிரணவ்வை சமாதானப்படுத்தத் தெரியாமல், கனிதாவை காணோமே, என்னவாயிற்றோ என்று செய்வதறியாது நெஞ்சம் தவிக்கையில், குழந்தையின் அழுகை, கோபத்தை தூண்ட.., முதுகில் பட்டென்று ஓங்கி ஒன்று வைத்தான்.

இன்னும் வீறிட ஆரம்பித்தது, குழந்தை. ஐயோ...! இப்போ இன்னும் சமாதானப்படுத்துவது கஷ்டம் போலிருக்கே.

சட்டென்று யோசனை வந்து, குழந்தையின் சட்டையைத் தூக்கிப் பார்த்தான். வயிறு உள்நோக்கி குழைந்து காலியாக இருந்தது.

அடடா.. குழந்தை பசிக்கு அழுதிருக்கிறது. ...ச்சே..! கனியை காணோமேங்கிற டென்ஷன்ல, அடிச்சிட்டமே!

உடனே பிரிஜ்ஜிலிருந்து பால் எடுத்து சூடுபண்ணி டம்ளரில் கொஞ்சமாக கொடுக்க, நிமிடத்தில் டம்ளரை காலி பண்ணினான் குழந்தை பிரணவ். மடியில் போட்டு தட்ட நிமிடத்தில் தூங்கியும் போனான்.

நிசப்தத்தை குலைத்துக் கொண்டு கத்திய தொலைபேசி ஒரேடியாக இவனுடைய நிம்மதியையும் அல்லவா குலைத்துவிட்டது.

'ஐயோ... கனிதா..'' என அலறியடித்துக் கொண்டு, தூங்கும் குழந்தையை திரும்ப கிரெச்சில் விட்டுவிட்டு, ஜி.எச்.க்கு விரைந்தபோது, 'கனிதாவுக்கு ஆக்ஸிடெண்ட்' என்று சொல்லி, ஒரு மூட்டையை அல்லவா காண்பித்தார்கள்.

உயிரும், உணர்வுமாக காலையில் போனவளை, எலும்பும், சதையுமாக, பொறுக்கி போகச் சொன்னார்கள்.

அப்பா..! அந்த ஆக்ஸிடெண்ட்.... ஒரு வார்த்தையில் அவன் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது.

யாரிடமும் போகாமல் அழும் பிரணவ்வை தூக்கிக் கொண்டு, சிதைக்கு தீ வைத்த போது, அந்த தெரு, அவன் கிராமம், அவன் உறவினர்கள் என மொத்த ஜனமும் அவனுக்காக அழுதது.

அவன் யாருக்காக அழுவான்...? அல்பாயுசில் போய் விட்டாளே, இனி கனிதா இல்லாமல் என்ன பண்ணப்போகிறோம்? இந்த குழந்தை பாவம்.. என்ன பாவம் பண்ணியது... எழுந்துவா, கனிதா...

அடையாளம் தெரியாமல் லாரிக்கடியில் நசுங்கியிருந்தாள் கனிதா...

''ஸாரி... மிஸ்டர் ஜெயேஷ்... இது உங்க மனைவியில்ல.. அவங்க இங்கே இருக்காங்க பாருங்க... வேறு ஒரு அனாதை பிணத்தை உங்க மனைவின்னு.. ஸாரி..'' என்று யாராவது சொல்லி, சினிமாவில் வருவது போல, கனிதாவை நேரில் கொண்டு வர மாட்டார்களா...?

மாட்டார்கள்... என் கனிதா தான் இது... காலையில் கட்டியிருந்த அதே புடவை... வெள்ளை நிறத்தில் சிவப்பு பூக்கள் தெளித்தது... இப்போது அது நிறைய ரத்தப் பூக்கள்.

நினைவுகளிலிருந்து மீண்ட ஜெயேஷுக்கு அழுகை நெஞ்சை அடைத்தது. ஆண் பிள்ளை அழலாமா...? அழலாம். கனிதாவிற்கா

வாழ்க்கை பூரா அழப்போகிறான். ஆண் பிள்ளையாகவா அவனைப் பார்த்தான் அவன். தன் குழந்தை மாதிரியல்லவா அன்பு செலுத்தினான்.

## 2

நிலா அலுவலகம் முடிந்து, திரும்பும் போது, தன் தெருவிற்குள் நுழையும் போதே, வீடு எவ்வளவு டென்சனாக பரபரப்பாக இருக்கும் என கற்பனை செய்துப் பார்த்தாள்.

இருக்காதா பின்னே! இந்நேரம் மாப்பிள்ளை வீட்டார் இவள் வருவாள், வருவாள் என எதிர்பார்த்து பின் புறப்பட்டுச் சென்றிருப்பார்கள்.

பின்னே! அப்பாவிற்கு தான் தன்னை மடக்கத் தெரியுமா...? அம்மா முதுகுதண்டில் அடிபட்டு படுத்த படுக்கையான இந்த ஐந்து வருடங்களில் அவள் பலமுறை கூறிவிட்டாள்.

'எனக்கு திருமணமே வேண்டாம்.. அம்மாவை கடைசிவரை கூட இருந்து பார்த்துக் கொள்வதே போதும். அகிலாவிற்கும், கனிகாவிற்கும் திருமணம் செய்யுங்கள்' என்று.

அப்பா கேட்டால் தானே...! எல்லா ஏற்பாடும் செய்து விட்டு, கடைசியில் இன்று மதியம் மூன்று மணிக்கு ஆபீசுக்கு போன் பண்ணி, ''உன்னை பெண் பார்க்க வருகிறார்கள். நாலு மணிக்கு பர்மிஷன் சொல்லிவிட்டு வந்துவிடு'' என்று போன் பண்ணி சொல்லிவிட்டால்...

வந்து விடுவாளா.. சரியென்று கல்யாணம் செய்துக் கொண்டு விடுவாளா.. என்ன!

வேண்டுமென்றே, பர்மிஷன் சொல்லிவிட்டு கிளம்பி, கோவிலுக்குப் போய்விட்டு, நிதானமாக வீடு திரும்பிக் கொண்டிருக்கிறாள்.

வந்தவர்கள் நன்றாக ஏமாந்துப் போய் திரும்பட்டும். அப்போது, தான் கல்யாணம் வேண்டாம் என்று தான் கரடியாக கத்துவதை சட்டை செய்யாமல், அப்பா இது மாதிரியான அசட்டு காரியங்கள் செய்யமாட்டார்.

வீடு வந்து விட்டிருந்தது. அப்பா ருத்ர மூர்த்தியாக, நரசிம்ம அவதாரம் எடுத்திருப்பார் என்று பார்த்தால், ஏது.. வீடு இவ்வளவு அமைதியாக இருக்கிறது.

''அம்மா...! அப்பா எங்க...?''

''ஆமாம்... போறவரு எங்கிட்ட சொல்லிட்டா போறாரு..?''

தன்னை விட இரண்டு வயதே சின்னவளான அகிலாவையும் ப்ளஸ் டூ படிக்கும் கடைக்குட்டி தங்கை கனிகாவையும் கூட காணவில்லை.

வேறென்ன.. அவர்கள் இன்று இருக்க வேண்டாம் என்று அம்மா சினிமாவுக்கு அனுப்பியிருப்பாள். அம்மாவை தாண்டி உள்ளே போய் விட்டாள். மௌனமாக போய் கைப் பையை மாட்டிவிட்டு முகம் கைகால் கழுவிக் கொண்டு வந்து ஊஞ்சலில் அமர்ந்தாள், நிகிலா.

அம்மாவை ஏதும் கேட்க வேண்டியதேயில்லை. பாதி கொறித்து விட்டு, மீதம் வைத்திருந்த பலகாரங்கள் தட்டில் இறைந்திருந்தன. அம்மாவால் எப்படியும் ரொம்ப நேரம் புலம்பாமல் இருக்க முடியாது!.

''அப்பாவுக்கு உன்மேல ரொம்பவே கோபம். விடுவிடுவென சட்



டையை மாட்டிக் கொண்டு, ஒரு அரைமணி நேரம் முன்பு கிளம்பிப் போனவர் தான்.

''ஆமா, அவர் செஞ்ச காரியத்துக்கு நான் தான் அவர் மேல கோபப்படணும் நான் உங்களை கல்யாணம் செய்யச்சொல்லி கேட்டேனா..?

''அதெல்லாம் பெத்தவங்களா பண்றது..! உன்னைக் கேப்பாங்களா உனக்கப்புறம் அகிலாவுக்கு வயசாகல...''

மௌனமாக எழுந்துப் போய், அம்மா சுமித்ராவின் கையை பிடித்து, ஆறுதலாக, நெஞ்சில் வைத்துக் கொண்டாள், நிகிலா. தலையை ஆதுரமாகத் தடவிக் கொடுத்தாள். நிமிடத்தில் கோபமெல்லாம் போயிற்று..

''எனக்கு மட்டும் அதெல்லாம் ஆசையில்லையாம்மா, என்ன பண்றது.. உனக்கு ஞாபகமில்லையா... எனக்கு கல்யாணம் நிச்சயம் ஆகி, கல்யாணத்துக்கு பத்து நாள் இருக்கும் போது, நானே, நீ கால் வழுக்கி விழுந்து, முதுகுத்தண்டில் அடிபட்டு, படுத்த படுக்கையாகி..''

மீதத்தை நிகிலா சொல்லவில்லை. அம்மாவை வருத்த அவள் வார்த்தைகளே போதும். அம்மாவிற்கு வைத்திய செலவிற்கும், உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும்.

அப்போது தான், நடக்க முடியாவிட்டாலும், உயிர் பிழைத்திருக்கும் சாத்தியமாவது உள்ளது என்று டாக்டர்கள் கூறியதன் பேரில், இவள் கல்யாண செலவுக்கு வைத்திருந்த பணம், நகைகள் விற்ற பணம் எல்லாமாக கொட்டி, ஆபரேஷன் நடந்தது.

இன்று கூட தன் கல்யாணம் நின்று போனதே... பணம் போனதே என்றெல்லாம் வருத்தமில்லை, நிகிலாவிற்கு அம்மாவை இந்த மட்டும் பார்க்க முடிந்ததே.

பெருமூச்சுடன் தொடர்ந்தாள். ''அம்மா, அன்றிலிருந்து உனக்கு எல்லாமே நான் தானே.. கல்யாணம் ஒன்று செய்து என்னை அனுப்பிவிட்டால், உனக்கு யாரம்மா இருக்கிறார்கள்? என்னை நீயும், அப்பாவும் புரிந்துக் கொள்ளுங்கள். அகிலாவோ படித்துவிட்டு வேலை கிடைக்காமல் இருக்கிறாள். அப்பாவுக்கும் ரிடையர் ஆன பின், நிரந்தர வருமானமில்லை. அவர் கொண்டு வரும் ஐயாயிரம் உன் மருந்து செலவிற்கு கூட பத்தாது..''

''நானும் போய்விட்டால், பொருளாதார ரீதியாகவும் கஷ்டம் அம்மா..! அதனால் தான் சொல்கிறேன், அகிலாவுக்கும், கனிகாவிற்கும் நான் முன்னின்று நடத்துகிறேன். நான் உங்களுடனேயே இருந்து விடுகிறேன்.

அம்மா கண்களில் கண்ணீர் துளிகள். துடைத்து விட்டாள், நிகிலா. 'கடவுளே...! இவ்வளவு செலவு செய்து, குழந்தையின் கல்யாணத்துக்கு வைத்திருந்த பணத்தால் ஆபரேஷன் செய்து பிழைத்த பின்னும், படுத்த படுக்கையாக, காலம் தள்ள வேண்டுமா... என்னை அன்றே அழைத்துக் கொண்டிருக்கக் கூடாதா...? மனம் உருக, அம்மா கண்கள் பனித்தன.

அப்பா சிறிது நேரத்தில் விடுவிடுவென்று வந்து திண்ணையில் சிறிது நேரம் கோபமாய் உட்கார்ந்திருந்தார். சற்றைக்கெல்லாம் போன் வந்தது. அவருக்கு.

பேசும் தொனியில், புரிந்தது. அந்தப்புறம் தரகர் போலும். இவளை

ஜாடையாகப் பார்த்துவிட்டு உரத்த குரலில் இரைந்தார். ''அதெல்லாம் தண்ணி தெளிச்சு விட்டாச்சு... நீ சின்னவ அகிலாவுக்கு ஏதாவது இருந்தா சொல்லும்.. என்னது.. சின்னவளுக்கு தானா.. அப்ப சரி...'' இதை தானே நிலா எதிர்பார்த்தாள்.

## 3

மணி ஏழே கால். நேரம் ஆக ஆக ஜெயேஷுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஏழு மணிக்கே வரும் ஆயா இன்னமும் வரவில்லை.

ஒரு வேளை வராமலே லீவ் போட்டுவிட்டாளானால்... என்ன செய்வது...! குழந்தை பிரணவ்விற்கு மாற்று ஏற்பாடு வேண்டுமே..!

இன்று அலுவலகத்துக்கும் லீவ் போட முடியாது. மாதத்தின் முதல் வாரம் என்பதால், வேலை நிறைய கிடக்கிறது.

ஆயாவின் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் போன் இருப்பதாகக் கூறியிருந்தாள். அந்த போன் நம்பராவது வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தான். எப்படியோ மறந்து விட்டான்.

ஒருபுறம் தனக்கு தெரிந்த வரை சமையலை செய்துவிட்டு, குழந்தையைக் குளிப்பாட்டி விடுவதில், கவனம் இருந்தாலும், மற்றொரு புறம் பிரணவ்வை என்ன செய்ய...? என்ற கேள்வி மூளையை ஆக்ரமித்திருந்தது.

சரி..! இன்று லீவு போட்டு விட்டு, அவனை பார்த்துக் கொள்ள வேண்டியது தான்... என்ற முடிவுக்கு வந்தப்போது, பெல் அலறியது.

வந்தவள், ஆயாவின் மருமகள். ''அத்தைக்கு இன்னிக்கு மேலுக்கு முடியல. உங்க குழந்தையை நான் பார்த்துக்கறேன். அத்தை நாளைக்கு வந்துடுவாங்க'', என்றவளிடம் பிரணவ்விற்கு குடுக்க வேண்டிய உணவு விவரங்களை சொல்லிவிட்டு, கிளம்பும் போது, மணி ஒன்பது.

எட்டு மணிக்கெல்லாம் கிளம்பியிருக்க வேண்டியவன். இனிமேல் போய் என்ன? பத்துமணி ஆபீசுக்கு பதினொரு மணிக்குப் போக முடியுமா....? வண்டியை பூங்காவிற்கு விட்டான்.

அவனும், கவிதாவும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது



''நான் மூச்சை உள்ளே இழுங்கன்னு சொல்லலியே... ஏன் இழுத்தீங்க..?''

''உங்க நர்ஸ் வைத்திருக்கிற மல்லிகைப் பூ வாசனை அப்படியே மூச்சை இழுக்க வைக்கிறது''

**-தேனி, எஸ்.மாரியப்பன்.**



அந்த பார்க்குக்கு வந்து சிறிது நேரம் குழந்தைகள் விளையாடுவதை பார்த்திருந்து விட்டுப்போவார்கள்.

''என்னங்க...!''

''ம்.. என்ன..?''

''அந்த பச்சை கலர் ப்ராக் போட்ட குழந்தையைப் பாருங்க.. பச்சைக் கிளி மாதிரி அழகு இல்லை..''

''ஆமா...''

''குழந்தை அங்க இருக்கு பாருங்களன்.. என்னை பாத்துக்கிட்டே... என்ன 'ஆமாம்'?''

''நானும் பச்சைக் கிளியைத் தான் பார்த்துக்கிட்டிருக்கேன்.'' ஒரு கணம் குழம்பி, பின் திகைத்து, மெல்ல தன் பச்சை புடவை கண்ணில் பட, வெட்க சிரிப்புடன் நிமிர்வாளே...!

நிமிர்ந்தான், ஜெயேஷ். கண்களில் ஈரம் பிரணவ் மீது உயிரையே வைத்திருந்தாயே... என்னையும் பிரணவ்வையும் விட்டுவிட்டுப் போக உனக்கென்ன அவ்வளவு அவசரம்...!

''என்னங்க..! இப்படியே நாம காலம் பூரா இருக்கலாமா...''

''இப்படியே இருக்க முடியாது..! இருட்டினதும், எழுந்து வீட்டுக்குப் போகணும்.''

தன் மடி மீது தலை வைத்து படுத்திருந்த, ஜெயேஷின் தலையைக் கோதியவாறே கவிதா கேட்க அவன் பதிலில் பொய் கோபத்துடன், பட்டென தலையை தட்டி விடுவாள்.

''இப்படியேன்னா... இப்படியே அன்பா, காதலான்னு இருப்பமான்னு அர்த்தம்...''

''நான் இருப்பேன்.. ஆனா நீ..''

''ஏன் எனக்கென்ன... நானும் இப்படியே இருப்பேன்''

''அதெல்லாம் சும்மா.. ஒரு பையனோ, பொண்ணோ பொறக்கட்டும்.. அப்புறம் பாரு, என்னை கண்டுக்கவே மாட்டே''

''அப்படின்னு யாரு சொன்னா.. என் முதல் குழந்தை நீங்கதான்... அப்புறம் தான் அது யாராயிருந்தாலும்..

இனிக்க இனிக்க, பேசியவள், துடிக்கத் துடிக்க போய் விட்டாளே...!

## 4

''அம்மா.. அகிலா...! இந்தா பையனோட போட்டோ பிடி! பேரு... பரத்... ஒரே அக்கா கம்ப்யூட்டர் சாப்ட்வேர் கம்பெனியில் உத்யோகம்.. மாசமானா சுளையா இருபதாயிரம் சம்பளம்... என்ன சொல்றே..''இரண்டாவது பெண்ணின் கையில் போட்டோவை குடுத்து விட்டு, நாற்காலியில் சாய்ந்தார், கோடீஸ்வரன். பெயர்தான் கோடீஸ்வரன் தவிர, வரவுக்கும், செலவுக்கும் இழுத்து பிடித்தல்லவா சமன் செய்ய வேண்டியிருக்கிறது.

நிலா, தங்கையின் கையிலிருந்த போட்டோவை வாங்கிப் பார்த்தாள். ''ஏய்..! மாப்பிள்ளை பையன் பார்க்க ஜம்மென்று இருக்கார்... நல்ல வேலை, நல்ல குடும்பம், அப்புறமென்ன, சரின்னு சொல்.. என்னைப்

பத்தி கவலைப்படாத.. எனக்கு கல்யாண ஆசையெல்லாம் துளி கூடக்கிடையாது''.

''வீடு, ஆபீஸ், அம்மா-இது தான் எனக்கு இனிமே எல்லாமே ...ன்னு சொல்லுடி...'' ஏற்கனவே அரைமனதுடன் யோசனையில் இருந்த அகிலாவை, நிகிலாவின் வார்த்தைகள் சரியென்று தலையாட்ட வைத்தன. ''இக்கப்பாரு...! நீ சம்மதிச்சாதான் அவங்களை பெண் பார்க்க வரச்சொல்லப் போறேன். நீயும் அப்புறம் என் மூஞ்சில கரியப் பூசிடாத. ஆமாம்..'' கோடீஸ்வரன்.

குத்திக் காட்டுகிறாரா.. தனக்குள் சிரித்துக் கொண்டாள், நிகிலா. அம்மா, அதற்குள் அவசரமாய், 'அம்மா... காளிகாம்பா..'' இந்த இடம் தகைஞ்சா, உனக்கு பாவாடை வாங்கி சாத்தறேம்மா..'' அம்மன் போட்டோவை பார்த்து, கைகூப்பி வேண்டிக் கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

''அம்மா...! இப்பதான் அகிலா சரியென்று சொல்லியிருக்கா. இன்னும் எவ்வளவோ இருக்கு.. அதுக்குள்ள அம்மனுக்கு அட்வான்ஸ் புக்கிங்கா..'' சின்னவள், கனிகா. கிண்டலடிக்க, அந்த வீடே சந்தோஷத்தை எதிரொலித்தது. வெகு நாளைக்கப்புறம்.

வெள்ளிக்கிழமை அன்று சொன்ன நேரத்திற்கு வந்து இறங்கினர். மாப்பிள்ளைப்பையன், அம்மா, அப்பா, அக்கா அகிலாவைப் பார்த்தவுடனேயே, மாப்பிள்ளை பையன் சொக்கிப் போயிருப்பது அவன் முகத்திலேயே வழிந்தது.

நிகிலாவுக்கும், மனமெல்லாம் வீட்டிலேயே இருந்தது. பர்சனல் லோன் போட்டு, எப்படியாவது இந்த இடத்தை முடித்து விட வேண்டும். பின், கனிகா, கல்யாணத்திற்கு சில வருடங்களாவது ஆகும். அதற்குள் சிறிது சிறிதாகச் சேர்த்து விடலாம்.

சம்பிரதாய பெண் பார்க்கும் படலம் முடிந்ததும், பையனின் அப்பா, ஆரம்பித்தார்.. ''என்னோட அம்மா வீட்டுல இருக்காங்க.. எண்பத்தைஞ்சு வயசாறது. மூத்தவங்க அவங்கள கலக்காம நாங்க எந்த முடிவும் எடுக்கறதுல்ல.. அவங்க கிட்ட பேசிட்டு நாங்களே போன் பண்றோம் என்ன சொல்றீங்க..?''

''பேஷா..! பெரியவா சொன்னா, பெருமாள் சொன்ன மாதிரின்னு சொல்வா.. நீங்க உங்க அம்மாவோட அபிப்ராயம் கேட்டுட்டே முடிவெடுங்கோ..!''

இரண்டு நாட்கள் கழிந்திருக்கும். காலை நேரப் பரப்பரப்பில், அவரவர் இருந்தப்போது, அமைதியை கிழத்துக் கொண்டு, குரல் கொடுத்தது, தொலைபேசி.

அதை கையில் எடுத்து சமாதானப்படுத்தி, செவிமடுத்த, கோடீஸ்வரனின் முகம் மெல்ல மெல்ல வெளிறிப்போனது. வந்த செய்தி பேரிடியாக அல்லவா இருந்தது..!.

## 5

குழந்தையின் பிஞ்சுக் கரங்களிலே, மெழுகுவர்த்தி கொடுத்து, விளக்கேற்றச் செய்து, பின் சுனிதாவின் படத்திற்கு மாலை போட்ட பின், ஜெயேஷ்.



''சுனி...! நீ என்னை விட்டு போய் ஒரு வருடமா போய்விட்டது. என்னைப் பிரிந்து ஒரு நாள் கூட இருக்கமாட்டேன் என்பாயே... உன்னைப் பிரிந்து ஒரு வருடமா உயிருடன் இருந்திருக்கிறேன், பாவி நான்...'' அரற்றியது, நெஞ்சம்.

மகனின் மனநிலை புரிந்து, ராஜாதி ராஜனும், செண்பகம், மௌனம் காத்தனர். கண் மூடி, ஜெயேஷ் சுனிதா படத்தின் முன் நின்றிருக்க, சட்டென, எட்டி, 'அம்மா, அம்மா' என்று படத்தை தொடப் போன பிரணவ் மெழுகுவர்த்தியில் கை வைத்துவிட்டு ''அம்மா...'' என வீறிட்டான்.

தாத்தாவும், பாட்டியும் தூக்கி வைத்துக் கொண்டு சமாதானப்படுத்தியும் கூட, சமாதானமாகாதக் குழந்தை, ஜெயேஷ் தூக்கி தோளில் போட்டு, சமாதானப்படுத்தவும் தான் அழுகையைக் கொஞ்சம் மட்டுப்படுத்தியது.

நெருப்பு பட்டு குழந்தையின் ஆள்காட்டி விரல் கன்றிப் போனது. மருந்துப் போட்டு, குழந்தையை தோளில் சாய்த்திக் கொண்டான், ஜெயேஷ்.

மருந்தை வாயில் வைக்கப் போன பிரணவ்வை கையை தட்டிவிட்டு, வெளியே எடுத்துக் கொண்டு வந்த போது, எதிரே கமலக்கண்ணன், அவன் நண்பன் வந்து கொண்டிருந்தான்.

''வாடா, கண்ணா...'', வரவேற்றுவிட்டு ஜெயேஷ் உள்ளே வர, கமலக்கண்ணன் கையிலிருந்த பிஸ்கட் பாக்கெட்டை பார்த்துவிட்டு, குழந்தை பிரணவ் அவனிடம் தாவியது.

கமலக்கண்ணன் குழந்தையை வாங்கிக் கொள்ள, உள்ளே சென்றான், ஜெயேஷ்.

''என்னம்மா... இது! என்னை பார்த்துவிட்டு அவன் பாட்டுக்கு உள்ளே போறான்...'', செண்பகத்திடம் கேட்க, அவள் சுனிதா போட்டோவை நோக்கி கைகாட்டினாள்.

''சுனிதா போய் இன்றோடு ஒரு வருஷமாச்சு கண்ணா. திதி கொடுத்துவிட்டு, வந்து குழந்தை கையால விளக்கேத்தினான், அப்போ தான் குழந்தை விளக்குல கை வைச்சுடுச்சு...''

''என்னம்மா... குழந்தை விளக்குல கைவைக்கறவரைக்கும் ஜெயேஷ் பாத்துண்டா இருந்தான்...?''

''அதையேன் கேக்கற... அவன் பெண்டாட்டி நினைவு வந்துட்டா, கண் முன்னே நடக்கறது கூட அவன் மூளைல உறைக்கறதில்ல, பைத்தியம் மாதிரி நடந்துக்கறான்...''

ஜெயேஷின் அப்பா இடையே புகுந்தார். ''அன்னிக்கு அப்படித் தான் கண்ணா, குழந்தைய குளிப்பாட்ட வெந்நீரை பக்கெட்டில் விட்டிருக்கான்... அந்த நேரம் பார்த்து சுனிதா குரல் கேட்ட மாதிரி இருந்துச்சாம். அவளையே நினைச்சுண்டு, சுடுதண்ணிய அப்படியே குழந்தை மேல விடப் போயிருக்கான். நல்லவேளை, அந்த நேரம் பாத்து ஆயா வந்திருக்கா...''

ஆயா காபி கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள். ''ஜெ

யேஷை இப்படியே விட்டா, ஆபத்தும்மா..., நீங்க இன்னொரு கல்யா ணம் பத்தி பேசிப் பாத்தீங்களா...''

''எங்கேப்பா பேசறது. போன பெண்டாட்டி மேல, இவ்வளவு உயி ரையே வைச்சிருக்கான். அது தெரிஞ்சு, எப்படிப்பா...?''

''நீங்க சொல்றது சரிதாம்மா... ஆனா, ஜெயேஷை அவனுக்காக இன் னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லலையே... இந்த குழந்தையைப் பாருங்க. இவன் பாட்டுக்கு கனிதா நினைவில் குழந்தையை கவனிக்காம விட்டான்னா... என்ன பண்றது? குழந்தைக்கு அம்மா வேண்டாமா.. அதுக்காகவாவது அவனை சம்மதிக்க வைக்கணும்!''

''அதெல்லாம் இவன்கிட்ட பலிக்காதுப்பா. ஏதோ... பெண்டாட்டி பேர்ல ஆசை வைச்சிருக்கான்பாங்க... ஆனா, இவனை மாதிரியே? அந்த வெட்கக் கேட்டை நீயே வந்துப் பாரு...''

கனிதாவின் படம் வைத்திருந்த கப்போர்டை முழுவதுமாக திறந்தாள் செண்பகம்.

அங்கே, கனிதாவின் செருப்பு, அவள் உபயோகப்படுத்திக் கொண் டிருந்த கைப்பை, இரண்டு ஹேர்கிளிப், கொஞ்சம் அழுக்கான நான்காக மடிக்கப்பட்ட கைக்குட்டை பெரிய பெரிய மகான்களின் காட்சிப் பொருள் போல் வைக்கப்பட்டிருந்தன.

அடப்பாவி. உண்மையிலேயே அல்பாயுசில போன கனிதா மீது பொறாமை வந்தது.

''சரிம்மா... நான் கிளம்பறேன், ஒரு வீடியோ கவரேஜ் இருக்கு. இவனை பாத்து ரொம்ப நாளேச்சுன்னு வந்தேன்'' கிளம்பிய கமலக்கண் ணன் ஒரு வீடியோகிராபர். சொந்தமாக ஸ்டுடியோ வைத்திருக்கிறான்.

ஏதோ நினைத்துக் கொண்டவன் ஜெயேஷின் அறைக்குள் நுழைந் தான். ''டேய் பிரணவ்வை பாருடா...! கைல எப்படி கன்னியிருக்கு... டேய் உனக்காக இல்லாட்டியும், குழந்தைக்காகவாவது...''

கமலக்கண்ணன் முடிக்கக் கூட இல்லை, குறுக்கிட்டான் ஜெயேஷ்,

''என்னை கனிதாவோட இருக்கவிடறயா... இப்ப கிளம்பறயா...?''

**6**

**பே**ரிடி ஒன்று ரிஸீவர் வழியே இறங்கியது, கோமஸ் வரனுக்கு, எதிர் முனையில்; அகிலாவை பெண் பார்த்து விட்டுப்போன மாப்பிள்ளையின் தந்தை கூறிக் கொண்டிருந்தார்.

''நீங்க இதை சரியா புரிஞ்சுப்பீங்கன்னு நினைக்கறேன். உங்க நிலமை எனக்கு புரியறது. ஆனா, சொசைட்டில யார், என்ன சொன்னா லும் பரவாயில்லைன்னு எங்களால இருக்க முடியாது பாருங்க... எங்க அம்மாவும் இதைத் தான் சொல்றாங்க.. நாளைக்கு மூத்த பொண்ணு கல் யாணத்துக்கு இருக்கறச்சே இவளுக்கு பன்றாங்களே... மூத்தவளுக்கு ஏன் கல்யாணம் இன்னும் ஆகலைன்னு, கல்யாண மண்டபத்துலயே பேசறவா ஒவ்வொருத்தரின் வாயையும் நாம அடைச்சிண்டுருக்க முடியுமா, சொல் லுங்க.''



''அதனால...'' இழுத்தார், கோமஸ்வரன். அவர் குரல் அவருக்கே கேட்காதவாறு நடுங்கியது.

''அதனால என்ன... பயப்படாதீங்க... உங்க இரண்டாவது பொண்ணை எங்களுக்கெல்லாம் பிடிச்சிருக்கு. அதில் மாற்றமேயில்ல... நீங்க உங்க முதல் பொண்ணுக்கும் வரன் பாருங்கோ... இரண்டு கல்யா ணத்தையும் ஒண்ணா நடத்திடலாம். உங்க மனைவியை பாத்துக்கத்தான் நீங்க இருக்கீங்களே...''

என்ன வென்று சொல்வார், பொண்ணைப் பெற்றவர். சரி, பார்க்கி றேன். ''என்று போனை வைத்தார். அவரும் ஆரம்பத்திலிருந்து அதைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

போனில் யாரென்று எட்டிப்பார்த்த, நிகிலா, விஷயம் கேள்விப் பட்டு, கோபத்தில் முகம் சிவந்தாள்.

''என்னம்மா இது. அநியாயமா இருக்கு... அவங்களுக்கு அகிலாவ பிடிச்சிருக்கு. அப்படியிருக்கறச்சே, என்னுடைய கல்யாணம் முடிஞ்சா தான் இந்த கல்யாணம் நடக்கும்ங்கற மாதிரி அவங்க எப்படி பேச லாம்...?''

''அவங்க பேர்லயேயும் தப்பில்லை. பையனோட பாட்டி, இதை சொல்லியிருப்பாங்களா இருக்கும். ஒனக்கு ஒரு அண்ணனோ, தம்பியோ இருந்திருந்தா, அவன் கல்யாணம்னு வரும் போது நாமளும் இப்படி தானே யோச்சிருப்போம்... அதோட, நீ இன்னிக்கு கல்யாணமே வேண் டாங்கற... நாளைக்கு அகிலாவையும், மாப்பிள்ளையையும் பாக்கறச்சே, உன் மனசுல உனக்கே தெரியாமா கொஞ்சம் வருத்தம் ஏற்படும்... பெரி யவங்க சொன்னா இந்த காலத்துல யாரு கேக்கறீங்க? அதான் அந்த காலத் துல பெண்களை மதிக்கல, அடிமையா வைச்சிருந்தாங்கன்னெல்லாம் சொல்றோம்... பெண்களோட உணர்ச்சிகளை புரிஞ்சிருந்ததுனால தான், கல்யாண வயசுல தங்கை இருக்கறச்சே, அண்ணனுக்கு முதல்ல கல்யா ணம் பண்ண மாட்டாங்க...''

''போம்மா... நீ அந்த காலத்துலயே இருக்கே...'' அவளை முடிக்க விடாமல், அகிலா கண்ணீருடன் இடையே புகுந்தாள்.

''எனக்கு இப்படித்தான் ஆகும்னு தெரியும். எனக்கு கல்யாணமே வேண்டாம். இந்த வீட்டில அந்த யோகம் யாருக்குமே இல்லை. நாங்க மூணு பேரும் இப்படியே இருக்கோம்...''

எப்படியும் இந்த வரன் தகையாது என்று தோன்றியது, அவளுக்கு அதற்கு காரணம் நிகிலாதான் என்ற கோபத்தில் வாய்க்கு வந்தபடியெல்



''என்னப்பா... பத்து ரூபாய்க்கு குறைவா பிச்சை போடக் கூடாது...ன்னு சொல்ற...!''

''என் டூ-வீலர்க்கு பிரிமியம் பெட்ரோல் தாங்க போடுவேன்''

**-தேனி, எஸ்.மாரியப்பன்.**

லாய் புலம்ப ஆரம்பித்தாள், அகிலா.

கோடீஸ்வரன், "நிலா... இதோ பாரும்மா...! நாளைக்கு 'பொண்ணோட சம்பாத்யத்துக்கு ஆசைபட்டு அவளை கல்யாணம் பண்ணிக் குடுக்காம இருக்கான், பாரு'ன்னு என்னை நாலுபேர் தப்பா பேசணுமா... இப்போ, உன்னோட கவலை என்ன, பணம் தானே, நான் மூட்டை தூக்கியாவது, உங்கம்மாவை காப்பாத்துவேன். என் வருமானம் எங்க ரெண்டு பேருக்கும் போதும். அப்படியும் உனக்கு எங்களுக்கு உதவணும்னு தோணித்துன்னா, உனக்கு பாக்கற பையன்கிட்ட பேசிப்பாரு உன் எதிர்ப்பார்ப்பைச் சொல்லு.. அதவிட்டுட்டு கல்யாணமே வேண்டான்னு..."

"சரிப்பா... உங்க இஷ்டம் போல செய்யுங்க..." தன் அறைக்குள் புகுந்துக் கொண்டாள்.

கைகள் அனிச்சையாய், நாட்குறிப்பை எடுத்து எழுதத்துவங்கின.

"நல்லது இது தான் என,
நயமாய் நினைப்பதும் கூட,
பெண்ணடிமையின் ஒரு
பரிமாணமல்லவா!
எனக்கு நல்லது இதுதானென,
தீர்மானிக்கும்.
தனி சுதந்திரம்
தருவ தென்று எமக்கு!"

கவிதையினை எழுதி, 'நிலா' என்று அதன் அடியில் எழுதி, கைப் பையில் வைத்தவாறு, அலுவலகம் கிளம்ப, பரபரப்பானாள்.

## 7

கமலக் கண்ணனை மூஞ்சியில் அடித்த மாதிரி அன்று விரட்டிவிட்டு சுனிதா நினைவிலேயே இருந்த ஜெயேஷ்க்கு, மெல்ல மெல்ல இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியதும், அன்று தான் நடந்து கொண்டது தவறு என்று உறைத்தது.

மனைவியை இழந்து அதுவும் கைக்குழந்தையுடன் கஷ்டப்படும், இளம் கணவனுக்கு இதுபோன்ற அறிவுரைகள் சொல்லப்படுவது வழக்கம் தானே. ஆனாலும், பிரணவிற்காக, கல்யாணம் செய்து கொள் என்று ஆளுக்காள் சொல்கிறார்களே, சுனிதாபோல், இன்னொருத்தி அவ்வளவு நன்றாய் பிரணவை பார்த்துக் கொள்ள முடியுமா..?

எது எப்படியோ, தன் செய்கையின் தவறு உணர்ந்து, கமலக்கண்ணனை போனில் கூப்பிட்டு, 'அதையெல்லாம் மனசுல வெச்சுக்காதடா!' என்று சமாதானப்படுத்தினான்.

மேலும் சில நாட்கள் வழக்கமான ரீதியிலேயே செல்ல, அன்று மதியம் முதலே ஜெயேஷுக்கு தலைவலி மண்டையைப் பிளக்க, அலுவலகத்தில் சீக்கிரம் செல்வதாகக் கூறிவிட்டு, வீட்டிற்குப் போய், மாத்திரை போட்டு படுக்கலாம் என்று முடிவெடுத்தான்.

வீட்டு வாசலிலேயே ஆயா பரபரப்புடன் கையைப் பிசைந்து கொண்டிருந்தது. கண்ணில்பட்டது. 'என்னவாயிற்று...? பிரணவிற்கு ஏதாவது...?



நாம் தான் என் செல் நம்பரை எழுதி ஆயாவிடம் கொடுத்து, ஏதுவென்றாலும் தொடர்பு கொள்ளச் சொல்லி இருந்தோமே...!

பின், ஏன் கையைப் பிசைந்து கொண்டு வாசலில் நிற்கிறாள்...?

அத்தனை கேள்விகளுக்கு நிமிடத்தில் விடை கிடைத்தது. குழந்தை பிரணவ் தலை தொங்கிப் போய், மயங்கி சரிந்திருந்தான். பரபரப்பாய், மூக்கில் கைவைத்துப் பார்த்தான். மூச்சு சீராய் வந்து கொண்டிருந்தது. நிம்மதியாய் நிமிர்ந்தான். என்னவாச்சு பிரணவ்விற்கு...! "அப்பா..."ன்னு ஓடி வருவான் ஏன்? இப்படி மயங்கி கிடக்கிறான்.

"இல்லைங்கய்யா... நான் உள்ள வேலையா இருந்தேனா.. தம்பி விளையாடிட்டிருந்துச்சு... திடீர்னு வந்து பாத்தா மயங்கி கிடக்குது. எனக்கு கையும் ஓடல, காலும் ஓடல.. நீங்க குடுத்த போன் நம்பர் எங்க வெச்சேன்னு மறந்து போச்சு..."

என்னவாயிற்று. என் குழந்தைக்கு? டாக்டரிடம் கூட்டிப் போக முடிவு செய்து குழந்தையை தூக்கித் தோளில் போடும் போது, வாசலில் நிழலாடியது.

ஒரு சின்னப் பையன்.. தயங்கி நின்றுக் கொண்டிருந்தான். இவனை சட்டை செய்யாது, வேலைக்கார ஆயாவை "ஆயா..." என்று கூப்பிட அவள் அவனை "போ.. அப்புறம் வா" என்று சைகையால் விரட்டிக் கொண்டிருந்தாள்.

அந்த சின்ன பையனோ, அதையும் புரிந்து கொள்ளாமல், "ஆயா.. நீ இப்ப காய் வாங்கறச்சே அம்பது ரூபா.. கம்மியா குடுத்துட்டாராம் முதலாளி. இந்தா பிடி.

குடுத்துட்டு வர சொன்னாரு. சீக்கிரம் போகலைன்னா கத்த ஆரம்பிப்பாரு.." அவள் கையில் பணத்தைத் திணித்துவிட்டு ஓடிவிட்டான்.

"அந்த பையன் என்ன சொல்றான்.. நீங்க இப்ப காய் வாங்க போனீங்களா..' குழப்பத்துடன் ஜெயேஷ் கேட்க,

"இல்லீங்கய்யா." என இழுத்தவள், பின் இனிமேல் மறைக்க ஒன்றுமில்லை என நினைத்தாளோ என்னவோ, தயங்கி, தயங்கி... "ஆமாங்கய்யா..." தம்பி நல்லா தூங்கிட்டிருச்சா.. நீங்க வந்ததும் நான் வீட்டுக்குப் போறதுக்குள்ளே இருட்டிடுது.. எங்க வீட்டுக்கு காய் வாங்க முடியல.. அதான் தம்பி எழுந்திரிக்கிறதுக்குள்ளே வந்துடலாம்னு வீட்டை பூட்டிட்டு காய் வாங்கிட்டு உடனே வந்துடலாம்னு போனேனா.." என்றவள் அவ[...] ரமாய் சொன்னாள்.

"ஒரு பத்து நிமிஷம் கூட இருக்காது. உடனே வந்துட்டேங்கய்யா[...] அதுக்குள்ளே தம்பி எழுந்து, அழுதுட்டு இருந்தது. என்ன சமாதான[...]டுத்தியும் அடங்கல.. அதான். ரொம்ப அழும்போது, நீங்க குடுப்பீங்க[...] அந்த மருந்து ஒரு இரண்டு மூடி குடுத்தேன்.. குழந்தை மயங்கிடுச்[...] கைய்யா... என்ன செய்யறதுன்னே தெரியல.'

மருந்தை வாங்கிப் பார்த்தான். பெனர்கான் தூக்க மருந்து அ[...]மாய், ஆயாவை போகச் சொல்லிவிட்டு வீட்டை பூட்டிக்கொ[...] குழந்தை மருத்துவரிடம் ஓடினான் ஜெயேஷ்.

விஷயத்தைச் சொல்ல, "என்ன இவ்வளவு கேர்லஸ்ஸா இரு[...]

இங்க..." என்றவாறே, கிட்டதட்ட நர்ஸ் குழந்தையை பிடுங்கிக் கொண்டு போக, கூடவே டாக்டரும் உள்ளே போக, கதவு சாத்தப்பட்டது.

"ச்சே...! என்ன முட்டாள் தனம் ஆயா செய்தது! குழந்தை அழுதது என்று தூக்க மருந்து குடுத்திருக்கிறாள். அந்த மருந்து, கனிதா இறந்த கையோடு குழந்தை "அம்மா, அம்மா" என்று ரொம்ப அழ அதை சமாளிக்க முடியாமல் டாக்டரிடம் தூக்கி கொண்டு போனபோது அவர் குடுத்தது.

குழந்தை அம்மா ஏக்கத்தில் சமாளிக்க முடியாமல் அழும்போது அதை தூங்கப் பண்ண, அதிகபட்சம் அரை மூடி மருந்துதான் கொடுக்க வேண்டும். ரொம்ப கொடுத்தால் உயிருக்கே ஆபத்து என்று எச்சரித்துக் கொடுக்கப்பட்ட மருந்து அது.

அந்த அரை மூடி மருந்து குடுத்தாலே தூங்க ஆரம்பிப்பவன் மறுநாள் தான் எழுந்திருப்பான் அப்படியிருக்க, அதை இரண்டு மூடிகள் கொடுத்திருக்கிறாள். ஆயா... அவளை சொல்லி என்ன பயன்? கூலிக்கு வேலை செய்பவள்.

பல குழந்தை காப்பகங்களிலும் கூட அழும் குழந்தையை சமாளிக்க இப்படி தூக்கமருந்து கொடுத்து கொடுத்து தூங்க வைப்பதாக கேள்விபட்டிருக்கிறான்.

எது எப்படியோ, குழந்தை பிழைக்க வேண்டும். எல்லா தெய்வங்களையும் வேண்டிக் கொள்ள ஆரம்பித்தது மனசு.

இறுதியாக பயப்பட ஒன்றுமில்லை. ஒரு இரண்டு மணி நேரத்தில் குழந்தை கண் விழித்தவிடுவான் என்று கூறி இவனை பார்க்க உள்ளே அனுமதித்தனர். ஆயாவை தொடர்ந்து வேலையில் வைத்திருப்பது பற்றி மனதில் ஒரு பயம் எழுந்தது. கனிதா போனபின், குழந்தைக்காகவே வாழ்கிறான். குழந்தைக்கு ஏதாவது ஒன்று என்றால்...?

## 8

நிகிலா சரியென்று சொன்னவுடன் கோமேஸ்வரன் மும்முரமாக வரன் பார்க்கத் தொடங்கி விட்டார். அகிலாவை பார்த்துவிட்டு போன மாப்பிள்ளை வீட்டார் மனம் மாறுமுன், இவளுக்கும் நிச்சயம் பண்ணி இரு கல்யாணத்தையும் நடத்த வேண்டுமே!

இரண்டு மூன்று வரன்கள் தட்டிப் போக இன்று வீரபத்ரன், பெண் பார்க்க வருவதாக ஏற்பாடு சொன்ன நேரத்திற்கு தோழனுடன் பெண் பார்க்க வர, நிகிலா அழைத்து வரப்பட்டாள்.

காபி, டிபனை ஒரு கை பார்த்தானதும், இன்டர்வியூ மாதிரி கேள்விகள் கேட்க ஆரம்பித்தான். வீரபத்ரன்.

"எந்த கன்சர்னில் வேலை பாக்குறீங்க..!"

"குப்தா அட்வர்டைசிங் ஏஜன்சிஸ்"

"எத்தனை வருஷமா இருக்கீங்க.."

"எட்டு வருஷமா.."

"தோராயமா, அப்ப ஒரு பத்தாயிரம் சம்பளம் வருமில்லையா"

"இருபதாயிரம் வருது..." "என்ன, என்னை விட ஒரு இரண்டாயி



ரம் கூட வாங்கறீங்க.. நோ ப்ராப்ளம்...?" ஆமா 'நிலா'ங்கற பெயர்ல கவிதைகள் எழுதறது நீங்க தானா?

"ஆமா.. ரொம்ப வருஷமா எழுதிக்கிட்டு இருக்கேன்."

"ரொம்ப அழகா இருக்கீங்க... நல்லா சம்பாதிக்கிறீங்க. அப்புறம் ஏன் இவ்வளவு நாளா கல்யாணம் ஆகாம இருக்கீங்க..."

பல்லை கடித்தவாறு கூறினாள். நிகிலா "இல்ல எனக்கு கல்யாணமே வேண்டாம்னு சொல்லிக்கிட்டிருந்தேன்.

"அப்புறம் இப்ப சரின்னு சொல்லிட்டீங்களாக்கும். எனக்கு பாருங்க, எப்பவுமே ஓபனாப் பேசறவங்களைப் பிடிக்கும். இந்த காலத்துல யாருங்க கல்யாணம் வேண்டாங்கறாங்க... எல்லாம் கல்யாணத்துக்கு முன்னாடியே அப்படி, இப்படி இல்ல இருக்காங்க.."

இதை எதற்காக என்னிடம் கூறுகிறீர்கள் என்பது போல ஒரு பார்வை பார்த்தாள். நிகிலா.

"இல்ல, நீங்களும் அதுமாதிரி யாரையாவது லவ்.. அது இதுன்னு.."

"என்னாங்க. நீங்க என்னை பெண் பார்க்க வந்திருக்கீங்க.. அப்படி வந்த எடத்துல பேசற பேச்சா இது?"

"இல்ல.. உங்க கவிதைகள்ள காதல் ரசம்சொட்ட வர்ணிச்சு எழுதறீங்களே... அதான் அனுபவபட்ட மாதிரியான எழுத்து அது. ...அதான்..." -இழுத்தான்.

"என்ன மிஸ்டர்! அதுக்காக மரணத்தை பத்தி கவிதை எழுத, ஒரு கவிஞர் செத்துபோய் அனுபவிச்சுட்டு அந்த அனுபவத்தை வைச்சுத்தான் எழுதனும்னா, அது நடக்கற காரியமா.."

"என்ன இப்பவே எடுத்தெறிஞ்சுப் பேசறமாதிரி பேசறீங்க..."

"நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கலை:. இப்ப நான் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை முகத்துலபெண் காரிதுப்பி, 'போடா வெளியே'ன்னு சொல்ற மாதிரி கருவை வெச்சு ஒரு கவிதை எழுதப் போறேன். உங்க எண்ணப்படி அனுபவம் இல்லாம எதையும் எழுத முடியாது. இல்லையா? அந்த அனுபவத்தை உங்ககிட்டேயே ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். எப்படி வசதி...?

வீரபத்ரன் இருண்ட முகத்துடன் எழுந்தான்.. நிகிலா வாசலை நோக்கி கைகாட்டிக் கொண்டிருந்தாள்.



"மன்னர் தைரியமா போர்க்களத்திற்கு கிளம்பி போறார்... என்ன விசேஷம்?"

"போர் களத்தில் கவர்ச்சி பெண்களை நடனமாடவிட்டிருக்கிறார். அவர்களைப் பார்த்து எதிரிப்படை வீரர்கள் மயங்கிவிடுவார்கள் என்ற எண்ணம்தான்".

-வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி

''என்னப்பா...? தரகர் இது மாதிரி வரனெல்லாம் கொண்டு வந்தி ருக்கார்... எப்படி பேசறான் பாருங்க.. நல்ல குணமுள்ள இடமா இருந்தா மட்டுமே சொல்லச் சொல்லுங்க...''

''நான் சொன்னேன்மா... என்ன இருந்தாலும் உனக்கும் முப்பது வய சாச்சில்லையா... அதான்... கோபால்வரன் இழுத்தார்.

''அதனால என்னப்பா.. இப்ப வந்துட்டு போனானே அது மாதிரி ஒரு ஆளை கல்யாணம் பண்ணிக்கறதவிட.. இரண்டாம் தாரமாய் இருந்தாலும் பரவாயில்லை. ஒரு நல்ல மனுஷனா, நல்ல குணமுள்ளவனாப் பாக்கச் சொல்லி சொல்லுங்கப்பா.

## 9

தன்னை வேலையை விட்டு நிறுத்திவிடுவார்களோ என்ற பயத்தில் ஆயா, தன் வீட்டு கஷ்டங்களையெல் லாம் சொல்லி புலம்ப, வேறு வழியில்லாமல் தொடர்ந்து ஆயாவை வேலைக்கு வரச் சொன்னான் ஜெயேஷ்.

ஊரிலிருந்து விஷயம் கேள்விபட்டு வந்த அம்மாவும், தன் கணக்கிற் குப் புலம்பிவிட்டுதான் போனாள்.

''நான் என்ன ஊருல, உலகத்துல நடக்காததையா சொல்றேன். நீ உன்னை மட்டுமே பாத்துக்கற.. குழந்தையைப் பாரு.. அன்னிக்கு நீ மட் டும் தலைவலின்னு சீக்கிரம் வரலைன்னா என்ன ஆயிருக்கும்னு நினைச்சு பாத்தியா?''

உண்மையில் அப்படி ஒரு சாத்தியக்கூறு பற்றி நினைக்கையிலேயே உடம்பு உதறிப் போட்டது ஜெயேஷுக்கு. ஏதாவது ஒன்று ஆயிருந்தால் அப்புறம் ஆயாவை வருத்தப்பட்டு என்ன பயன்?

ஜெயேஷ் கொஞ்சம் கொஞ்சமாக மறுமணம் பற்றி யோசிக்க ஆரம் பித்தான்.

வாழ வேண்டிய வயதில் ஜெயேஷ் இப்படி போனவளை நினைத்து உருகிக் கொண்டு சன்யாசி மாதிரி இருக்கிறானே என்பதில் செண்பகத் துக்கு வருத்தம் கொஞ்சம் நஞ்சமில்லை.

ஆனால், அவன் நிலையில் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள் என்றால் அம்மா என்றுகூட பார்க்காமல் எடுத்தெறிஞ்சு பேசிவிடவும் வாய்ப்பிருக்கிறது. எனவேதான் குழந்தையை காரணமாக காட்டி இன் னொரு கல்யாணம் பற்றி யோசிக்கச் செய்திருந்தாள்.

குழந்தைக்காக என்று அவன் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும், நாளடைவில் வீட்டோடு ஒருத்தி மனைவியாக வளைய வரும்போது மகன் மனம் மாறி மனைவியாக ஏற்றுக் கொள்ளலாம் என்ற நப்பாசை செண்பகத்திற்கு.

என்ன இருந்தாலும் மகனின் வாழ்வு சிறக்க வேண்டும் என்றெண் ணிய தாய்மனசு அவ்வாறு சிந்தித்தது.

ஜெயேஷும் பலவாறு யோசித்துப் பார்த்தான். ஒரு விதவையை மணந்து கொண்டு வாழ்வு கொடுக்கலாம். ஆனால் நம்மாலேயே சுனிதா வின் நினைவுகளிலிருந்து இன்னமும் மீளமுடியவில்லை. அதுபோலவே,



இன்னொருவருடன் வாழ்ந்து, சகலவிதமான சுக துக்கங்களை அனுப வித்து அதிலிருந்து மீளமுடியாத ஒரு பெண்ணிற்கு என்னிடமோ, குழந் தையிடமோ எப்படி ஒரு ஒட்டுதல் ஏற்படும்?

அதும் ஒரு குழந்தையும் இருந்தால், அதனையும், ப்ரணவ்வையும் வளர்க்கும்போது, பாரபட்சமில்லாமல் நடந்து கொள்ள முடியுமா?

விதவை மறுமணத்தைப்பத்தியெல்லாம் வார்த்தையளவில் பேசும் யாரும், ஏன் ஒரு மனைவி இழந்தவனும் கூட, அதை செயல்படுத்த தன் வாழ்வில் தயக்கமே காட்டுகிறான். ஜெயேஷும் அதே முடிவுக்கே வந்தி ருந்தான்.

''என்னடா.. குட்டி போட்ட பூனை மாதிரி சுத்தற.. ஏதாவது சொல்ல ணுமா..''

இரண்டு நாட்கள் போனுடன் இருந்துவிட்டு கிராமத்துக்கு திரும்பிச் செல்ல வந்திருந்த அம்மா கேட்டாள்.

இல்லம்மா.. நீ சொன்னது பத்தி யோசிச்சுப் பாத்தேன். நீ சொல்ற தும் சரின்னு தோணிச்சு.. நீ வேணா தரகர் கிட்ட சொல்லி, ஒரு நல்லப் பொண்ணா பாரு. குடும்ப பொறுப்பு, அக்கா, தங்கை கல்யாணம்னு ரொம்ப வயசாகியும் கல்யாணம் ஆகாதப் பொண்ணாப் பாக்கச் சொல்லு. அவங்களுக்குத் தான் குழந்தையை நல்லா பாத்துக்கற பக்குவம் இருக் கும்.

''அதைவிட முக்கியம், ஆரம்பத்துலயே குழந்தைக்காகதான் இந்த கல்யாணங்கறத சொல்லிடச் சொல்லு. என் மனசு சுனிதாவை தவிர இன் னொருத்திய ஏத்துக்கும்னு எனக்கு தோணலை..''

சம்மதம் சொன்ன ஜெயேஷ், ரூமுக்குள் புகுந்து கொண்டான்.

தனக்குள் சிரித்துக் கொண்டாள் செண்பகம். ஒரு பெண் சுனிதா இடத் துல இருந்து வளைய வந்தால் நீ மாறாமல் இருக்கியா பார்ப்போம்' என்று நினைத்துக் கொண்டாள்.

குழந்தை பிரணவ்வை தூக்கி முத்தமிட்டுவிட்டு ''உனக்கு சித்தி வரப் போறாடா.'' என்றவாறு கொஞ்சிவிட்டு கீழே விட்டுவிட்டு தரகருக்கு போன் பண்ண எழுந்தாள் செண்பகம்.

## 10

என்னடா... நிகிலாவிற்கு முப்பது வயதாகிறது. அதற்கு மேல் வயதில் எங்கே வரன் தேடுவது இரண் டாம் தாரம் என்றாலும் பரவாயில்லை. ஆனால் நல்ல குணமுள்ள பையன்தான் வேண்டுமென்கிறது இந்தப் பெண்.

அக்கா, தங்கை இருவரின் கல்யாணத்தையும் முடித்து நல்ல கனிச மான கமிஷன் எதிர்பார்த்திருந்த தரகருக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன செய்யலாம் என யோசனையிலிருந்தபோது தான் செண்பகத்தின் போன் வந்தது.

நல்ல பக்குவமும், குடும்பப் பொறுப்பும் உள்ள பெண்ணாக சற்று வயதானால் கூட பரவாயில்லை. ஜெயேஷுக்கு பாருங்கள் என்று செண் பகம் சொன்னது தரகருக்கு பழம் நழுவி பாலில் விழுந்தது போலானது.

இருவீட்டாரும் கொடுக்கக் கூடிய கமிஷன் கண்முன்னே ஒரு நிமிடம் வந்து போனது.

"பேஷா.. நீங்க சொன்ன மாதிரியே தம்பிக்கு ஒரு இடம் பாத்துட்டா போறது. அதுக்கான வேளையும் வந்திருக்கு பாருங்க.. நீங்க சொன்ன மாதிரியே ஒரு இடம் கையிலேயே இருக்கு.. இன்னிக்கே கொண்டு வரேன்.."

சொன்னமாதிரியே அன்று மாலையே ஜெயேஷின் வீட்டிலிருந்தார் தரகர்.

கல்யாணமே வேண்டாம் என்றிருந்தவள் இந்த மட்டும் ஒத்துக் கொண்டாளே மனம் மாறிவிடக்கூடாதே என்று நிகிலாவின் தந்தை கோமஸ்வரன் நினைத்தார், தன் மனம் மாறுவதற்குள் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் செண்பகம், ராஜாதிராஜன் இருவரும் இருந்தபடியால் சீக்கிரமே நிச்சயத்துக்கு நாள் குறிக்கும் நிலை வரை வந்து விட்டது.

"அம்மா... நீ அவங்ககிட்ட சொல்லிடு. நிச்சயமெல்லாம் வேண்டாம். ஒருநாள் போய் வெத்தலை. பாக்கு மாத்திப்போம்... சிம்பிளா ஒரு கோவில்ல கல்யாணம் ஏற்பாடு பண்ணச் சொல்லு அது போதும்..."

மகனின் மனநிலை தெரிந்ததால், வேறேதும் சொல்லாமல், சரியென்று சொல்லி வைத்தாள் செண்பகம். பின் வேதாளம் திரும்ப முருங்கைமரம் ஏறின கதையாகி விடப் போகிறதே என்ற கவலை அவளுக்கு.

"ஆனா. அதுக்கு முன்னாடி நான் அந்தப் பொண்ணை நிகிலாவா, ஷகிலாவா அந்தப் பொண்ணைப் பார்த்துப் பேசணும். நாளைக்கு சாயங்காலம் அவங்க ஆபிஸுக்கு போய் பாக்கறேன். ஆபீஸ் அட்ரஸ் எல்லாம் தரகர்கிட்டே வாங்கிக் கொடு. அவங்ககிட்டேயும் இது விஷயமா சொல்லிடச் சொல்லு."

மறுநாள் மாலை நிகிலா முன் இருந்தான் ஜெயேஷ். அவனின் ஆடம்பரமில்லாத அழகு ஒரு மரியாதையைக் கொடுத்தது.

பரஸ்பர அறிமுகத்திற்கு பின், நிகிலா மெல்லச் சொன்னாள்.

"நான் ஏன் இதுவரை கல்யாணம் வேணாம்னு சொல்லிட்டிருந்தேன்னு ஒரு கேள்வி உங்ககிட்ட இருக்கலாம். எங்க அம்மா படுத்த படுக்கையாய் இருக்காங்க.. அப்பாவோட வருமானமும் சொல்லிக்கிறபடி இல்லை. எங்க அம்மாவைப் பாத்துக்கறது ஒருபக்கம் என் சம்பளம் ஒரு பக்கம்னு குடும்பம் என்னை சார்ந்து இருக்கு."



"திருப்பதி சென்று திரும்பி வந்தால் திருப்பம் ஏற்படும் என்று கண்ணதாசன் சொன்னது சரிதான்"

"என்னாச்சு?"

"முன்னெல்லாம் என் மீது கோபம் வந்தால் என் மனைவி அடிப்பாள். இப்பல்லாம் திட்டுவதோடு சரி!"

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



இடைவெளி விட்டவள், ஜெயேஷின் முகம் எந்தவித மாறுதலும் இல்லாமல் இருக்கவே தொடர்ந்தாள்.

"அதனால, உங்ககிட்ட ஒரு சின்ன உதவி எதிர்பார்க்கறேன். என் கடைசி தங்கை கனிகா. படிப்பு முடிஞ்சதும் வேலைக்கு போயிடுவா. அவ தலை நிமிர்ற வரைக்கும் என் பாதி சம்பளம் என் வீட்டிற்கு கொடுக்கலாமீனு இருக்கேன். அதுல உங்களுக்கு அப்ஜெக்ஷன் ஏதும் இருக்கான்னு இப்பவே சொல்லிடறது பெட்டர். பின்னாடி என் முடிவால சங்கடம் வரக் கூடாது பாருங்க.."

"அதெல்லாம் ஒரு சங்கடமும் வராது. அதுல எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. என் சம்பளமே நம் குடும்பத்துக்கு போதும். என் குழந்தையை நல்லபடியா கவனிச்சுக்குங்க. அதுவே போதும்."

எந்த வித மறுப்பும் சொல்ல வழியில்லாத நிகிலா. கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்ள, முகூர்த்தத்திற்கு ஒரு சுபயோக சுபதினம் குறிக்கப்பட்டது.

## 11

திருமணம் இருவீட்டாரின் விருப்பத்தின் பேரில், எளிமையாக நடந்த முடிய அன்று முதலிரவு.

பிரணவ்வை செண்பகம் தூங்கப் பண்ண முதலிரவு அறைக்குள் நுழைந்த இருவருக்குமே பெரிய எதிர்பார்ப்புகள் ஏதும் இல்லை.

தங்களைப்பற்றி இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தபின் ஜெயேஷ்.

"சரி நிகிலா..! நீங்க தூங்குங்க.. குட்நைட்!"

என முடித்துக் கொண்டான் ஜெயேஷ். "அப்பாடா." என்றிருந்தது நிகிலாவிற்கு.

ஒன்றை கவனித்தாள் பத்து வார்த்தை பேசினால், எட்டு வார்த்தை அவன் மனைவி கவிதாவை பற்றியதாகவே இருந்தது. இன்னமும் அவன் நினைவுகளை விட்டு மீளமுடியாமல் இருக்கிறானென்றால் எத்தகைய வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

சராசரி பெண்ணாக இருபது வயதில் ஏராளமான கனவுகளோடு வந்திருந்தாளென்றால் அவன் நிலை ஏமாற்றத்தை தந்திருக்கக் கூடும். ஆனால் அவளோ திருமணத்திலேயே நாட்டமில்லாது இருந்ததால் அவன் நிலை பெரும் நிம்மதியை தருவது போலிருந்தது.

இன்று நிம்மதி அளிப்பது போல் தோன்றுவது ஒருநாள் ஏக்கமாய் மாறும் என்பதை அவள் நினைத்தும் பார்க்கவில்லை.

மறுநாள் காலை குளித்து ஈரதுண்டு கட்டிய தலையுடன், காபி எடுத்துக் கொண்டு போக முற்பட்ட போது, அவளை வழிமறித்தாற் போல் வந்து "இரு, ஜெயேஷுக்கு தானே..! நான் குடுத்துக்கறேன்... நீ போய் காபி குடி.. குடிச்சுட்டு சாமி கும்பிடு.." என்றவாறு பிடுங்காத குறையாக செண்

பகம் காபி டம்ளரை வாங்கிக் கொண்டு போக நிகிலா முகத்தில் குழப்ப ரேகை.

என்ன நடக்கிறதென்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் குறுகுறுக்க, ஜெயேஷின் அறையில் எட்டிப் பார்த்தாள்.

இறந்து போன கனிதாவிற்கு துரோகம் செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்வு மேலிட, அவளின் புகைப்படத்தை மடியில் வைத்துக்கொண்டு, அதை தடவிக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் முதன்முதலில் கனிதாவின் படத்தை பார்க்கிறாள் நிகிலா. நல்ல களையான முகம் மாநிறத்திற்கும் சற்று குறைவானநிறம் என்றாலும் மூக்கும் முழியுமாக இருந்தாள்.

நிகிலாவிற்கு கனிதாவின் இடத்தை தான் ஈடு செய்ய முடியுமா என்ற பயம் முதன்முறையாக வந்தது.

ஆக்க.. அடுத்து வந்த முகூர்த்தநாளில், அகிலா கல்யாணமும் தடபுட லாக நடந்து முடிந்தது. ஒரு சிலநாட்கள் இருந்துவிட்டு செண்பகம் ஊருக்கு கிளம்பவும் நிகிலா ஜெயேஷ் தனி வாழ்க்கை ஆரம்பமானது.

குழந்தை பிரணவ் நிகிலா காலையே சுற்றி சுற்றி வந்து ''ம்மா..'' என்று மழலையில் கொஞ்சியது. இயல்பாகவே குழந்தைகள் மீது கொள்ளை பிரியம் கொண்ட நிகிலாவிற்கும் பிரணவ்வை மிக பிடித்துப் போனதில் ஆச்சரியம் இல்லை.

பத்து நாட்கள் லீவு போட்டுவிட்டு அன்று நிகிலா அலுவலகம் சேரும் நாள். இந்த பத்து நாள் லீவில், அவள் குழந்தைக்கு கிரெச் (குழந்தைகள் காப்பகம்) பார்த்து ஏற்பாடு செய்திருந்ததால், சிரமமில்லாமல் டென்ச வின்றி குழந்தையை அங்கு விட்டுவிட்டு அலுவலகம் வந்தாள்.

மாலை குழந்தையுடன் வந்து, இரவு சமையலுக்கு வேண்டியதை யெல்லாம் முடித்தாகி விட்டது.

ஜெயேஷுக்கு என்ன பிடிக்கும் என்பதை அவளால் இதுவரை கண் டுபிடிக்க முடியவில்லை. எது போட்டாலும் குனிந்த தலை நிமிராமல் சாப்பிடுகிறான். எதும் வேண்டும் என கேட்பதில்லை.

'பிரணவ் சாப்பிட்டானா, தூங்கினானா'' போன்ற விசாரிப்புகளோடு சரி.. டி.வி.யை ஆன் செய்துவிட்டு குழந்தையுடன் உட்கார்ந்தாள் நிகிலா.

ஜெயேஷுக்கும், அவளை ஏதும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அவள் பிரணவ்வை ரொம்ப நன்றாக பார்த்துக் கொள்வதை அவன் தள்ளி நின்று கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.

இரண்டாம் தாரம் எப்படி வருவாளோ, குழந்தை அவளிடம் பாடுப டாமல் இருக்க வேண்டுமே என்றெல்லாம் கவலை பட்டவனுக்கு நிகிலா குழந்தையிடம் பாசமாக இருந்தது ஆறுதலாக இருந்தது.

ஜெயேஷ் இரவு ஒன்பது மணிக்கு கையில் புது செல்போனுடனும், மல்லிகை பூவோடும் நுழைந்தான்.

## 12

கைகளை முந்தானையில் துடைத்துக்கொண்டு சமையலறையில் இருந்து வந்தாள் நிகிலா. ஜெயேஷ் கையில் மல்லிகைப் பூவை கண்டதும் அவள் இதழ்க



ளில் அவளையறியாமல் புன்னகை அரும்பியது.

பரவாயில்லையே கல்யாணம் முடிந்து கிட்டதட்ட பத்து நாட்கள் போனபின்பாவது ஏதோ மனைவி என்றொருத்தி வீட்டில் இருக்கிறாளே, பூவாங்கி தர வேண்டும் என்று தோன்றியதே.

''சாப்பாடு வைக்கவா..'' என்று கேட்டுக்கொண்டே அவன் சாப்பி டுவதற்கான ஏற்பாடுகளை செய்ய உள்ளே போனாள்.

அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை அவள் மனம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. பூ வாங்கி வந்தானே.. ஏன் தன்னிடம் தரவில்லை. பெட்ரூமில் வைத்திருக்கிறானோ...?

தானும் சாப்பிட்டு முடித்து, வேலைகளையெல்லாம் முடித்து வெளியே வந்தவளுக்கு பெட்ரூமில் இருந்த கனிதா போட்டோவும், அதில் அப்போது தான் போட்டிருந்த புத்தம் புது மல்லிகை சரமும் முகத் தில் அறைவது போலிருந்தது.

ஓ...! இன்று வியாழக்கிழமை... அவள் இறந்த நாள்...என்றாலும், தனக்கு ஒரு முழம் பூவாது கொடுத்து விட்டு மிச்சத்தை போட்டோவிற்கு போட்டிருக்கலாமோ? என்று தோன்றியது.

''நிகிலா''... தயங்கி தயங்கி கூப்பிட்டான், ஜெயேஷ் பேர்சொல்லி கூப்பிடுவது இந்த பத்து நாட்களில் இது நான்காவது முறையோ... ஐந்தா வது முறையோ...

''என்ன' என்பது போல் நிமிர்ந்தாள்.

''இந்தா... இந்த செல்போனை உன் உபயோகத்துக்கு வைச் சுக்கோ...'' அவசரப்பட்டு சந்தோஷப்பட அவள் தயாராயில்லை... கூடவே குண்டைத் தூக்கி போடும் அவன் சுபாவம் அறிந்திருந்தாள், நிகிலா.

அவள் நினைத்தமாதிரியே கூடவே தொடர்ந்தான் ''பிரணவுக்கு ஏதா வது திடீர்னு முடியலைன்னா, உன்னை தொடர்பு கொள்ளவோ, அல்லது நீ எனக்கு தொடர்பு கொள்ளவோ யூஸ்புல்லா இருக்கும்'' ஆக, மகன் பேரில் உள்ள அக்கறையில்தான் வாங்கி குடுத்திருக்கிறான். மௌனமாய் தலையாட்டினாள்.

மறுநாள்.. ''என்னங்க...நிகிலா...! உங்களுக்கு டெலிபதி தெரியுமா... கரெக்டா நான் வரப்போறது தெரிந்து, வாசனை ஆளையே தூக்கற மாதிரி சமையல் செய்து அசத்திட்டிருக்கீங்க...'' குரலைக் கேட்டவுடனே தெரிந் தது கமலக்கண்ணனின் வருகை.

உள்ளேயிருந்து வெளிபட்டாள், நிகிலா கல்யாணத்தன்று மாப் பிள்ளை தோழன் போல், ஊர்பட்ட லூட்டி அடித்தவன். அவனுடைய கிண்டல் கேலியையோ, ரசிக்ககூடிய புது மாப்பிள்ளையாக ஜெயேஷ் இல்லை என்பது பற்றியெல்லாம் அவன் சிறிதும் கவலைப்படவில்லை.

அவன் இருந்த இடத்தில் சிரிப்பு மத்தாப்பாய் பொரிந்தது. ''வாடா...! சாப்பாட்டு ராமா.. இன்னிக்குத்தான் வழி தெரிஞ்சுதா ஜெயேஷ்.

''எங்களுக்கு வழியெல்லாம் நல்லா தெரியும். ஏதோ புதுசா கல்யா ணம் ஆனவங்க, கரடியாய் நுழைவானேன்னு இங்கிதம் தெரிஞ்சவனாக் கும் நான்... என்னடா புது மாப்பிள்ளை...சிஸ்டர் என்ன சொல்றாங்க...?

நிலா வெட்கி தலை குனிந்தாள்.

''நிலா... தரைய ரொம்ப சுரண்டாதீங்க... கால் விரல் தேஞ்சுராப் போகுது...'' அப்போதுதான், என்ன பேசுவதென்று தெரியாமல், கால் விரல்களால், தரையில் கோலம் போட்டுக் கொண்டிருப்பது மூளையில் உறைத்தது.

''நிலா முதல்ல இவனுக்கும் சேர்த்து தட்டு வைங்க... கொஞ்சம் உங்க சாப்பாட்டைப் போட்டு இவன் வாய் திறக்காம செய்யுங்க...'' -ஜெயேஷ்.

சொல்வது ஜெயேஷ் தானா... என்றிருந்தது அவனுக்கு. அவன் சமையலை இன்டல் செய்வது போலிருந்தாலும், இந்த அளவிற்காவது இன்டல் பண்ண அவனுக்கு வருமா...?

கமலக்கண்ணன் பதிலுக்கு விட்டு தருவானா...? ''உங்க சமையல் வாசனை பிடிச்சதுலயே என் பாதி பசி போயிடிச்சு... எதுக்கும் உங்களுக்கு எல்லாம் தனியா எடுத்து வச்சுட்டு மீதியை கொண்டு வாங்க... நீங்க இன்விக்கு பட்டினி தான்... அப்புறம் என்னை சொல்லக் கூடாது...''

சாப்பிட்ட வாறே சொன்னான், கமலக்கண்ணன் - ''ச்சே...! நான் இன்னக்கி உங்ககூட சண்டை போட வந்தேன்... சாப்பாடு போட்டு வாயை அடைச்சிட்டீங்களே! சரி போகட்டும்... இந்த விஷயத்தை எங்ககிட்டே விருந்து என் மறைச்சீங்க....?

எந்த விஷயத்தை நான் மறைத்தேன்...'' குழப்ப ரேகை நிலா முகத்தில்.

''நிலா தான் ''நிலா'' ங்கறதை ஏன் மறைச்சீங்க''

நல்லாயிருக்கே, நீங்க பேசறது...என்னமோ நீங்க இது பத்தி கேட்ட மாதிரியும் நான் இல்லைன்னு மறுத்த மாதிரியும் இல்ல சொல்றீங்க... நீங்க இப்பதான இது பத்தி கேக்கறீங்க...!

''இது பாயிண்ட் ...! டேய் ஜெயேஷ்...! ''நிலா'ன்னு பிரபலமான எல்லா பத்திரிகைகளிலும், கவிதை எழுதற கவிஞர் ஸாரி...கவிஞி பத்தி நிறைய தடவை உன்கிட்ட சொல்லியிருக்கேன்லடா...அது உன் வொய்ப் நிலாதான்னு உனக்கு கூட பொண்ணு பார்த்து குடுத்தாரே, அந்த தரகர் சொல்லி கேட்ட போது, எனக்கு தலைகால் புரியலடா... இவங்கள பார்த்து பேசணும்னு உடனே வந்துட்டேன்...''

''டேய்... கொஞ்சம் மூச்சு விட்டுக்கோடா... மூச்சு விடாம பேசற...என்ன நிலா... இவன் சொல்றது...?

''ஆமாங்க....! கவிதைன்னா என் உயிர்னு கூட சொல்லமாட்டேன்... என் சுவாசம்...!

''அடடா... இந்த வாரம் வண்ணகதிர்ல எழுதியிருக்கீங்களே''

''போர்வையை உதறி தள்ளு,
சோம்பலை, சுட்டு தள்ளு,
கலப்படமில்லாத காற்றுடன்
காத்திருக்கிறது, காலை,
வெளியில் வா - நீ,
வெளிச்சத்துக்கு வா...!



'' இதை படிச்சவுடன் சத்தியமா சொல்றேங்க... இப்பல்லாம் காலைல ஐந்தரைக்கு மேல தூங்கவே முடியறதுல்ல...''

எல்லோரும் சிரித்தனர்.

''அதெப்படிங்க கவிதைதான் நல்லா எழுதறீங்கன்னு பார்த்தால், சமையல் அதை விட நல்லாயிருக்கு...

அதுவரை கமலக்கண்ணனுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்த ஜெயேஷின் முகம் மாறியது ஏது... இவன் பாட்டுக்கு புகழ்ந்துக் கொண்டே போறானே...

இவனுக்கு எதுவுமே தெரியாது போலவும், அவன் வந்து இவள் திறமைகளை கண்டுபிடித்துச் சொல்வது போலவும்...

ஜெயேஷ் யோசனையிலிருந்த வேளையில், கமலக் கண்ணன் ஏதோ கூறவும், இருவருமாய் சிரித்தனர். ஜெயேசுக்கு எரிந்தது.

''டேய் சாப்பாட்டு ராமா... இதைவிட எவ்வளவோ நல்லா கவிதா சமைப்பா... அவள் இருந்தவரை, அதை ஆஹா, ஓஹோன்னு இப்ப இவகிட்ட ஐஸ் வைக்க ஆரம்பிச்சிட்டியா... டேய்...!

சட்டென நிலாவின் முகம் இருண்டது. கண்களில் எட்டிப்பார்க்கும் கண்ணீரை பிறர் பாராவண்ணம் சட்டென உள்ளே புகுந்து கொண்டாள்.

''டேய் ... ஜெயேஷ் ! என்னடா நீ..., இப்ப எதுக்கு இவங்களைகவிதா கூட கம்பேர் பண்ணின? கவிதாவ நீ மறக்க வேண்டாம்... நினைச்சுக்கிட்டே இரு... வேணாங்கலை அதுக்காக, இரண்டு பேரையும் கம்பேர் பண்ற தப்பை மட்டும் செய்யாதடா... பிரணவ்வ தன் குழந்தை மாதிரி நினைக்கிறாங்க... அந்த எண்ணத்தை மாத்திக்க வெச்சுடாதடா!

ஜெயேஷ் ஒன்றும் சொல்லவில்லை.

''பேசமாட்டாயா நீ?
ஏங்கிய மனம்
நினைக்கிறது இன்று!
நீ பேசாமலே
இருந்திருக்கலாம்;
வெப்பம் கக்கும்
வார்த்தைகள்
வெளிப்படாமலே
இருந்திருக்கும் -



''லைப்ரரியன் சார் இந்தப் புத்தகத்தில் வெறும் பெயர்கள் தான் இருக்கு கதையே இல்லையே?''

''நீதான் டெலிபோன் டைரக்டரியைத் தூக்கிட்டுப் போனியா?''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

உன் இதயத்தோடு...!
எழுதிக் கொண்டிருந்தன, நிகிலா விரல்கள்.

## 13

திரும்பி பார்ப்பதற்குள் பிரணவிற்கு ஒரு வயதாகி விட்டது. "அத்தே... நானும் உங்ககூட பிறந்தநாளுக்கு கூப்பிட வரவா...?" - நிகிலா. செண்பகம் இல்லம்மா...! நீ பிரணவ்வ பார்த்துகிட்டு கூடவே, மத்த ஏற்பாடுகளை கவனிச்சுக்கோ... நானும், ஜெயேஷும் கூப்பிடற வேலைய பார்த்துக்கறோம். ஒரு வயசு முடியறப்போ, குழந்தைங்க படுத்தும்னு சொல்வாங்க... பிறந்த நாள் முடியற வரைக்கும் கவனமா பார்த்துக்கணும்....

ஜெயேஷின் அப்பா பிறந்த நாளுக்கு முன் தினம் பேரனுக்கு பொம்மைகளுடன் வந்திறங்க, பிறந்த நாள் களைகட்ட ஆரம்பித்தது.

சிம்பிளாக செய்யலாம் என்று ஆரம்பித்ததுமே, கிட்டதட்ட இருபது பேர் வரை வந்து விட்டனர். ஐயர் மந்திரம் சொல்ல, பிரணவ்வை மடியில் இருத்திக் கொண்டு ஜெயேஷ் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான்.

நிகிலா ஆகாய வண்ண பட்டுபுடவையில் தேவதையாய் நின்றிருந்தாள். அடுத்து, ஜெயேஷுடன் மனையில் உட்கார வேண்டுமே... பூவை சரி செய்து முன்னாடி இழுத்து விட்டுக் கொண்டாள்.

"குழந்தையோட அம்மா எங்கே...? வந்து மனையில் உட்காரச் சொல்லுங்கோ... ஐயரின் குரல் கேட்டு, ஓரடி எடுத்து வைத்தவள் நின்றாள்.

"என்ன ஐயரே...தெரியாதா உங்களுக்கு என்று கூறிவிட்டு, ஐயரிடம் ஜெயேஷ் ஏதோ முணுமுணுக்க, அவர் அப்படியா...அப்பசரி...என்றவாறே அடுத்த மந்திரத்திற்கு போய்விட்டார்.

நெருப்பை வாரி முகத்தில் இறைத்தது போலிருந்தது நிகிலாவிற்கு. இதை கண்டுக்கொண்டிருந்த அவளுடைய தங்கைகள் அகிலா, கனிகாவிற்கும் அக்காவோட நிலமை கண்களில் கண்ணீரை வரவழைத்தது.


'என்ன மனிதன் இவன், இவன் குழந்தையை பார்த்து கொண்டு வீட்டோடு ஆயா போலிருக்க, அக்கா வேண்டும்.. மனையில் இவன் அருகில் மனைவியாய் அமர தகுதியில்லையோ...வேறென்ன கூறியிருப்பான் ஐயரிடம்...? பிரணவ்வின் அம்மா இவள் இல்லை. இவளை குழந்தையை பார்த்துக் கொள்ள கல்யாணம் செய்துக்கொண்டிக்கிறேன் என்று கூறியிருப்பானோ, என்னவோ...?

அகிலாவுக்கு அந்த காட்சியை கண்டதும், ஆத்திரமாய் வந்தது. ஒரு சில நிமிஷங்கள் அங்கேயே நின்றிருந்த நிகிலா பின், தனக்கு அங்கே எதும் வேலை இல்லை என்று தீர்மானித்தவளாய், தன் ரூமிற்குள் போனாள், கூடவே அகிலாவும், கனிகாவும்.

அவள் அவ்வாறு முகம் சிறுத்துப் போவதை இரண்டு கண்கள் பார்த்து கலங்கின. அவற்றிற்கு சொந்தமானவன்... ஆம் கமலக்கண்ணன் தான்.

அடுத்த சில நாட்களில் ஜெயேஷின் பெற்றோர் ஊருக்கு கிளம்பிப் போக, வீடு சகஜ நிலைக்கு வந்தது. ஆபீஸ் போக துவங்கிய இரண்டாம் நாள், திடீரென்று மாலை நான்கு மணிக்கு அவள் செல்லுக்கு போன். நம்





பரைப் பார்த்தாள், பிரணவ்வை விடும் கிரெச்சிலிருந்து போன்.

"பிரணவிற்கு காலைல நீங்க விட்டுட்டுப் போன, ஒரு ஒரு மணிநேரத்துக்கெல்லாம், உடம்பு சுட ஆரம்பிச்சது... நான் க்ரோசின் ஸிரப் கொடுத்து தூங்க பண்ணினேன்... இப்போ பாத்தா உடம்பு நல்லாவே சுடுது..எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல...நீங்க வரீங்களா...?

"இதோ இப்பவே புறப்பட்டு வர்றேன்.. பிரணவ் என்ன பண்ணிட்டிருக்கான்... விளையாடுறானா...?

"இல்லைங்க... சோர்ந்து போய் படுத்திருக்கான்... எப்பவும் துறுதுறுன்னு இருக்கற பையன் சோர்ந்து போயிருக்கவும், பக்குன்னு இருக்கு... அதான் போன் பண்ணினேன்...

'கிரிஜா... நீங்க அவனை பாத்துக்குங்க நான் இன்னும் அரை மணி நேரத்துல வந்துடறேன்''.

பர்மிஷன் சொல்லிவிட்டு கிளம்பியவள், ஜெயேஷை தொடர்பு கொண்டு பார்த்தாள். ரிங் போனாலும், அவன் எடுத்துப் பேசவில்லை.

ஒருவேளை வண்டியில் எங்கேனும் போய் கொண்டிருக்கிறாரோ என்னவோ?

சரியாக அரை மணி நேரத்தில் கிரெச்சில் இருந்தாள். நல்ல ஜுரம். எப்படியும் நூறு டிகிரிக்கு மேல் இருக்க வேண்டும். கிரிஜா எப்போது குரோசின் கொடுத்தாள் என்று கேட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்தாள். பாலை காய்ச்சி, அதனுடன் கொஞ்சம் மில்க் பிரட்டையும் பிரணவ்வை சாப்பிட வைத்து விட்டு போனை எடுத்து டயல் செய்தாள்.

## 14

"விநாயகா சைல்ட் கேர் ஹாஸ்பிடல்.''

''ஹலோ...மேடம்...! அப்பாயிண்ட்மெண்ட் ஒன்று பிக்ஸ் பண்ணனும்...''

''பேர் என்ன சொல்லுங்க...

''பிரணவ்...ஒரு வயசு...''

''மேடம்...உங்க டோக்கன் அறுபத்தி ஏழு... இன்னும் அரைமணி நேரத்தில் நீங்க இங்க இருக்கணும்...''

குழந்தையின் மெடிக்கல் பையை எடுத்துக் கொண்டு குழந்தையை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு கிளம்ப எத்தனிக்கும் போது, மறுபடி போன்.ஒரு வேளை ஜெயேஷாக இருக்குமோ...?

ஆனால், பேசியது செண்பகம்.

''நான் நிகிலா பேசுறேன் அத்தே...அவர் இன்னும் வரலை''

''அவன் வரும் போது வரட்டும் நான் உங்கிட்ட பேசலாம்னு தான் போன் பண்ணினேன்...''

'மாமா எப்படி இருக்கார், அத்தே...''

''அவருக்கென்ன...வயலுக்கு போனா வேற நினைப்பே இருக்காது... ஆமா, ஜெயேஷ், உன்கிட்ட பாசமா இருக்கான் தானே?

''......''கவலைப்படாதேம்மா.. போக போக சரியாயிடும்... பேரன் எப்படி இருக்கான்.

''பிரணவுக்கு நல்ல ஜுரம் அத்தே... இவருக்கும் போன் பண்ணினா,



இவர் எடுக்கவேயில்லை...அதான் நான் பிரணவ்வை தூக்கிட்டு டாக்டர் கிட்ட போயிட்டிருக்கேன்...

''குழந்தைய பாக்காம எங்கே போயிட்டான்...?

ஆமா... இன்னிக்கு ஏப்ரல் 30 ம் தேதியில்லை யா...அதான் அந்த அனாதை குழந்தைகளை பாக்க போயிருப்பான்...''

'எந்த அனாதை குழந்தைகள்' - வியப்பில் நிமிர்ந்தது.. நிகிலாவின் முகம்.

'என்ன அத்தே சொல்றீங்க... ஒண்ணும் புரியலையே...'

''அதாம்மா...இன்னிக்கு ஏப்ரல் 30, கவிதாவோட பிறந்தநாள்.. இன்னிக்கு அவன் தாம்பரத்திற்கு பக்கத்துல வண்டலூர்ல, 'நேசக்கரங்கள்' அனாதை காப்பகம் இருக்குல்ல அங்க இருக்குற குழந்தைகளுக்கு, சாப்பாடு போட்டு, ஸ்வீட் பாக்ஸ் வாங்கி கொடுப்பான்.. அங்கா போயிருப்பான்... பாவி பொண்ணு கவிதா.. அவளுக்குதான் கொடுத்து வைக்கல.. நான் பாட்டுக்கு பேசிட்டிருக்கேன் பாரு... நீ குழந்தையை கூட்டிட்டு ஹாஸ்பிடல் போம்மா.. நான் அப்புறம் பேசுறேன்...!

ஹாஸ்பிடலில் சொன்ன நேரத்திற்கு பிரணவ்வுடன் நிகிலா அங்கே இருந்தாலும், ''ம்மா...ம்மா..'' என்று புடவையை பிடித்திழுத்து தூக்கிக் கொள்ள சொல்லும் பிரணவ்.

இவள் அசந்த நேரம் ஏதாவது குறும்பு செய்து விட்டு, இவளிடம் மாட்டிக் கொள்ளும் போது, அசடு வழிய சிரித்து மயக்கும் பிரணவ்,

நெய்யும், பருப்புமாக பிசைந்து ஊட்ட போராடும் போது, வாயே திறக்காமல் அழும்பு பண்ணிவிட்டு, வெறுத்துப் போய், அவள் அதை கொட்டிவிட்டு தான் சாப்பிட உட்காரும் போது, ''ம்மா...எனக்கு ...'' என்று வாய் காட்டும் பிரணவ்,

இன்று சோர்ந்துபோய், கண்கள் செருக இருந்தது மனதை என்னவோ பண்ணியது.

ஹாஸ்பிடலில் வெயிட் பண்ணும் போது, மறுபடி போன்...நம்பர் பார்த்தாள், ஜெயேஷ்.

''நிகிலா...! செல்லுல கூப்பிட்டயா..நான் முக்கியமா ஒரு இடத்துல இருந்தேன்... இப்பதான் மிஸ்டுகால்ல பார்த்தேன்...என்னம்மா, என்ன விஷயம்...?

சுருக்கமாக சொன்னாள், நிகிலா.

''கவலைப்படாத, செல்வ வினாயகம் ராசியான டாக்டர் சரியாயிடும். டாக்டர்கிட்ட காண்பிச்சுட்டு, அங்கேயே இருக்கற மெடிக்கல் ஷாப்புலயே மருந்துகள் வாங்கிக்கோ... சில சமயம் அவர் எழுதித்தரது வெளில எங்கேயும் கிடைக்காது... ஆட்டோ பிடிச்சு போயிடு... நான் ஒரு ஒன்பது மணிக்கெல்லாம் வந்துடறேன்...''

செல்லை ஆப் செய்யவும், இவள் பெயர் அழைக்கப்படவும் சரியாக இருந்தது. வீடு வந்து சேர்ந்தப்போது மணி ஏழு. குழந்தைக்கு இட்லி கொடுத்தாள். மருந்து, கொடுக்க, நிமிஷத்தில் தூங்க ஆரம்பித்தான், குழந்தை.

இரவு சமையலை முடித்து சாப்பிட்டு, குழந்தை பக்கத்துலேயே

இருந்தாள்.

''நல்ல ஜுரம் போலிருக்கு... ஊசி போட்டாரா டாக்டர்...'', ஜெயேஷ்.

''ஆமாம்... நாளைக்கு இரெக்கல விட வேண்டாம்.. நான் லீவ் போட்டுட்டு பாத்துக்கறேன்... சாப்பிட வாங்க!

''நீ சாப்பிட்டாச்சா...''

''உம்...'' முகத்தை சுருக்கியவாறே நிமிர்ந்தான், ஜெயேஷ்.

''எனக்கு சாப்பாடு வேண்டாம், பிரணவ்வ இப்படி பார்த்துட்டு எனக்கு சாப்பாடே இறங்காது, நீ வேணும்னா படுத்துக்கோ....''

அவனுடைய செய்கை நிகிலாவை எரிச்சலூட்டியது.

என்னவோ, பிரணவிற்கு உடம்பு சரியில்லாத போது, இவளால் எப்படி சாப்பிட முடிந்தது...? இவளுக்கு எப்படி சாப்பாடு இறங்கியது...? போலிருந்தது அவன் பார்வை.

சாயங்காலத்திலேருந்து, பிரணவ்வை தூக்கிக்கொண்டு நாயாய் அலைந்து, டாக்டரிடம் காண்பித்து, மருந்து வாங்கிக் கொடுத்து, செய்ததெல்லாம் அவள்!

இவள் ஒரு வேளை சாப்பிடாவிட்டால், அதில்தான் குழந்தைக்கு சரியாகப் போகிறதா...?

இன்னமும் கூட, தான் எங்கே போன, என்னவென்று நினைக்கிறானோ ஒன்றும் கூறவில்லை.

இவன் குழந்தை இங்கு தலை செருகி ஜுரத்தில் விழுந்திருக்கும் போது, அனாதை குழந்தைகளுக்கு, சாப்பாடு வழங்கப் போயிருந்தாளா, நல்ல வேடிக்கை!

ஏன் அதை தன்னிடம் சொல்லிவிட்டு சென்றிருந்தாலும், தான் என்ன கூறியிருக்கப் போகிறோம்?

என்ன சொல்லியிருக்க முடியும்!

அத்தை அடிக்கடி சொல்வது போலெல்லாம் இவன் மாறப்போவதில்லை. தான்தான் மாற்றிக் கொள்ள வேண்டும்.

## 15

முன்தினம் அவள் வருத்தப்பட்டது தவறோ என்றெண்ணும் படி இருந்தது, மறுநாள் ஜெயேஷ், நடந்து கொண்ட விதம்.

ஆபீசுக்கு லீவு சொல்லிவிட்டு, குழந்தைதய பார்த்துக் கொண்டு, வீட்டிலேயே இருக்கலாம் என்று ஆர அமர எழுந்து, நிதானமாக வேலையை கவனித்துக் கொண்டிருந்தவளிடம் வந்தான், ஜெயேஷ்.

''இன்னிக்கு நான் லீவு சொல்லிவிட்டு பிரணவ் கூட இருக்கேன் நிகிலா... நீ..போ...''

''இல்ல..நான்...''

''இல்ல... நீ...போ...இன்னிக்கு என்ன ஒண்ணாம் தேதி, சாயங்காலம் உன் அம்மா வீட்டுக்கு போய்ட்டு, நீ விருப்பப்பட்ட மாதிரி, பாதி சம்பளமோ, அல்லது எவ்வளவு தேவையோ... பார்த்து குடுத்துட்டு வா...''

பதில் சொல்லக்கூட தோன்றாமல், வியப்பில் வீழ்ந்தாள், நிகிலா... எது? இவனுக்கு கவிதா தவிர வேறு எதுவுமே நினைவில் இருக்காது என்று நினைத்திருந்தாள், கல்யாணத்திற்கு முன், தான் சொன்னதை நினைவில் வைத்து, முதலில் கைப் பணத்தை குடுத்து விட்டு வா என்கிறானோ?

என்ன இருந்தாலும், அவனுடன் ஒரே வீட்டில் ஒரு மாதகாலமாய் வளைய வருகிறாள், அவள் மீது அக்கறையோ பாசமோ இல்லாமலா போகும்.

''உன் அம்மாக்கு கூட, அவங்க விருப்பபட்டா, வீட்டோட பாத்துகற மாதிரி நர்ஸ் ஏதாவது ஏற்பாடு பண்ணு அந்த செலவைக்கூட நாம கொடுத்துடலாம்... நான் உன் அம்மா, அப்பாவை விசாத்ததாகச் சொல்லு...' என்றவாறு நிறுத்தியவன், பின் மெல்லியக்குரலில் சொன்னான்.

''நீ சொன்ன மாதிரியே நடந்துக்கற ...என்னைவிட அக்கறையா, பிரணவ்வை பாத்துக்கற... நானும் சொன்ன மாதிரி நடந்துக்கணுமில்லையா...?

இவன் அக்கறையை என்னவென்று எடுத்துக் கொள்வது என புரியாமல் நின்றாள், நிகிலா.

நிகிலாவை கண்டவுடன் வந்து சூழ்ந்துக் கொண்டனர், அகிலாவும், அவள் அப்பாவும். அம்மாவிடம் சென்று அவள் தலையை மெல்ல வருடிக் குடுத்தாள்.

கோமீஸ்வரன் முதலில் நிகிலாவிடம் பணம் வாங்க மறுத்தார். பின் சூழ்நிலையை கருதி, மனைவியின் மருந்துக்கும் செலவு நிறைய ஆவதை எண்ணி வாங்கிக் கொண்டார்.

மேலும், நிகிலாவே முடிவெடுத்து தரவில்லையே...! மாப்பிள்ளையின் சம்மதத்தின் பேரில், அவர் சொல்லி அல்லவா தருகிறாள்... நல்ல குணம் மாப்பிள்ளைக்கு...!

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பின், நிகிலா கேட்டாள், ''ஏதுப்பா... புதுசா ட்ரான்ஸிஸ்டர்...எப்எம்னு அமர்க்களப்படுத்துறீங்க...?

''என்னம்மா, தெரியாத மாதிரி கேக்கற...? அதான் அன்னிக்கு மாப்



''நகையெல்லாந் தான் கொள்ளை அடிச்சிட்டியே... திரும்பவும் என்ன தேடுற?''

''என்னை என்ன இளிச்சவாயன்னு நினைச்சிட்டீங்களா... மரியாதையா கியாரண்டிகார்டு' எங்கே இருக்குன்னு சொல்லிடுங்க''.

-ச.ஆ.கேசவன்,
இனாம்மணியாச்சி.

பிள்ளை வந்தாரே... அவ்விக்கு வெறும் கையோட வரவேணாம்னு எனக்கு இதை வாங்கினாராம்... உங்களுக்கு பொழுது போக உதவியாயிருக்கும்னு சொல்லி குடுத்தாரேம்மா...ஆமா...உனக்கு ஏதும் தெரியாதா...?

அவன் என்னன்னு சொல்வான்? ஜெயேஷ் இங்கு வந்திருந்ததே தெரியாது... என்றா சொல்வான்?

ஆனாலும், அவன் அதை சொல்லவில்லையே, என்ற எண்ணத்தை விட, சொல்லாவிட்டால் போகிறான்... நல்ல எண்ணம் மனதிலிருக்கிறதே...!

சந்தோஷமாக வீடு திரும்பியவளின் சந்தோஷம் வெகுநேரம் உயிரோடிருக்கவில்லை.

"நீங்க நடுவில ஒரு நாள் வந்து பாத்துட்டு போனதா, அப்பா சொன்னார்..."

"ஆமா...நிகிலா...என் அம்மா வந்திருக்கும் போது நீ அவங்கள எவ்வளவு நல்லா, மரியாதையா கவனிச்சுக்கிற நானும், பதிலுக்கு ஏதாவது பண்ணனும்னு தோணிச்சு, தட்ஸ் ஆல்..."

இந்த வீட்டில், என் குழந்தையிடம், என் அம்மாவிடம் நீ எப்படி நடந்துக் கொள்கிறாயோ, அதன்படிதான் நானும் உன்னிடம், உன் வீட்டாரிடம் நடந்துக் கொள்வேன் என்று சொல்லாமல் சொல்கிறானா..?

நாட்குறிப்பை எடுத்து மனதின் பாரத்தை வார்த்தைகளாக்கினாள்;

"நீ, பாம்பா, பழுதா-
நீ, வரமா, சாபமா-
நீ, தவமா, தண்டனையா-
நீ, புதிரா, விடையா-
புரியாவிட்டாலும் கூட,
சுவாரசியமானதாய் தான்
உள்ளது-
உன்னுடனான வாழ்க்கை!!"
- 'நிலா'

## 16

"மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆப் தி டே"... என் சிறிய அன்பளிப்பு..." -குரல் கேட்டு உள்ளேயிருந்து வந்தான், ஜெயேஷ்.

கையில், சிறு அன்பளிப்பு பொருளுடன், நிகிலா நின்றிருக்க, வந்திருந்தது கமலக்கண்ணன்.

"வாடா, கண்ணா.." "ச்சேச்சே... இன்று நிகிலாவிற்கு பிறந்த நாளா... தெரியாமல் போயிற்றே...அடடா...

அவனுக்கு தெரியாமலில்லை...தெரிந்துக் கொள்ளும் ஆர்வம் இருந்திருந்தால், அவளுடைய ஜாதகம் போட்டோவுடன் வந்திருந்ததல்லவா... பார்த்து தெரிந்துக் கொண்டிருக்கலாமே...!

"உங்களுக்கு எப்படி...? "திடீரென வந்த வாழ்த்துக்களால், வார்த்தை தடுமாற கேட்டாள் நிகிலா...?



"டொட்டடைங்... இதோ..பாத்தீங்களா... இதை வைத்து கண்டுபிடிச்சுட்டேனே... கையில் இருந்த வாரமலரை காண்பித்தான்.

'வானவில்' - இந்த பத்திரிகைக்கு தான் அவள் வாரந்தோறும் தவறாமல் கவிதை எழுதிவருபவள். அதில், வாராவாரம் அந்த வாரம் பிறந்த பிரபலங்களின் பிறந்த நாளை குறிப்பிட்டு,

வாழ்த்து செய்தி போடுவது வழக்கம். அப்பத்திரிகையின் ஆஸ்தான கவிஞர்களில் ஒருவராக அவள் இருப்பதால், வருடந்தோறும் இவள் பிறந்த நாளும் குறிப்பிடப்படுவதுண்டு. இதை பார்த்து விட்டு வாழ்த்த வந்திருக்கிறான்...

கூடவே, ஜெயேஷ் சுனிதாவின் பிறந்த நாளை இன்னமும் கொண்டாடிக் கொண்டிருப்பது ஞாபகத்தில் வந்துப்போனது. மனதை தட்டி வைத்தாள்.... வேண்டாம்...அப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. அவனுக்காக அக்கறை வந்து மாறும் போது மாறட்டும்.

அவள் செய்திருந்த கேசரியை நன்றாக இருக்கிறதென்று ரசித்து சாப்பிட்டான், கமலக்கண்ணன்.

"சரிடா... நான் கிளம்பறேன், கிளம்பறேங்க, நிகிலா..." - கமலக்கண்ணன் கிளம்பி போனதும், ஜெயேஷ் மெல்ல அவள் அருகில் வந்தான்.

மெல்ல அவள் கைகளை எடுத்து தன் கரங்களுக்குள் வைத்து அழுத்தி, வாழ்த்து சொன்னான். கூடவே, பிரணவ்வையும், வாழ்த்து சொல்ல வைத்தான்.

குழந்தை தன் மழலை குரலில் கூற, இந்த மகிழ்ச்சி நிலைத்திருந்தால், போதும் என்று நினைத்தாள், நிகிலா.

மாலை அலுவலகம் முடிந்து, நேரே துணி கடைக்குள் வந்துவிட்டான், ஜெயேஷ். நிகிலாவிற்கு இந்த கலர் பிடிக்குமா...? அந்த கலர் எடுப்பாயிருக்குமா? என்று ஒவ்வொன்றாக தள்ளி,

பின் ஆகாய வண்ணத்தில், பிங்க் நிறப்பூக்கள் சிதறியிருந்த ஒரு சேலையை வாங்கினான்.

கண்டிப்பாக, நிகிலா அதை எதிர்பார்த்திருக்க போவதில்லை. அவள் ரியாக்ஷன் என்ன மாதிரியிருக்க முடியும் என்று யூகிக்க முயன்றான். வெட்கப்படுவாளா...? சந்தோஷத்தில் முகம் சிவக்குமா...?

இதுமாதிரியெல்லாம் கற்பனை செய்து பார்ப்பதே, ஜெயேஷுக்கு புது அனுபவமாக இருந்தது.

இதே, சுனிதாவென்றால், மிகவும் விலையுயர்ந்த சுடிதாரை கையில் வைத்துக் கொண்டு, "இது நல்லாயிருக்கிறதா ஜெய்..." என்பாள்.

அதை வாங்கவேண்டுமென்ற ஆர்வம் கொப்பளிக்கும் முகத்தோடு கேட்பவளிடம் வேறென்ன சொல்வான் ... சரி வாங்கிக் கொள்" என்பதை தவிர.

கூடவே, மல்லிகை பூ வாங்கிக் கொண்டான். தன்னை தவறாக நினைப்பாளோ என்று கூட தோன்றியது. இதில் என்ன இருக்கிறது? இன்னும் ஷாப்பிங் போனவன், நிகிலாவை எங்கும் இதுவரை அழைத்துச் சென்றதில்லை, ஒரு புடவைக் கட வாங்கி தந்ததில்லை என்பது உறுத்தலாய் பட்டது.

ஆசையாய் வந்தவனை வரவேற்றது, வாசலில் தொங்கிய பூட்டு.

## 17

'ச்சே...எங்கே போயிருப்பாள், நிகிலா...அவனிடம் சொல்லாமல் எங்கும் போகமாட்டாளே...அதுவும் பிரணவ்வை தூக்கிக் கொண்டு...?

தன்னிடம் இருந்த சாவியால் திறந்து உள்ளே நுழைய முயன்ற போது, டக்கென கதவைத் திறந்ததில், கால் கட்டைவிரலில் கதவு நன்றாக பட, துடித்து விட்டான், ஜெயேஷ்.

ஏற்கனவே நிகிலா வீட்டில் இல்லாதது, காலில் பட்டது எல்லாம் சேர்ந்து, அவனை நிலை தடுமாற வைத்து, யோசிக்க விடாமல் செய்தது. காரணமில்லாத கோபம் வர, கையிலிருந்த கார்டுடன், பீரோவில் வைத்தான்...ச்சே...ஆசையாய் வாங்கி வந்திருக்கவே கூடாது...!

காலை பிடித்துக் கொண்டு, வலியினால் கண்களை மூடியவாறே எவ்வளவு நேரம்தான் அமர்ந்திருந்தானோ...?

''அப்பா....'' -கால்களை கட்டிக் கொண்டது, குழந்தை பிரணவ்.

''அப்பா...! நான் அம்மாவோட கோவிலுக்கு போனேனே...!'' மழலையில் கொஞ்சியது... குழந்தைதான் என்றாலும், ஏற்கனவே பட்ட காலிலேயே, குழந்தை கை வைக்க, தாளமாட்டாத வலியில் 'உஸ்...' என்றான்.

''அடடா...! காலில் என்ன, இரத்தம் கன்றிப்போயிருக்கு...கதவுல கால் நசுக்கிண்டாதான் இப்படி ஆகும். இருங்க... போய் கொஞ்சம் எண்ணெய் காய்ச்சி வந்து தடவறேன்...'' சொல்லியவாறே, எண்ணெய் எடுத்து வந்து தடவினாள், நிகிலா.

வலி மட்டுப்பட்டது. மன்னிப்பு கோரும் தொனியில் ''கோயிலுக்கு போயிருந்தேன்... நீங்க வருவதற்குள் வந்து விடலாம் என்று கோயிலில் கூட்டம், அதான்...'' ''காபி சாப்பிட்டீங்களா...?''

''ஹூம்... முதல்ல காபி கொடு. வாசற்கதவை திறக்கும் போதே, காலில் பட்டு விட்டது. ஏதோ டென்சன்...

மௌனமாக உள்ளே போனாள். அவனுக்கு தெரியாதா, என்ன டென்ஷனென்று? வீட்டிற்கு வரும் இவள் இல்லையென்பது கடுப்பாகியிருக்கும்! இருந்திருந்தால், மட்டுமென்ன? ''கோயிலுக்கு போகலாம், வா...



''கதையில் உயிரோட்டமே இல்லையே..?''

''இது பேய்க்கதை சார்... இதில் எப்படி உயிர் இருக்குமாம்?''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



இன்று உன் பிறந்த நாளாயிற்றே...'' என்று கூட்டிக் கொண்டு போகப் போகிறானா என்ன அட்லீஸ்ட் ஒரு முழம் பூ?

அவனையறியாமல், அவன் பார்வை அன்றலர்ந்த ஜாதிப்பூ போட்டு வைத்த கனிதாவின் போட்டோவிற்கு சென்றது. அன்று வியாழக்கிழமை என்பது, நன்றாகவே நினைவில் நின்றது. அவள் செய்வாள், கமலக்கண்ணன் கூறியிருந்தானே... ஒரு காலத்தில், இவன் கல்யாணத்திற்கு முன்பு, கனிதாவின் செருப்பு, அவள் உபயோகித்த கைப்பை, எல்லாம் வைத்து பூஜித்திருந்தானாமே... பின் ஏன் கல்யாண ஆசையெல்லாம்...

சலிப்புடன் யோசித்தவாறே, காபியை கையில் கொடுத்துவிட்டு, கையில் வாரப்பத்திரிக்கையுடன் தன் அறைக்குள் நுழைந்தாள். கூடவே பிரணவ் வந்தவுடன் ''அடடே.... என்னம்மா... திடீர்னு? வரப்போறதா ஒரு போன் கூட பண்ணலையே...?'' -பாதி ஷேவிங்கில் ஆட்டோ சத்தம் கேட்டு எட்டிப்பார்த்த ஜெயேஷ், கேட்டான்.

''என்னடா... எம் புள்ளை வீட்டுக்கு போன் பண்ணிட்டு தான் வரணுமா? ஞாயிற்று கிழமையாச்சே... வீட்டுலதான இருப்பேன்னு தான் சொல்லல..

எங்கே, என் பேரப்புள்ளை? ஆட்டோவிற்கு பணம் கொடுத்துவிட்டு, ஜெயேஷ் ஏற்கனவே சாமான்களோடு உள்ளே போயிருக்க பின்னாலேயே நடந்தாள், செண்பகம்.

நலம் விசாரித்தான பின், மெதுவாக கூறினாள், ''உங்கப்பாவோட பெரியப்பா பேரனுக்கு கல்யாணம் தெரியுமில்லையா... அதுக்கு அப்பாவும் கோயமுத்தூர் போயிட்டாரு... நான் ஒரே ஆளா வீட்டுல கொட்ட கொட்ட உட்கார்ந்து என்ன பண்ண? சரி, உங்களையெல்லாம் பார்த்துட்டு, இரண்டு நாள் இருந்துட்டு போலாம்னு வந்தேன்...

மாலை, நிகிலா, செண்பகம் இருவருமாக, பிரணவ்வை தூக்கிக் கொண்டு, நிகிலாவின் வீட்டிற்கு போய், அவள் அம்மாவை பார்த்துவிட்டு வந்தனர்.

உடல் நிலையில் எந்த மாற்றமும் சாத்தியமில்லை என்றாலும், தன் இரண்டு பெண்களும் கல்யாணமாகி நிறைவுடன் வாழ்கிறார்கள், என்ற நிம்மதி முகத்தில் தெரிந்தது, நிகிலாவின் அம்மாவிற்கு.

மருமகளின் சமையலை புகழ்ந்துக் கொண்டே, நிறைவாக செண்பகம் சாப்பிட, ஜாடைக்கண்ணால் ஜெயேஷை பார்த்தாள், நிகிலா. அன்று மட்டம் தட்ட குறை சொன்னவனல்லவா, அவன்?

டி.வி.பார்த்துக் கொண்டே, எப்படியோ இரவு பத்து மணி வரை ஓட்டி விட்டாள், நிகிலா. பிரணவ் தூங்கி விட, செண்பகம் நிகிலாவிடம் கூறினாள்...

''சீக்கிரம் போய் படும்மா... நாளை எழுந்து ஆபீஸ் போகணுமே... ஜெயேஷ் வேற உனக்காக காத்துண்டிருப்பான்..!''

## 18

ஷாம்பு போட்டு குளித்து, காய வைத்த தலைமுடியை அப்படியே விரித்துப் போட்டு, உச்சியில் ஒரு

டெலிப் போட்டு விட்டு, அதில் ஜாதிமல்லியை படர விட்டவாறே, உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தாள், நிகிலா. காட்டன் புடவை உடுத்தி, அவள் தேவதை போன்றதொரு தோற்றத்தில் இருந்தாள்.

தன்னுடைய அறையில் கண் விழித்த பிறகும், சோம்பலாய் படுத்திருந்த ஜெயேஷுக்கு அவளை அப்படியே பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது.

அவனுக்கும், காட்டன் சாரியில் கனிதாவை பார்க்க மிகவும் பிடிக்கும். அவளோ, சுடிதாரை தவிர வேறெதுவும் போட விரும்பியதில்லை, அதேபோல், தழைய, தழைய பின்னி, ஜாதிமல்லி வைத்து அவளை அழகாக பார்க்க, ஜெயேஷ் ஆசைப்பட, அவளோ, ''யார் முடியை வளர்த்துக் கொண்டு, அதை பராமரிக்க, நேரத்தை வேஸ்ட் பண்ணி அவதிப் படுவது?'' என்றவாறே, குட்டையாக பாப் வெட்டிக் கொண்டு வந்து விட்டாள்.

தான் கனிதா விஷயத்தில், ஆசைப்பட்ட மாதிரியே நிகிலா இருக்க, அவளை பார்த்தவாறே இருக்கலாம் போலிருந்தது, அவனுக்கு.

அன்று முழுவதும் அவனையறியாமல் நிகிலாவை பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான், ஜெயேஷ். மாலை,

''நிகிலா! வாயேன் ஏதாவது சினிமாவுக்கு போயிட்டு வரலாம்...'வெயில்' போலாமா...?''

''சரி, ஆனா, நைட்டுக்கு எதும் பண்ணலயே, ஏதாவது சமைச்சு வெச்சுட்டு வந்துடறேனே?''

''அப்ப ஒன்னு செய்யலாம், மூவிக்கு போயிட்டு, அப்படியே 'சரவணபவன்'ல, டின்னர் முடிச்சுட்டு வந்துடலாம், சரியா...''

சம்மதித்தவள், பிரணவ்விற்கு மட்டும், அவன் ஹோட்டலில் சரியாக சாப்பிட மாட்டான், என்பதால், ''இட்லி எடுத்துக் கொள்ளட்டுமா...'' என்றாள்.

''இல்ல ... பிரணவ்வ, கிரெச்சுல விட்டுட்டு போயிடலாமே... அவனை சினிமா முடியற வரைக்கும் ஒரே இடத்துல வைச்சிருக்கறது கஷ்டம்...''

நிகிலா மேலிருந்த கிறக்கம் அவனை அப்படி பேச வைத்திருந்தது. அருகருகே உட்கார்ந்து சினிமா பார்த்தது, ஒருவரோடொருவர் சேர்ந்து உணவருந்தியது என, ஜெயேஷ் அன்று மாறுபட்டு தெரிந்தான், நிகிலாவிற்கு.

ஆச்சு... எல்லாம் முடிந்து, பிரணவ்வை கூப்பிட கிரெச்சுக்கு போன போது, அவன் தூங்கியே போயிருந்தான். தூங்கிய குழந்தையை மடியில் வைத்தவாறு, பைக்கில் உட்கார கொஞ்சம் சிரமபட்டாள், நிகிலா.

''என்னை பிடிச்சுக்கோயேன், ஏன் சிரமப்படறே...?'' மெல்ல அவன் தோளில் கைவைத்து அழுத்தி பிடித்துக் கொண்டாள். அவளுக்கும் அந்த ஸ்பரிசம் என்னவோ போலிருந்தது.

இரவு. ''நிகிலா இப்படி வந்து உட்காரேன்... ஆமா, கவிதைன்னா ரொம்ப இஷ்டம்ன்னயே... ரொம்பநாளா எழுதிட்டிருக்கியா...? கமலக்கண்ணன் தான் உன்னுடைய கவிதைகளை, பத்தி, திறமைகளை பத்தி புகழ்ந்து தள்ளுறானே... இப்பதான் எனக்கும் அதையெல்லாம் படிக்க



ஆரம்பிச்சிருப்பிறு ஒரு ஆசை வந்திருக்கு...''

சொன்னவாறே, அவளை பக்கத்தில் அமரச் செய்து, தேவையில்லாமல், முன்முடியை ஒதுக்கி விட்டான். முகவாயை நிமிர்த்தி நெற்றியில் மெல்ல முத்தமிட்டான், ஜெயேஷ்.

அவளுக்குள்ளும் உணர்ச்சிகள் எரிய ஆரம்பித்தன. அவள் பருவம் அதற்கு துணை போனது. அப்படியே நிகிலாவை தன்னுடையவளாக்கிக் கொள்ள, புது அனுபவத்தில் நெகிழ்ந்து போகிறாள், நிகிலா. உணர்ச்சிகள் உடலை ஆளத்துவங்க, அதுவரை தாலாட்டு கேட்டு நிகிலா மடியில் அவள் குழந்தையாய் தூங்கிய பிரணவ், சீக்கிரம் தூங்கச் சொல்லி அடி வாங்குகிறான். அடுத்த பத்தாம் மாதம் அழகான பெண் குழந்தைக்கு தாயாகிறாள், நிகிலா. வளர, வளர, ''தங்கைக்கு விட்டு கொடேண்டா'' என சொல்லி சொல்லி ப்ரணவ், விட்டு கொடுத்து விட்டு கொடுத்து வெகுளியாய் நிற்க அவன் தங்கையோ, அவனை அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறாள்.

ஒரு சின்ன விஷயம் தான். இருவரும் சேர்ந்து விளையாடுகிறேன் பேர் வழி என, காமிராவை உடைத்துவிட, பட்டென அடி விழுகிறது, பெண்ணிற்கு. அடித்தவன், ஜெயேஷ்.

சட்டென வார்த்தைகளை அமிலமாய் கக்குகின்றன, நிகிலாவின் உதடுகள். ''என்னங்க... நீங்க.? உங்க பையன் (?) பேர்லதான் தப்பு'' செத்தவளோட பிள்ளைக்கு இவ்வளவு செல்லம் கொடுக்கறீங்க! என் பொண்ணை கண்டாலே உங்களுக்கு ஆகலை...!'' 'ஓ'வென ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாள், நிகிலா. கணம் விரிகின்றன, காட்சிகள். அத்தனையும் நடக்ககூடிய சாத்திய முள்ளவை.

இதற்காகத்தானே கல்யாணமே வேண்டாம் என்றிருந்தான். 'கனிதா, கனிதா' என்று அவள் காலை சுற்றிசுற்றி வருவானே: அவளுடைய ப்ரணவ் அடிமையாக மாற, காரணமாயிருப்பது அவளுக்கு செய்யும் துரோகமல்லவா?

அவள் ஆன்மா மன்னிக்குமா, அவனை? நிகிலாவின் அருகாமையில், மயங்கிப் போயிருந்த அவனை உலுக்கியது புத்தி. மெல்ல அவள் கரங்களை விடுவித்தான்.

ஜெயேஷின் ஸ்பரிசம் தந்த மோகத்தில் மூழ்கிப் போயிருந்தாள், நிகிலா- அவனை எப்படி விலக்குவது?

தானாக கூப்பிட்டு அல்லவா, அருகாமையில் இருத்திக் கொண்டான். குறுக்கு புத்தி யோசித்தது. மெல்ல அந்த கடைசி அஸ்திரத்தை, அவள் இதயம் துளைக்கும் என தெரிந்திருந்தும் அதை எடுத்தான்.

''கனிதாவுக்கு உன்னை மாதிரி நிறைய தலைமுடி இல்லை. உன்னை மாதிரி கர்நாடகமாக புடவை கட்டமாட்டாள். உன்னுடையது ஒரு மாதிரியான அழகு என்றால், அவள் வேறு மாதிரி அழகு. முத்தமழை பொழிந்து என்னை பேசவே விடமாட்டாள்... நீயும் அழகாய் தான் இருக்கிறாய்...?''

அவன் எதிர்பார்த்தது போலவே அவள் உள்ளம் கொதித்தது. ச்சே...! மனுஷனா இவன்! மிருகம் மாதிரி நடந்துக் கொள்கிறான். தன்னை ஆசையாக தொட வருகிறான், மனம் மாறியிருகிறான் என்று சந்தோஷப்பட்

டாலே கடையில் கவிதாவை மனதில் வைத்துக்கொண்டா தன்னைத் தொட்டிருக்கிறான்?

அவன் தொட்ட இடம் எரிந்தது. விவாகரத்தானவனோ, அல்லது மனைவியை இழந்தவனோ, அவனை கூட எப்படி ஒரு பெண் மணக்க முன் வருகிறாள். அவளை மணந்துக் கொண்டபின், அவளுடையவனாய் மட்டுமே இருக்க வேண்டும் என்ற ஆசையில், இருப்பாள் என்ற நம்பிக்கையில் அல்லவா!

அவளுக்குள் இருந்த அந்த நம்பிக்கை, பொடியாய் உதிர்ந்தது. தன்னை தொடும் போது, ஸ்பரிசிக்கும் போது, அந்த நேரத்திலும் அவனுக்கு கவிதா நினைப்பு மட்டுமே வருகிறதென்றால், அவன் ஏற்கனவே கல்யாணத்திற்கு முன் கூறியிருந்ததைப் போல், அவன் குழந்தைக்கு தாயாக மட்டுமே அவளை மணந்துக் கொண்டிருக்கிறான்.

அதற்கு மேல் அவனிடம் எதிர்பார்த்தது முட்டாள்தனம். அது மட்டுமல்ல, அது அவள் தன்மானத்திற்கும் தலைகுனிவு. இதுவரை உணர்ச்சிகளை ஜெயித்தவளால் இனி முடியாதா, என்ன?

## 19

அந்த இரவை இன்று நினைக்கும் போது கூட, வேதனை நெஞ்சில் பாரமாய் அமர்ந்துக் கொண்டது. அவன் தூங்கி விட்டதையறிந்து, மெல்ல உள்ளே போய், கதவை தாளிட்டுவிட்டு, அவனுக்கு அருகில் பிரணவ்வை நகர்த்தி விட்டு, மறுமூலையில் படுத்தாள். எப்போதும் படுத்தவுடனே தூங்கும் அவளுக்கு, இன்று உறக்கம் வருமா என்றிருந்தது.

அகிலா, ஒருபுறமும், கனிகா மறுபுறமும் புரண்டு வந்து மேலே விழ, அவர்களை நேராக்கி விட்டு, நடுவில் தான் தரையில் தூங்கும் போது இருந்த மனநிம்மதி இன்று இருக்கவில்லை.

ஜெயேஷும், இமைகள் சொருக ஆரம்பித்திருந்த வேளை. நிகிலா மெல்ல வந்து கதவை தாளிடும் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டன, புலன்கள். நிகிலாவை பார்க்க பாவமாயிருந்தது.

சென்பகம் வருத்தப்படுவாளே என்று, அவள்முன் நடிப்பதற்காக, தானும் இதே அறையில் படுத்துக் கொள்கிறாள். ஆளுக்கொருபுறம் தூங்காமல் விழித்திருக்க, தாள் வேறு கதவுக்கு.

தான் அன்றொரு இரவு நடந்துக் கொண்டது அவளை எவ்வளவு மனவேதனைபட வைத்திருக்கும் என புரிந்தாலும், ஒவர் தாளிடபட்டிருந்த கதவை எழுந்து, திறக்க போது, அவளுக்கு சிரிப்பு வந்தது.

நிகிலா வரவர, தொலைபேசி ஒலிக்க ஆரம்பித்தது. பொதுவாக விடிகாலை அல்லது இரவுகளில் வரும் தொலைபேசி அழைப்புகள் அவளுக்கு கலக்கத்தையே உண்டு பண்ணும். ஏதேனும் கெட்ட செய்திகளை தாங்கியே, அவை ஒலிக்கக் கூடும் என்பது அவள் எண்ணம்.

''அக்கா...! அம்மா நம்மளை விட்டுட்டு போயிட்டாக்கா...'' கனிகாவின் குரலில் அதிர்ந்து, ''அம்மா'' என்று பெருங்குரலில் நிகிலா தொண்டைக்குள்ளிருந்து அழுகையை வெளிபடுத்த, குரல் கேட்டு வந்த செண்பகம் தான் ரிஸீவரை பிடுங்கி, என்னவென்று விசாரித்தாள்.



நிகிலாவை தாங்கி, பிடித்து, உட்கார வைத்தவள், ''அத்தே... எங்க அம்மா... அம்மா...'' அரற்றியவளின் தோளை தொட்டு ஆசுவாசபடுத்தியவள், மகனை எழுப்பினாள். ''டேய்... ஜெயேஷ்...! எழுந்திருடா. நிகிலாவோட அம்மா...'' முடிக்கவில்லை, அவன், ''நிகிலாவோட அம்மாக்கு என்னம்மா...?''

''நேத்து நாங்கபோய் பாத்துட்டு வந்தோமில்லையா... கொஞ்சம் நேரத்துக்கெல்லாம் ரொம்ப முதுகு வலிக்குது. மூச்சு கூட விடமுடியலைன்னு சொல்லியிருக்காங்க. வலியை குறைக்க மாத்திரையும், ஆஸ்த்மா மாத்திரையும் போட்டுண்டு படுத்திருக்காங்க. காலைல அகிலா எழுந்து எழுப்பி பார்த்தா, தூக்கத்துலேயே ஹார்ட் அட்டாக்கில் உயிர் போயிருக்கு... சீக்கிரம் பிரணவ்வ எழுப்புடா... உங்க அப்பாக்கு தகவல் சொல்லி வரச் சொல்லிட்டு நாம கிளம்புவோம்...''

ஹாலுக்கு வந்த ஜெயேஷின் கைகளில் அடைக்கலமாகி கதறினாள், நிகிலா. மெல்ல அவளை, அணைத்து சமாதானப்படுத்தியவன், அடுத்த கால்மணியில் ரெடியாகி ஆட்டோவோடு வந்தான்.

## 20

நிகிலா போய் சேர்ந்து சிறிது நேரத்திலேயே அகிலாவும் வந்துவிட்டாள். உறவினர்கள் எல்லாம் வந்துவிடவே மாலையே பிணம் எடுக்கப்பட்டது. அக்கா, தங்கைகள் மூவருக்கும் அழுதழுது மாளவில்லை. பிரணவ்வை தூக்கி வைத்துக் கொண்டு, இருந்த, ஜெயேஷுக்கே கண் கலங்கியது.

பெற்ற தாயை உடனிருந்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதால், கல்யாணமே வேண்டாம் என, நிகிலா இருந்திருக்கிறாள் என்றால், தன் தாய் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் என்று, ஜெயேஷுக்கு புரிந்தது.

செண்பகமும் உடன் ஆறுதலாய் இருக்க, எல்லாம் முடிந்தது. ''நீ இருந்து காரியங்களை முடித்துவிட்டு வா'', என்று நிகிலாவிடம் கூறிவிட்டு, செண்பகம், ஜெயேஷ் பிரணவ்வுடன் திரும்பி வந்தனர். அன்று இரவிலிருந்தே ஜெயேஷுக்கு ஆரம்பித்தது தலைவலி. பிரணவ், ''அம்மாகிட்ட தான் தூங்குவேன், அம்மாகிட்ட கூட்டிட்டு போ...'' என்று ஆரம்பிக்க, அவனை சமாதானப் படுத்துவதற்குள் போதும், போதும் என்றா



''எதுக்குடா எல்லாரும் ஆடிப்பாடிட்டே குண்டு விளையாடறீங்க?''

''இது ஆட்டம், பாட்டம்,குண்டாட்டம் சார்!''

-சி.சண்முகம்,
சோலார் புதூர்.

கிப் போனது.

பல் தேய்த்து, குளிப்பதிலிருந்து ஒவ்வொன்றாக ரகளை. ஜெயேஷ் காதுகளில் விழட்டும் என்று வேண்டுமென்றே செண்பகம் பிரணவ்விடம் சொன்னாள், ''முன்னேல்லாம் பாட்டி, பாட்டின்னு வருவ... இப்ப என்னடான்னா எல்லாத்துக்கும் 'அம்மா, அம்மா'...ன்னு அழுற. அந்த அளவுக்கு உன்னை நல்லா பாசமா பாத்துட்டிருக்கா, நிகிலா. உனக்கே உன் அம்மா முகம் மறந்திருக்கும். உன் அப்பாவும் போனவளையே நினைச்சிட்டிருக்காம, இருக்கறவளை சந்தோஷமா வைச்சுக்க, எப்ப ஆரம்பிக்கப் போறானோ''

என்னதான், ஆளுக்கொரு முகமூடி போட்டுக் கொண்டு, இருவரும் ஒரே ரூமில் தூங்குவது போல் வெளிக்காட்டிக் கொண்டிருந்தாலும், அவர்களுடைய அன்னியோன்யம் பத்தி, செண்பகத்துக்கு தெரியாமலில்லை என்பதையே அவள் பேச்சு உணர்த்தியது.

இரண்டொரு நாளில், செண்பகம் ஊருக்கு கிளம்ப வேண்டி வந்த போது, ஜெயேஷ் பிரணவ்வை கொண்டு போய், நிகிலாவின் வீட்டில் விட்டுவிட்டு வந்தான்.

சாயங்காலம் வீட்டிற்குள் நுழையும் போதே வெறுமை தாக்கியது. குழந்தையும் இல்லை, நிகிலாவும் இல்லை. போய் என்ன செய்யப் போகிறோம் என்று தோன்றியது.

நிகிலாவிற்கு போன் பண்ணி பேசினால் என்ன? உடனே செயல்படுத்தினான், ஜெயேஷ். அவள் அப்பாவை பத்தி விசாரித்தான் பின், ''பிரணவ் எப்படி இருக்கான், நிகிலா?'' ''நல்லா இருக்கான், 'சித்தி, சித்தி'ன்னு அகிலா, கனிகா கிட்ட நல்ல ஒட்டிண்டுட்டான்...''

''வேளைக்கு ஒழுங்கா சாப்பிடறானா?''

''அதெல்லாம் கனிகாகிட்ட தான் சாப்பிடுவேன்னு ஒரே அடம்...'' அவன் பாட்டுக்கு சமத்தா இருக்கான். நீங்க எப்படி இருக்கீங்க, 'நீயும், இல்லாம, பிரணவ்வும் இல்லாம, என்னால இருக்க முடியலை'ன்னு மனசு விட்டு கூற மனம் வரவில்லை.

''நீ எப்படி இருக்க? நான் அங்க வரவா...?'' என்று கேட்க வாயெடுத்தான். அதற்குள், ''வேறொன்று மில்லையே, வெச்சுடறேன்'' என்று போனை வைத்து விட்டாள், நிகிலா.

போனை வைத்தவுடன், மனசு பாரமாயிற்று. ''நீ எப்படி இருக்க?'' என்ன, ஏதென்று விசாரிக்க கூடவா மனமில்லை. 'பிரணவ், பிரணவ்', அவளை ஒரு மனுஷியாக கூட மதித்து விசாரிக்க தோன்றவில்லை, இல்லையா? மனம் புழுங்கியது.

அந்த பத்து நாட்களும், ஜெயேஷ் போன் செய்யும். போதெல்லாம், பிரணவ்வை பத்தி பேசிவிட்டு டக்கென போனை வைத்து விடுவதை வழக்கமாக்கிக் கொண்டாள், நிகிலா.

அன்று வியாக்கிழமை என்பதையும் மறந்து, நிகிலாவின் நினைப்பிலேயே, விட்டத்தை பார்த்தவாறு படுத்திருந்தான், ஜெயேஷ். காலிங் பெல் அலறியது. நிகிலாவின் அம்மாவிற்கு சுபஸ்வீகாரம் நேற்று முடிந்து விட்டது, என்றாலும், நாலைந்து நாட்கள் இருந்துவிட்டு, ஞாயிறன்று வரு



---

வதாகத் தானே கூறினாள். யாரது வாசலில்?

இன்ப அதிர்ச்சியாக நிகிலா, பிரணவ்வுடன் நின்றிருந்தாள். ''பிரணவ், 'அப்பா, அப்பா'ன்னு ஒரே அழுகை. உங்களை பாக்கணும்னு. அதான் கிளம்பிட்டோம்...''

நிகிலா, ஞாயிறன்று தான் வருவாள் என்று நினைத்திருந்த ஜெயேசுக்கு அவள் வந்தது எதிர்பாராத சந்தோஷத்தைக் கொடுத்தது. கொஞ்சம் கொஞ்சமாக, நிகிலா பக்கம் தான் ஈர்க்கப்படுவதை உணர்ந்தான்.

இரண்டொரு நாட்களில் வீடு இயல்பிற்கு வந்துவிட்டது. அன்று, ஏதோ தோணவும், புது படத்திற்கு இரண்டு டிக்கெட்டுகளுடன் நுழைந்தான், ஜெயேஷ். நிகிலாவை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும்.

''வாடா, மாப்பிள்ளை...! நானே உனக்கு செல்லுக்கு போன் பண்ணணும்னு இருந்தேன், உனக்கு நூறாயுசுடா...!'' அவனை வரவேற்றது, கமலக்கண்ணன்.

''வாடா... என்ன இந்த பக்கம்?''

''இல்ல, வைரமுத்துவோட, தலைமையில் கவியரங்கம் அதுக்கு இரண்டு டிக்கெட் கிடைச்சுது. நிகிலா ஞாபகம் தான் உடனே வந்தது. அதான் நேர்லயே வந்தேன் நீ கூட்டிட்டு போய்ட்டு வா...!''

ஜெயேஷின் சட்டை பையில் அன்றைய மாலை காட்சிக்கான சினிமா டிக்கட், பாரமாய் தெரிந்தது. என்ன சொல்வான், அவன் இதுவரையில் நிகிலாவை கவனித்த வரையில் கவியரங்கத்துக்கு போவதையே அவள் விரும்புவாள் என்பதில் சந்தேகமில்லை.

தன் சந்தோஷத்துக்காக, சினிமாவிற்கு வா என்றால் தப்பாக எடுத்துக் கொள்வாளோ? ஆனால் கவியரங்கத்துக்கு போய், தனக்கு அங்கு என்ன புரியும்? முடிவுக்கு வந்தவனாய், சொன்னான்.

''கண்ணா! கவியரங்கத்த பத்தி எனக்கு என்ன தெரியும்? நீயும் நிகிலாவும் போய்ட்டு வாங்க, நான் பிரணவ்வ பாத்துக்கறேன்...''

நிகிலா கிளம்ப, இருவரும் சென்றனர். விட்டத்தை பார்த்தவாறு, படுத்திருந்த ஜெயேசுக்கு அந்த வெறுமை என்னவோ போலிருந்தது. தான் நினைத்தபடி சினிமாவுக்கு போக முடியவில்லை என்பதோ, என்னவோ அவளை அனுப்பிவிட்டு, அப்படி தனியே உட்கார்ந்திருப்பது அவனுக்கு எரிச்சலாய் இருந்தது.

இதே சுனிதாவை 'நீ தனியாக சினிமாவோ' ஷாப்பிங்கோ போ' என்றால் கூட, அவனை விட்டுவிட்டு எங்கும் போக மாட்டாள். மணி எட்டானது. பிரணவ்விற்கு சாதம் கொடுக்க வேண்டும். காலையில் வைத்திருந்த சாதத்தில் ரசத்தை விட்டு பிசைந்து ஊட்டினான். முதல் வாயே துப்பிவிட்டு, 'அம்மா, தர மாதிரி தாப்பா...'' என்றது குழந்தை. அம்மா தினம் எப்படி தருவாள், என அவனுக்கு எப்படி தெரியும்? நிகிலா அதை சுட வைத்து நெய் விட்டு, இரண்டு சிட்டிகை உப்பு போட்டு மசித்து, ரசத்தை சுட வைத்து சாதம் பிசைந்திருப்பாள்!

அது தெரியாத ஜெயேஷ் பிசைந்த சாதத்தை பிரணவ் துப்பியது. அதில் ஒன்றிரண்டு பருக்கைகள் ஜெயேஷ் முகத்திலேயே பட்டுவிட, அவன் முகம் ஆத்திரத்துக்குப் போனது. ''சாப்பிடு, சாப்பிடு'' என்று பி

ணவ் வாயில் அடைக்க, அடுத்த சில நிமிடங்களிலேயே, அதை வாந்தி எடுத்து விட்டான், பிரணவ்.

தன்னால் அவனை சமாளிக்க முடிய வில்லையே, அவன் வாந்தி எடுத்த இடத்தை சுத்தபடுத்த வேண்டுமே, என்பதெல்லாம் ஆத்திரமாக மாறி நிகிலா பக்கம் திரும்பியது.

'அவள் ஜாலியாக, கவியரங்கம் பார்க்க போய் விட்டாள், என் தலையில் அல்லவா எல்லாம் விடிகிறது,' என்று கோபம். அதில் தான்தானே அவளை 'போ' என அனுப்பினோம் என்ற நியாயம் மறைந்துப் போயிற்று.

தானும் சாப்பிடாமல், பசிவேறு கோபத்தை அதிகப்படுத்த, அடிபட்ட புலிபோல சீறிக் கொண்டு, இங்குமங்கும் நடந்துக் கொண்டிருந்தான், ஜெயேஷ், நிகிலாவின் வரவை பார்த்தபடி.

## 21

அந்த கவியரங்கத்திற்கு போனது நிகிலாவிற்கு ஒரு இன்ப சஸ்பென்சாக இருந்தது. அவளால் நம்பவே முடியவில்லை, அதுவும் கவியரசு வைரமுத்து தலைமைதாங்கும் கவியரங்கம்.

அவர் பேசுமுன், சின்ன குட்டி குட்டி தலைகள் கவிதைகளை வாசித்து விட்டு போயின.

ஒரு இளம் கவிஞர், ''என்ன புண்ணியமோ?''

''வாசலில் கையேந்தும்
குருட்டு பிச்சைக்காரரை
தாண்டி, சென்று
உள்ளே உண்டியலில்
போடும் ஒரு ரூபாயால்,
என்ன புண்ணியமோ...?''

என்று வாசித்து விட்டு, கைதட்டலை வாங்கிக் கொண்டுப் போனார். கமலக்கண்ணன் 'அடப்பாவி...!' என்று கிட்டதட்ட கூவினான்.

''என்னங்க...!''-நிகிலா. என்னங்க, இது அநியாயமா இருக்கு, இது வேறு ஒருத்தரோடு கவிதைங்க... இதை ஒரு வாரப்பத்திரிகையில் நானே படிச்சிருக்கேங்க... இதை இவருதுன்னு ஏகப்பட்ட கைதட்டல் வேற...!'' பொருமினான், கமலக்கண்ணன்.

அவளுக்கு வியப்பாக இருந்தது. ஏறக்குறைய வருகிற எல்லா இலக்




''தலைவர் முகமூடியை அணிஞ்சிட்டு எதற்கு ஆத்துக்கு போறார்?''

''ஆத்து மணலை கொள்ளையடிக்கத்தான்''.

-வே.சித்ரா,
கும்மிடிப்பூண்டி.





லைப் பத்திரிக்கைகளையும் படிப்பவள், அவள். அவள் கூட படிக்கவில் லையே, இதை. அவனுக்குள் நல்ல ரசனை இருந்ததை அந்த இரண்டு மணி நேரத்தில் உணர்ந்து வியந்தாள்.

வைரமுத்து பேசப் பேச, அவளுள் உத்வேகம் பொங்கி எழுந்தது. பெரிய கவிஞராகி, நாட்டையே மாற்றி, புது உலகம், படைக்கும் வேகம் அடி வயிற்றில் எழுந்தது.

இருவரும் வெளியே வந்து ஆட்டோ பிடித்தனர். பாதி தூரத்திலேயே 'க்ளட்ச்' ஒயர் அறுந்து விட்டதெனவும், இனிமேல் ஆட்டோ போகாதெனவும் டிரைவர் கை விரித்து விட்டான்.

இதற்குள் ஏறக்குறைய நன்றாக இருட்டி விட்டது. வீட்டில் பிரணவ் சாப்பிட்டானா, என்னவோ? ஜெயேஷ் சாப்பிட்டானோ? என்ற கவலை வேறு அரித்தது. ''நீங்க முதல்ல வீட்டுக்கு போற வழிய பாருங்க... அதெல்லாம் அவன் பாத்துட்டிருப்பான்...'' - ஆறுதல் சொன்னான், கமலக்கண்ணன்.

ஒன்றிரண்டு ஆட்டோக்கள் நிறுத்தாமலேயே செல்ல, பாவப்பட்டு நிறுத்தின் ஒரு ஆட்டோவில் ஏறி இருவரும் வந்தப் போது, சன் டி.வியில் 'செந்தமிழ் அரசி' முடிந்திருந்தாள்.

ஆட்டோவை வெயிட்டிங்கிலேயே நிறுத்தச் சொல்லி விட்டு, இருவரும் உள்ளேவர, பிரணவ் தூங்கிப் போயிருப்பது தெரிந்தது. அங்குமிங்கும் உலவிக் கொண்டு, முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்க பார்த்த ஜெயேஷை பார்த்த உடனேயே புரிந்துப் போனது, அவன் நார்மலாக இல்லை!

புருஷன், பெண்டாட்டிக்கு நடுவே தான் ஏன் என்று நினைத்தோ, என்னவோ, கமலக்கண்ணன் உடனே கிளம்பி விட்டான். அவன் தலை மறைந்தாலும், ஜெயேஷ் கேட்ட முதல் கேள்வி, ''ஏதோ கவியரங்கம்னு போன, திரும்ப இவ்வளவு நேரமா... வேற எங்கல்லாம் சுத்திட்டு வரே...?

அவன் கேள்வியில் துடித்து போனாள், நிகிலா.

இப்படி கேள்வி கேட்டு அவள் மனதை ரணப்படுத்த, ஒரு வாய்ப்பு வேண்டுமென்றா, அவளை 'போ', என அவனே அனுப்பினான். போகும் போது, நன்றாக இருந்தானே, வருவதற்குள் இவனுக்கு என்ன வந்தது?

''நீ பாட்டுக்கு கண்ணன் கூட போயிட்ட...! பிரணவ் சாப்பிடாம, என் மேலேயே துப்பி, தரையெல்லாம் வாந்தி எடுத்து, அதை நான் சுத்தம் பண்ணி, நிமிர, நீ என்னடான்னா பத்து மணிக்கு வரே...!''

அவளுக்கு உள்ளுக்குள் சிரிப்பு தான் வந்தது. இன்று இரவு ஏழு மணிக்கு பிரணவ் வாந்தி எடுக்கப் போகிறான் என அவளுக்கு தெரியுமா, என்ன! அப்படி பார்த்தால், போனதடவை காய்ச்சல், சளி வந்தப் போது, ஆபீஸ் கிளம்பி ரெடியான பின், அவள் புடவையிலேயே சாப்பிட்ட மருந்தை கக்கி விட, அவள் பின் அதை அலசிப் போட்டு விட்டு, அரக்க பரக்க வேறு புடவை உடுத்திக் கொண்டு ஓடினாளே! ஜெயேஷ் மேலே அதற்கு கோபப்பட்டாளா, என்ன? சிரிப்பு தான் வந்தது.

சிரிப்பையும், மீறி சிந்திக்கவும் செய்தாள். வேறு எதுவும் அவனுக்கு ஒரு பொருட்டல்ல, அவள் கமலக்கண்ணனுடன் போனது பிடிக்க



வில்லை. ஏதோ தோன்றவும் அவளை அனுப்பி விட்டான். பின், யோசித்து பார்த்திருப்பான்.

பிரணவை பார்த்துக் கொள்ள அல்லவா இவளை கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறான். அப்படியிருக்க, பிரணவ்வை பார்த்துக் கொண்டு, வீட்டை பார்த்துக் கொண்டு இருக்க, அவள் ஜாலியாக கவியரங்கம் போவதாவது?

சும்மா இருக்கும் மனம் சாத்தானின் கூடாரமாகி இருக்கும். அதுதான் பொரிகிறான்.

தன்னை ஏதோ, பிரணவ்வைப் பார்த்துக் கொள்ளும் ஆயா போல அவன் நினைக்கும் போது, தானும் ஒவ்வொன்றிற்கும் ஜெயேஷின் விருப்பங்களை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என முடிவு செய்தாள். அவன் மனைவியாக தன்னை நடத்தும் அன்று அதை பார்ப்போம்.

சாதத்தை சூடு பண்ணி, அவள் கொண்டுவர, இருவருமாக சாப்பிட்டனர். அதுவரை இருவரும் ஒரு வார்த்தை கூட பேசிக் கொள்ளவில்லை. பொதுவாகவே, அவசியத்திற்கே தவிர, இருவரும் பேசிக் கொள்வதில்லை என்பதால், அது அவர்களுக்குள் எந்த பெரிய மாற்றத்தையும் காட்டவில்லை.

ஆனால், கமலக்கண்ணனோ தன்னால் நிகிலாவிற்கு ஏதாவது பிரச்சனையோ எனக்கலங்கிக் கொண்டிருந்தான். இப்படி கலங்குவதற்கு அவளுக்கும், தனக்கும் என்ன பூர்வ ஜென்ம தொடர்போ?

## 22

ஜெயேஷ் அலுவலகம் வந்து சேர்ந்த உடனேயே அவனுடைய அலுவலகத்தின் தலைமை பொறுப்பில் ஸ்ரேயா என்ற பெண், அதிலும் இருபத்தி நான்கே வயதான இளம் பெண் பதவியேற்கபோகும் செய்தி காதுக்கு வந்தது.

எல்லோரும் சொன்னதை விட, எதிர்பார்த்ததை விட இளமையாக இருந்தாள், ஸ்ரேயா. தலைமைப் பொறுப்பு என்பதால், புடவை கட்டிக் கொண்டிருப்பாள் என்று தங்களுக்குள் முடிவிற்கு வந்திருந்த பெண் ஊழியர்கள் கூட அவள் ஸ்லீவ்லெஸ் சுடிதாரில் வந்திறங்கிய போது கொஞ்சம் அதிர்ந்து தான் போனார்கள்.

இளமைக்கேத்த படு சுறுசுறுப்பு. வந்த இரண்டாம் நாளிலேயே கூடுதல் வேலை பளுவினால், சிரமப்படுபவர்களிடமிருந்து வேலையை பிடுங்கி, சும்மா கதை பேசியே காலம் ஓட்டுபவர்களிடம் திணித்தாள். யாரிடமும் மறுபேச்சில்லை. ஏனெனில் சொல்வது அவளல்லவா?

தனக்கென தனி கேபின் வேண்டாமென மறுத்து மற்றவர்களோடு ஹாலிலேயே உட்கார்ந்து கொண்டாள். ஒழுங்காக பணிபுரிவோர் யார்? ஏய்ப்பவர் யார்? என இனங்கண்டு கொள்ளலாமே!

சந்தேகம் கேட்கும் சாக்கில், வழிந்து கொண்டிருந்த தெய்வசிகாமணி, அவளை என்னிடம் சிரித்து பேச வைக்கிறேன். பார் என்று சங்கணம் கட்டிக் கொண்டு போனான், என்னவாயிற்று?

''தெய்வசிகாமணி, நீங்க இதுவரை எந்த பெண்ணிடமாவது செருப்

படி வாங்கியிருக்கிறீர்களா? என்றால், அந்த அதிர்ஷ்டம் இன்று உன்ன தென உங்கள் ராசிக்கு ராசிபலனில் போட்டிருந்தது என்பதை கடைநிலை ஊழியன் வரை கேட்டு தமுட்டு சிரிப்பு சிரிக்க வைத்தது.

ஆனால், ஜெயேஷ் அந்த மாதத்திற்குரிய பாலன்ஸ் ஷீட்டை வழக்கத்தை விட 2 நாட்கள் முன்னதாகவே தயார் செய்து கையெழுத்துக்கு அனுப்பிய போது, தானாகவே கூப்பிட்டு பாராட்டவும் செய்தாள். அது போதாதா மற்றவர்களுக்கு அவனை ஓட்டுவதற்கு?

''டேய்! என்னடா, எங்களை திரும்பிக் கூட பாக்க மாட்டேங்கறா, அந்த ஸ்ரேயா... நாங்க மட்டும் வேலைய செய்யலயா, என்ன?''

''நீயக அவங்களை பாக்காம, வேலைய மட்டும் பார்க்கணும். அந்த மேடம் நெருப்புடா... அலையாதடா... சிஸ்டர்கிட்ட சொல்லவா...?''

''சொன்னா, என்னடா? இப்ப மட்டும் என்ன? இப்பவே ருத்ர தாண்டவம் தான் ஆடறா, என் பெண்டாட்டி. உன்னை மாதிரி, மாப்ள, புது பெண்டாட்டி... பெரிய கவிஞராமே.. மச்சம்டா உனக்கு...?''

எதுவும் இளிக்காகாத ஒரு பொறாமை மனது பொருமியது. ஜெயேஷை அங்கு வந்த கிருஷ்ணன் தள்ளிக் கொண்டு போயிருக்காவிட்டால், ஜெயேஷ் பேசியவனது சட்டையைப் பிடித்திருப்பான்.

''சரி, விடுடா... அவன் ஏதோ பொறாமையில உளர்றான். நீ எதுக்கு அவனுக்கு பதில் சொல்லிண்டிருக்கே?

கிருஷ்ணன் அலுவலகம் சம்பந்தபட்ட பைலை எடுத்துக் கொண்டு போய், ஸ்ரேயாவிடம் கையெழுத்து வாங்கி விட்டு, கால்மணி நேரம் பேசிவிட்டு போனான்.

கையெழுத்து போட கால் மணி நேரமா? மூக்கில் விரல் வைத்தது, மொத்த அலுவலகமும்.

மறுநாளும், அதற்கடுத்த நாளும், ஸ்ரேயாவை கிருஷ்ணன் சந்தேகத்தைப் போக்கவென அழைத்து, கால்மணிநேரம் பேசினான்.

அவளுடைய கணவன் ''பியூச்சர் கம்ப்யூட்டர்''ஸில் புரோகிராம் எக்ஸிக்யூடிவ்வாக இருப்பதாக, தகவல் தந்தது, கிருஷ்ணனே.

## 23

**கா**லை எப்போதும் ஜெயேஷ் எழுந்திருப்பதற்குள் பாதி சமையலை முடித்துவிட்டு, பிரணவ்வை எழுப்பி கொண்டிருக்கும் நிகிலா, அன்று மணி ஆறரை ஆகியும் எழுந்திருக்காமலிருப்பது, ஆச்சரியமாக இருந்தது, அவனுக்கு. பிரணவ்வும் தூங்கிக் கொண்டிருந்தான்.

பக்கத்தில் போய், அவளைத் தொட்டு எழுப்ப என்னவோ தயக்கமாயிருந்தது. ஆனால், உடம்பு முடியவில்லையோ, என்னவோ? தயக்கத்தை உதறி எழுப்ப அவளைத் தொட்டவன் திடுக்கிட்டான். உடம்பு நெருப்பாய் ''உம்..உம்...என்ற முனகலே வந்தது.

மெல்ல எழுப்பி, விசாரித்ததில், இரவிலேயே, குளிர் ஜுரம் எனத் தெரிந்தது. காபி போட்டுக் கொடுத்துவிட்டு, பிரணவ்வை எழுப்பி எல்லாம் செய்து, பிரட் கொடுத்தான். ''நான் வெளியே சாப்பிட்டுக்கறேன், உனக்கு எதாவது வேணுமா?

''இல்லை, பிரட் போதும்... என்றவளுக்கு, மாத்திரை கொடுத்து விட்டு, பிரணவ்வை கிரெச்சில் விட்டு விட்டு அலுவலகம் போனான்.

நேரம் ஆக, ஆக ஜுரத்தின் தீவிரம் அதிகமாயிற்று. அவளால் சமாளிக்க முடியவில்லை. தள்ளாடியது, ஒரு வாய் தண்ணீர் குடித்தாலும், வாந்தி வரும் போலிருந்தது. ஜெயேஷ் மீது, காரணமற்ற கோபம் வந்தது. ஒரு டாக்டரிடம் கூட்டிப் போய் காண்பித்திருக்கலாம் இல்லையா, தன் பாட்டையும், தன் பிள்ளையின் பாட்டையும் பார்த்துக் கொண்டு போய் விட்டான்.

தங்கைக்கு போன் செய்து வரவழைக்கலாமா எனத் தோன்றியது. போனை எடுத்து, அகிலாவின் நம்பரை டயல் செய்தாள், எங்கேஜ்டாக இருந்தது.

கனிகாவிற்கு போன் செய்யலாமா என்று யோசித்த விநாடி, காலிங் பெல் கூப்பிட்டது. தள்ளாடியவாறே எப்படியோ கதவை திறந்து விட்டாள். வந்திருந்தது கமலக்கண்ணன்.

''என்னங்க... நீங்க என்னவோ போலிருக்கீங்க... தள்ளாடுறீங்க...என்னங்க நிகிலா...''மெல்ல எப்படியோ ஜுரத்தை பத்தி சொல்லி முடித்தாள். என்னங்க... தனியாவா இருக்கீங்க... நீங்க இருக்கற நிலையை பார்த்தா நல்ல டெம்பரேச்சர் இருக்கும் போலிருக்கே... ஜெயேஷ் தனியா உங்கள விட்டுவிட்டு எப்படி ஆபிஸ் போனான்?'' மெல்ல அவளை உட்கார வைத்தவன், காய்ந்த நிலையில் ஒன்றரை ஸ்லைஸ் பிரட்டை பார்த்ததுமே அவள் ஏதும் சாப்பிட்டிருக்கவில்லை என புரிந்துக் கொண்டான்.

ஏதும் பேசும் நிலையிலும் நிகிலா இருக்கவில்லை. பிரிட்ஜை திறந்துப் பார்த்தான். இட்லி மாவு இருந்தது. அதை எடுத்து, இட்லி தட்டை தேடி எடுத்து, ஒரு ஈடு வார்த்தான். பாலை சூடு பண்ணி, ஹார்லிக்ஸ் போட்டு எடுத்துக் கொண்டு, இட்லி இரண்டையும், சர்க்கரை கொஞ்சமும் போட்டு எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான்.

மெல்ல -நிகிலாவை கூப்பிட்டான். ''எனக்கு '' வாந்தி வர மாதிரி இருக்கு, ஒன்னும் வேணாமே...!.என்றவளை, ''வாந்தி எடுத்தாலும் பரவாயில்லை, சாப்பிடுங்க. வாந்தி எடுத்தா நல்லதுதான் ஜுரம் சீக்கிரம் போகும்... ''மெல்ல நிகிலா சாப்பிட்டாள்...கொஞ்சம் தெம்பு வந்தது.

ஆனாலும், டாக்டரிடம் வர மறுத்து விட்டாள். மாத்திரை போட்டுக்



''நம்ம தலைவர் பேச்சில் ஈரம் இருக்கும்!''
''பின்ன தண்ணி அடிச்சிட்டு பேசினா ஈரம் இருக்காதாக்கும்?''
**-வைகை.ஆறுமுகம், வழுதூர்.**

கறேன். கொஞ்சம் தூங்கி எழுந்தால் சரியாயிடும்... ஆமா, நீங்க எங்க இங்க, அதுவும் சரியா உதவி பண்ணனும்னே வந்த மாதிரி...''

ஒரு கல்யாணத்துக்கு வீடியோ கவரேஜ் புக் பண்றதுக்காக, இந்த பக்கமாத்தான் போயிட்டிருந்தேன். சரி அன்னிக்கு கலியாரங்கத்துக்கு போயிட்டு வந்தன்னிக்கு ஜெயேஷ் முகமே சரியில்லையே... என்னாலே உங்களுக்கு தொல்லையோ? என்று குற்ற உணர்வாக இருந்தது. சரி, ஒரு எட்டு பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்... வந்து பாத்தா... நீங்க கதவை திறந்தீங்களே, அந்த ஒரு நிமிஷம் நான் பயந்தே போயிட்டேன்...''

ஓர் இரு நிமிஷங்கள் நிசப்தம் அறையை நிறைத்தது.

''சரி, நான் கிளம்பறேங்க.... அப்புறம் சாயங்காலமா போன் பண்றேன்..''

வாசல் வரை போயாயிற்று... டெலிபோன் கூப்பிட்டது. ''இருங்க... எழுந்து எங்கயாவது... விழுந்துடப்போறீங்க... நான் யார்னு பாக்கறேன்...''

''ஹலோ''..-மறுமுனையில் ஜெயேஷ்.

''ஹலோ,...நிகிலா வீட்டுல இல்லையா... நீங்க யார் பேசறது?

''ஜெயேஷ், நான் தான்டா கண்ணன்... சும்மா இந்த பக்கம் வந்தேனா, அப்படியே வீட்டுக்கு வந்தா நிகிலா நல்ல ஜுரத்துல நிக்க கூட முடியாம தள்ளாடிக்கிட்டிருந்தாங்க.... என்னடா நீ! இது தான் அவங்களை பார்த்துக்கறதா...? லீவ் சொல்லிட்டு டாக்டர்கிட்ட கூட்டிட்டு போயிருக்கலாமில்லை.... இப்படியா தனியா விட்டுட்டு போவ...? இன்னொரு நாளைக்கு உன்னை நேரில் வைச்சுக்கறேன்... இதோ லைன்ல இரு... நிகிலாகிட்ட கொடுக்கறேன்...

கேட்டுக் கொண்டிருந்த நிகிலா மெல்ல எழுந்து போனை நோக்கி வந்தாள். ஜெயேஷுக்கு உள்ளுக்குள் எரிந்தது. கமலக்கண்ணன் கூறியதில் உள்ள நியாயத்தை மூளை ஏற்றுக் கொள்ள வில்லை. ''இவன் யார்? நம்முடைய வீட்டில் இருந்துக் கொண்டு, நம்மை அதிகாரம் செய்கிறான்... ஏன், இந்த நிகிலாதான் காலை தன்னிடம் 'டாக்டரிடம் கூட்டிக் கொண்டுப் போ! என்று சொன்னாளா? இல்லையே! இவன் பெரிய இவன் மாதிரி...'' உள்ளுக்குள் பொருமினான்.

அவளுடைய உடம்பு எப்படியிருக்கிறது? என்று கேட்கலாம் என்று போன் செய்தவன் வீம்பாக, வேறு எதையோ பேசிவிட்டு, பிரணவ்வை இன்று நான் கூட்டிக்கொண்டு வருகிறேன். நீ உன்னை பார்த்துக்கோ, போதும். விழுந்து கிழுந்து வைச்சு படுத்தறாதே...'' என்ற குத்தலான பேச்சுடன் போனை வைத்தான்.

ஜெயேஷ் அவளுடைய ஜுரத்தை பற்றி விசாரிக்கவில்லை என்பதை கமலக்கண்ணன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். ''ச்சே...! தப்பு பண்ணிட்டேமே, சுனிதா மேல உயிரையே வைச்சிருந்தேன். என்னால இன்னொரு பொண்ணுகூட வாழமுடியாது'' என்று திட்டவட்டமாக சொன்ன ஜெயேஷ்ஷை, இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தினது தவறோ...? அப்படியே செத்துப் போனவளையே நினைச்சண்டு இரு, என்று விட்டிருக்கனுமோ, நிகிலா வாழ்க்கை நன்



றாக இருந்திருக்கும் பரிதாபப்பட்டது மனசு.

பக்கத்து வீட்டுக் காரர்களுக்கு உடம்பு சரியில்லை என்றால் கூட, ''இப்ப தேவலையா'' என்ன ஏதென்று விசாரிப்பது நாகரிகம் - அவளை ஒரு மனுஷியாக எண்ணி, விசாரிக்கும் நாகரிகம் கூட அற்றுவிட்டானா, ஜெயேஷ். இத்தனைக்கும் குழந்தை பிரணவ்விற்கு ஒன்று என்றால், எப்படி பக்கத்திலேயே இருந்து கண்ணும், கருத்துமாக பார்த்துக் கொள்கிறான், நிகிலா.

சுயபச்சாதாபத்தில் விழ இருந்தவளை, உலுக்கி விட்டது, மூளை. ஜெயேஷின் சுபாவம் தெரிந்தும் நீ அவன் விசாரிப்பான், என்று எதிர்பார்த்திருக்கக் கூடாது. உனக்கு இது புதுசா என்ன? எதிர்பார்ப்புகள் இல்லையெனில் ஏமாற்றங்கள் இல்லை.

சுதாரித்துக் கொண்டு, கமலக்கண்ணன் போனதும், படுக்கையில் சாய்ந்தாள். எந்தவித எதிர்பார்ப்பையும் சுத்தமாக துடைத்தெறிதல் சாத்தியமா?

## 24

அடுத்த நாள் ஸ்ரேயா பச்சை நிற புடவையில் அலுவலகம் வர, மொத்த அலுவலகமே மூக்கில் விரல் வைத்தது. ஒருவேளை கிருஷ்ணன் சொல்வது போல, இருக்குமா, அல்லது காக்காய் உட்கார பனம் பழம் விழுந்த கதையாக இருக்குமோ?

கிருஷ்ணன் ஸ்ரேயாவிடம் ஐந்து நிமிடம் பேசினால் அதைபற்றி தனது சகாக்களிடம் அரை மணி நேரம் பேசினான். அவள் கொண்டு வந்திருந்த வெஜிடபிள் ரைஸை அவன் புகழ்ந்து தள்ள, மறுநாள் அவனுக்கென்ன சிறிய டிபன் பாக்ஸில் வெஜிடபிள் ரைஸ் வந்தது.

''கிருஷ்ணன்...''- கூப்பிட்ட குரலுக்கு ஓடினான். ''என்னுடைய ஹஸ்பெண்ட்க்கு ஒரு சின்ன ஆக்ஸிடென்டாம். போன் வந்தது. நான் கிளம்பறேன், நீங்க இந்த வேலையை முடிச்சிடறீங்களா...? பதிலுக்கு காத்திராமல் விரைந்தாள், ஸ்ரேயா.

தன்னை கூப்பிட்டு அவள் வேலை கொடுக்க மாட்டாளா, என்று ஏங்கிக் கொண்டிருக்கும் கும்பல் ஒன்று அவனை பார்த்துப் பொருமியது.

மறுநாள், ஸ்ரேயா மட்டுமல்ல, கிருஷ்ணனும் லீவு. மறுநாள், வந்த கிருஷ்ணன் ஸ்ரேயாவின் லீவ் லெட்டரை மேனேஜரிடம் கொடுத்துவிட்டு, அவளுடைய கணவருக்கு டூ-வீலரில் போகும் போது, அடிபட்டதையும், நேற்று அவன் கூடமாட இருந்து உதவி செய்ததையும், காரம், மணம், குணம் சேர்த்து, சொல்லிக் கொண்டிருந்தான்.

இவையனைத்தையும் கவனித்துக் கொண்டு இருக்கும் ஜெயேஷுக்கு மட்டும் எங்கோ, ஏதோ தவறாகப்பட்டது. கிருஷ்ணனை ஒரு சினேகிதனாக எண்ணி, அவள் நடந்துக் கொள்வதையும், உதவி கேட்பதையும் அவன் பின்னாடி, சுயபிரதாபத்திற்குப் பயன்படுத்துகிறானோ?

அந்த கேள்விக்கும் கிருஷ்ணன் கொஞ்சமும் அசரவில்லை. ''ஆமாம்...ஜெயேஷ்...அவங்களும் என்னை சினேகிதனாகத் தான் நினைக்கறாங்க...நானும் அப்படித்தான் நினைக்கறேன்...''

''அடப்பாவி...!

''உனக்கு தெரியுமா... அவங்க ஹஸ்பண்ட்டுக்கு ஒரு பிரைவேட் கம்பெனியில வேலை. சக்கையா பிழிஞ்சு எடுத்துடுவான். சாயங்காலம் சத்திலெல்லாம் தொலைச்சுட்டு சக்கையா திரும்பறவருக்கு, இவங்களை பாத்து, ஆசையா இரண்டு வார்த்தை பேசவோ, சின்ன, சின்ன விஷயங்களை ரசனையா அனுபவிக்கவோ, எது நேரம்?...

''மத்தவங்களுக்கும், எனக்கும் என்ன வித்தியாசம்னா நான் அவங்களமாதிரி பேய் வழியல. அன்னிக்கு தலைவலின்னு சீக்கிரம் கிளம்பினாங்களே...அன்னைக்கு நான் கிராஸ் பண்ணி போகும் போது, ஆட்டோவுக்காக வெயிட் பண்ணிட்டிருந்தாங்க. ஏதோ அரசியல் காரணத்துக்காக, அன்னைக்கு ஆட்டோவை டைவர்ட் பண்ணியிருந்த விஷயம் அவங்களுக்கு தெரியல. நான் அவங்களை முதல்ல ரெஸ்டாரெண்டுக்கு கூட்டிட்டு போய், காபி வாங்கிகுடுத்து, மாத்திரையும் போடச் சொல்லி, வீட்டுல விட்டுட்டு வந்தேன்...''

''ஆமாண்டா... நீ ஒருநாள் டிராப் பண்ணினதால, அப்படியே, உன்னை உத்தம புருஷனா நினைக்க ஆரம்பிச்சிட்டாங்களோ...?

''கிண்டல் பண்ற இல்ல. ஆனா, அதுதான் உண்மை பொம்பளைங்க எல்லாருக்குமே என்ன, நினைக்கறாங்கன்னா, சந்தர்பம் அமையற வரை எல்லா ஆண்களும் நல்லவங்களா தான் தெரிவாங்க... அப்படி சந்தர்ப்பம் அமையற போதுதான் சுயரூபம் தெரியும்னு நினைக்கிறாங்க. ஆனால், அப்படி கண்ணியம் காக்கிறாங்கன்னா, இவனை நம்பலாம்னு நமக்கு மார்க் போடறாங்க...!

''சரி, அத விடுடா...ஆபிஸில் மத்த ஸ்டாப்ஸ் கூடி பேசிக்கிற அளவு அவங்க உன் கூட பழகனுமா...?

''அவங்களுக்கு அது தப்பா தெரியலை. காரணம் அவங்க கிட்ட தப்பு இல்லை. அவங்களுக்கு தலைவலி என்ன, தலையே வெடிச்சாலும், பக்கத்தில உட்கார்ந்து என்ன, ஏதென்று கேட்கும் நேரமோ, பொறுமையோ அவங்க ஹஸ்பெண்டுக்கு இல்லை. ஸ்ரேயான்னு இல்ல, பெரும்பாலான பெண்கள் கிட்ட இதுதான் பிராப்ளம்...

சின்ன சின்ன எதிர்பார்ப்புகள்... சின்ன சின்ன விஷயத்துக்கு பாராட்டு. உடம்பு சரியில்லையா, கரிசனமான ஒரு விசாரிப்பு... இது வீட்டாரிடம் கிடைக்காதப் போது வெளியிலாவது, அது கிடைக்காதா என்று



''எங்க குழந்தை நடக்க ஆரம்பிச்சி மூணு மாசம் ஆகுது!''

''அய்யய்யோ... ரொம்ப தூரம் நடந்து போயிட்டிருக்குமே!''

**-வந்தை ஜி.கே.நிதி, வந்தவாசி.**



ஆதங்கப்படுறாங்க. வேற ஒன்னுமில்லை. உன்னை பார்த்து ஏதாவது ஒரு பெண் இந்த மஞ்சள் கோடு போட்ட சட்டையில நீ நல்லா இருக்கேன்னு சொன்னா, உன் மனசு ஜிவ்வுன்னு ஆகிடாதா? அடுத்த முறை மஞ்சள் கோடு போட்ட சட்டை போடும் போது, அவ நினைவு வருமா..வராதா? எல்லாம் கெமிஸ்ட்ரி சைக்காலஜிடா...!

ஜெயேஷுக்கு வியப்பாக இருந்தது. கல்யாணமாகாத பிரம்மசாரி, இவனுக்கென்ன தெரியப்போகிறது. மற்றவர்களிடம் பந்தா காட்டவென்றே யாரிடம் கேட்க போகிறான், என்றெண்ணியிருக்க, பெண்களோட மனசை பத்தி புட்டு புட்டு வைக்கிறானே?

அவனையறியாமல் ஜெயேஷின் மனம் நிகிலாவை பற்றி நினைத்தது. கமலக்கண்ணன் அவள் கவிதையையோ, சமையலையோ புகழும் போது...ஒரு மகிழ்ச்சி கீற்று அவள் முகத்தில் வந்து போனதே...கனிதா பாதிநாள் ''சமைச்சு சாப்பிடணுமா, போரிங்...ஜெய் அப்படியே ஷாப்பிங் போயிட்டு ஹோட்டலில் சாப்பிட்டு வந்துடலாமே...! கெஞ்சலாக கொஞ்சி விட்டு, அதை அவன் சம்மதமாக எடுத்துக் கொண்டு, ஷாப்பிங் கிளம்பி விடுவாள். ஒவ்வொரு வாரமும் விடுமுறை நாட்களில் நடக்கும் கதை இது.

ச்சே! தலையை உதறினான். கனிதாவையும், நிகிலாவையும் ஒப்பிடவே கூடாது. கனிதா வேறு, அவனை தன் அன்பாலும், கொஞ்சலாலும், காதலாலும், பைத்தியமாக்கி வைத்திருந்தாள். அவள் மேல் எந்த குறையும் காண இயலாத அளவு, அவளுடைய அன்பு மனதை நிறைத்திருந்தது.

நிகிலாவிற்கும் தன்னிடம் ஆரம்பத்தில் எதிர்பார்ப்புகள், ஆசைகள் இருந்திருக்குமாயிருக்கும். அவள் வாழ்வில் நுழைந்த முதல் ஆண் தான் தானே!

தான்தான் அந்த ஆசைகளை முளையிலேயே கட்டு விட்டேனோ!

நாளை, என்னிடம் அவள் எதிர்பார்த்து கிடைக்காத அன்பான பேச்சும், பாராட்டுதல்களும் வேறு யாரிடமாவது கிடைக்கும் போது, அவளுக்கும் ஒரு ஈர்ப்பு ஏற்படலாம். படித்தவள், கவிதை எழுதுபவள். அதற்காக நிறைய யோசிப்பவள். நான் கொஞ்சமேனும் அன்பாக இருந்தாலே போதும், என்மீதும், குறிப்பாக பிரணவ் மீதும் அவளுக்கு ஒட்டுதல் அதிகரிக்கும்.

என்றெல்லாம் எண்ணியவாறே, சாயங்காலம் போனதும், அவள் ஜுரத்தை பற்றி விசாரித்து, வேண்டுமானால் டாக்டரிடம் கூட்டிப்போய் காண்பிக்க வேண்டும். நைட்டுக்கு சமைக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஹோட்டலில் வாங்கி வர வேண்டும்.

யோசித்தவாறே, கிரெச்சில் போய் பிரணவ்வை அழைத்துக் கொண்டு, வீட்டுக்கு வந்தான். கதவை திறந்த நிகிலா, ''நான் உள்ளே படுத்திருக்கேன்...நைட்டுக்கு செஞ்சு டைனிங் டேபிள்ள வைச்சிருக்கேன். எட்டு மணிக்கு ஒரு குரல் கொடுங்க..பிரணவிற்கு நான் எழுந்து ஊட்டறேன் என்றவாறு உள்ளே விரைந்தாள்.

என்ன சொல்வதென்றோ, செய்வதென்றோ தெரியவில்லை, ஜெயே

டிருக்கு. அவளை அருகில் சென்று, தலையை கோதி, நெற்றியில் கை வைத்து, ஜுரமாயிருக்கிறதா என்பார்த்து மெல்ல அணைத்து, மடியில் அவள் தலையை வைத்து மெல்ல தட்டி தூங்க பண்ண வேண்டும் போலிருந்தது. அத்தனைக்கும் தயக்கமாய் இருந்தது.

கல்யாணமான இத்தனை மாதங்களில் அவ்வாறு தொட்டு, அணைத்து, ஸ்பரிசித்ததில்லையே. அவன் மெல்ல தயக்கமாக, "உனக்கு இப்போ, எப்படியிருக்கு...? என்று கேட்டவாறே தொட போனவன் அவள் தூங்குவதை பார்த்து, மெல்ல, பின் வாங்கினான்.

**24**

மெல்ல, அந்த வாரப்பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தாள், நிகிலா. ஜுரம் விட்டாலும், அந்த அசதி உடம்பில் தெரிந்தது. சென்ற வாரம் இதழின் விமர்சனம் எடுத்துப் பார்த்தாள். அதில் "எது சுதந்திரம்?" என்ற தலைப்பில் அவள் எழுதியிருந்தாள்.

"எது சுதந்திரம்!"
"எது எனக்கு நல்லதென,
நான் தீர்மானிக்கிறேனே!
நூற்றில் ஒரு முதிர் கன்னிக்கு,
திருமணம் முன்னேற்ற
தடையாகலாம்!
கல்யாணம் செய்து வைத்து
கால்களை கட்டிப் போடாதீர்;
ஆயிரத்தில் ஒரு கைம்பெண்ணுக்கு,
மறுமணத்தில் மனமின்றி,
வாரிசுகளுக்காகவே வாழும்...
வைராக்கியம் இருக்கக்கூடும்!
மறுமணம் செய்து வைத்து,
சுதந்திரத்தை திணிக்காதீர்;
அதனால் தான்,
எது எனக்கு சுதந்திரமென,
நான் தீர்மானிக்கிறேனே!

அவள் விமர்சனங்களை வாசித்துக் கொண்டிருந்ததை குறுகுறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான், ஜெயேஷ். அந்த வார இதழில் நிறைய பகுதிகள் இருந்தாலும், அவளுடைய படைப்பை பாராட்டி, நிறைய கடிதங்கள் வந்திருந்தன.

"வார்த்தைகள் ஒவ்வொன்றும் அருமை. மறுமணம் செய்து வைத்து, பெண் சுதந்திரத்தில் புரட்சி பண்ணுவதாக நினைத்துக் கொள்கிறோம். சில நேரங்களில் அதுவே அவர்கள் வாழ்க்கையை இன்னமும் சிக்கலாக்கி விடுவதும் உண்டு...என்ற உணரச் செய்த வரிகள் நன்றாக இருந்தன..." என்று முடிந்த கடிதத்தில் ஆர்.ஜெ. என்ற இனிஷியல் இருந்தது, அவள் கவனத்தை ஈர்த்தது.



ஆனாலும், நிகிலா மனம் சட்டென கமலக்கண்ணனை நினைத்தது. பாலைவனம் போல, செயற்கை தனமாகி விட்ட தனது வாழ்வில், பிரணவ் மட்டுமே ஒரே ஆறுதல் என்றிருந்தவளுக்கு, மற்றொரு ஆறுதலாய் வந்தவன். நிறைய விஷயங்களை இருவரும் விவாதிக்கின்றனர். நிறைய கருத்து பரிமாற்றம், நிறைய சிந்திக்க வைக்கிறது. கமலக்கண்ணனுடன் விவாதித்த பிறகு வெளிவரும் அவள் எழுத்து மெருகேறியிருக்கிறது.

"பிரணவ்... ஐ தாத்தாம்மா..." என்றவாறு வந்து கால்களை கட்டிக் கொள்ள, நிமிர்ந்து பார்த்தவள் சந்தோஷத்தில் முகம் மலர்ந்தாள். அவளுடைய அப்பா.

ஜெயேஷும் வெளியில் வந்து நலம் விசாரித்தான். மெல்ல அவள் இருவரையும் தன் வீட்டுக்கு அழைத்தார். தன் அம்மா இருந்தவரை, அம்மாவின் ஆர்வமான கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல், தவிர்க்கும் நேரும் சங்கடங்களை எண்ணி, அவள் போனாலும், ஒரு சில மணி நேரங்களிலேயே திரும்பி விடுவாள்.

அம்மாவும் போனபின், ஒரு முறை போய் கனிகாவையும் அப்பாவையும் பார்த்துவிட்டு வந்ததோடு சரி. அப்பா அழைக்கவும் போய்விட்டு வரலாம் என தோன்றியது.

ஜெயேஷ் என்ன சொல்வானோ? யோசனையாய் நிமிர்ந்தவளை புன்னகை முகத்துடன் எதிர்கொண்டான்.

"எனக்கும் மாமா சொல்றது சரின்னு படுது. பிரணவ், நீ,நான் போய் ஒரு நாள் இருந்துட்டு வரலாம். நீயும், நானும் அங்கிருந்து அப்படியே ஆபீஸ் போவோம், சரியா...!

நிகிலாவிற்கு தன்னை கிள்ளி பார்த்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. நிகிலா சமையலை முடிக்க, சாப்பிட்டதும் கிளம்ப ஏற்பாடானது. மெல்ல நெஞ்சை கையில் பிடித்தவாறு முகம் மாறிய ஜெயேஷ்... நிகிலாவிடம் சொல்லிவிட்டு டாக்டரை பார்க்கப் போனான்.

"போய்விட்டு வந்தவன், கொண்டு போன, மெடிக்கல் பையை, பீரோவில் வைத்துவிட்டு கிளம்ப, நிகிலா மனதில் மட்டும் ஒரு குறுகுறுப்பு! அப்படியென்ன டாக்டர் சொல்லியிருப்பார்? ஏன் நெஞ்சை கையால் பிடித்துக் கொண்டு ஒரு மாதிரி முகம் மாறினான்?

அவள் வீட்டில், கனிகா ஆவலுடன் பிரணவ்வோடு விளையாட, இவளோ, தங்கையுடன் பேச ஆரம்பித்ததில் உறுத்தலை மறந்துப் போனாள்.

அந்த வீட்டில் இருந்த அறைகளில் அன்று நிகிலாவுடையது என்று அவன் அறிந்திருந்தான். போரடித்துக் கொண்டு, சும்மா இருக்க பிடிக்காமல், அவளுடைய அறைக்குள் அமர்ந்திருந்தான்.

அவள் அடுக்கி வைத்திருந்த புத்தகங்கள் எல்லாம் அவனை பிரமிக்க வைத்தன. ஒவ்வொன்றும் சோஷியலிச புத்தகங்கள், வாழ்க்கை வரலாறு, கவிதை தொகுப்புகள் ஒரு சிலவற்றை புரட்டிப் பார்த்தான்.

ஆசிரியர் பெயர் 'நிகிலா' எனப் போட்டிருந்தது. கவிதை தொகுப்புகள் வெளியிடும் அளவு திறமையானவளா...! பிரமிப்பு கூடியது. அவனுக்கு பொதுவாகவே அது மாதிரி எழுதுபவர்களிடம் ஒரு சின்ன பொறாமையே உண்டு. தன் மனைவி நிகிலா இத்துணை திறமைகள் கொண்

டவனா?

பிரமிப்பு காதலாக மாறிக் கொண்டிருந்தது. கவிதாவின் நினைப்பிலேயே இருந்தவன், இது நாள் வரை நிகிலா மீது அன்பு பாராட்டாமல் இருந்ததற்கு வெட்கப்பட்டான்.

அன்று கூட, ஆசையாய் அருகில் வந்தவளை, அமிலமாய் வார்த்தைகளை தெளித்து, விலக வைத்தானே! இப்போது நிகிலாவை பற்றி புரிந்துக் கொள்ளும் போது, தான் பயப்படுவது அனாவசியம் என்று தோன்றியது.

இப்படி முற்போக்கு சிந்தனையுள்ளவள், நாளை பிரணவ்வை புறக்கணிக்க வாய்ப்பபேயில்லை. இவள் குடும்பமே பிரணவ்வை தூக்கி கொஞ்சுகிறது. நாளை பிரணவ்விற்கு ஒரு தம்பியோ, தங்கையோ வந்தால் கூட இந்த அன்பு மாறாதென தோன்றியது.

எப்படியும் இன்று இரவு, தன் அப்பாவிற்காகவாவது, தன்னுடன் ஒரே அறையில் தான் படுப்பாள். அன்பாக அரவணைக்க வேண்டும்.

நிகிலாவோ நிலை கொள்ளாமல் தவித்தாள். இன்று ஞாயிற்றுக்கிழமை. கமலக்கண்ணன் வருவதாக சொன்னானே. நான் பாட்டுக்கு இங்கு வந்து விட்டேனே!

**26**

**ஜெ**யேஷ் எதிர்பார்த்திருந்த பொழுதும் கூடி வந்தது. பிரணவ் சாப்பிட்டானதும், ஜெயஷே அவனை கூட்டி வந்து, தட்டி தூங்க பண்ணினான். எப்போதும் ஒரு ரோஜா சொருகி இருந்த நிகிலா ஜெயேஷுக்கு ஒரு குட்டி தேவதை போலத் தோன்றினாள்.

அன்றைய நாள் நிகிலாவை ஆசையாக கூப்பிட்டு அருகில் இருத்தி மனத்தை காயப்படுத்தினாயே, அந்த காயம் அவ்வளவு லேசில் ஆறியிருக்குமா, என்ன? மனசாட்சி கேட்டது. அதற்கு பதிலளிக்கும் விதமாக, அவன் நினைத்துக் கொண்டான், பெண்டாட்டியாக இருந்தாலும், தவறுக்கு வருந்தி மன்னிப்பு கேட்பதில் தப்பில்லையே.

'உன்னை சராசரி பெண்ணாக நினைத்திருந்தேன். நாம் இணைந்து பிரணவ்விற்கு போட்டியாக உன் குழந்தை, சாரி... நம் குழந்தை வந்து விடப் போகிறது என பயந்தேன். அதனால் தான்மா அன்று அப்படி பேசிவிட்டேன். உன் மனதை காயப்படுத்தும் எனத் தெரிந்தும்... ஏன்... உன் மனதை காயப்படுத்தக் கூடிய சொற்கள் எவை, என யோசித்து அவற்றை வார்த்தைகளாக்கினேன். ஆளுக்கொரு எண்ணங்களோடு இவ்வளவு நாட்கள் விலகியிருந்தது போதும்... பரஸ்பரம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வோம்...' என்று கூறி, மெல்ல நெற்றியில் முத்தமிட வேண்டும்.

கூடவே நினைத்துப் பார்க்கிறான். நிகிலாவிற்கு நெற்றியில் முடி கற்றைகளை ஒதுக்கி மெல்ல முத்தமிடுவது தான் பிடிக்கும் போலும். அவள் பிரணவ்வை கன்னத்தில் முத்தமிட்டு அவன் பார்த்ததில்லை. மெல்ல நெற்றியில் முத்தமிட்டு சேர்த்தணைத்துக் கொள்வாள். அவ்வாறே தான் அவளை ஆராதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு காலத்



தைக் காட்டினாள்.

மெல்ல கதவுகளை சப்தமின்றி திறந்துக் கொண்டு நிகிலா உள்ளே நுழைந்தாள். ஜெயேஷ் கையில் கொண்டு வந்திருந்த பால் டம்ளரை கொடுத்து விட்டு படுக்கையில் அமர்ந்தவள், தூங்கும் பிரணவ்வை ஆசையாய் நோக்கி முடியை கோதி விட்டாள். ஒருக்களித்திருந்த கால்களை நன்றாக நீட்டி விட்டு, சட்டையை இறக்கி விட்டாள். இவளுக்கு தான் பிரணவ் மீது எவ்வளவு பிரியம்...!

வார்த்தைகளுக்கு வேலையில்லாமல் அங்கே அமைதி ஆட்சி செய்துக் கொண்டிருந்தது. இனி விளக்கிற்கும் இங்கே வேலையில்லை என்பது போல், நிகிலா, விடி வெள்ளியைப் போட்டு விட்டு, விளக்கை அணைத்தாள். எங்கே, எனக்கு தூக்கம் வருது... குட் நைட்' என்று கூறி படுத்து விடுவானோ என்றதொரு பதற்ற குரலில் ஜெயேஷ் ''நிகிலா''. மென்மையாகக் கூப்பிட்டான்... ''உம்...''

''நிகில்...! என்ன, பிரணவ் மட்டும் தான் உன் குழந்தையா?'' புருவங்களை உயர்த்தி பார்த்தாள்.

''என்னையும் அப்படி...''- எப்படி முடிப்பதென அவனுக்கு தெரியவில்லை. சொல்லி தெரிவதா மன்மதக்கலை?

ஜெயேஷ் சொல்ல வருவது புரிந்து மெல்ல அருகில் சென்றாள். தலையை மெல்ல கலைத்து விட்டாள். கைகளை எடுத்து, தன் உள்ளங்கையில் பொக்கிஷம் போல் வைத்து மூடினாள். மெல்ல மெல்ல அவன் கன்னம் நோக்கி குனிந்தாள். அவன் இமைகள் மூடிக் கொண்டன.

அவள் ஸ்பரிசங்களை எதிர் நோக்கி, கன்னம் காத்திருந்தது. மெல்ல ஜில்லென்று அவளுடைய அதரங்கள் அவனுடைய கன்னத்தை ஸ்பரிசித்தன. இதயம், இன்னொரு கன்னம், கண் இமைகள், காது மடல்கள், கழுத்து என ஒவ்வொன்றிலும் அவள் ஸ்பரிசத்திற்காக ஏங்கின.

அடுத்த கன்னத்திலும் அதே ஒத்தடத்தை கொடுத்து விட்டு, மெல்ல நெற்றியை நோக்கி குனிந்த விநாடி, இருட்டை கிழித்துக் கொண்டு, அந்த இருமல் சப்தம் நாராசமாய் காதுகளைத் தொட்டது.

மெல்ல நிதானித்த நிகிலா, விலகி நின்ற நிமிடங்களிலேயே நாலைந்து முறைகள் கேட்ட இருமல் சப்தம் நிற்காமல் தொடர்ந்துக் கொண்டிருந்தது. அப்பா என்ன இந்த நேரத்துல இப்படி இருமறார்? அவனுக்கு கேக்குமாறு மெல்லிய குரலில் கூறினாள்.- என்ன, ஏதுன்னு நான் போய் பாத்துட்டு வரேன்...''




''நாங்க 'டோர்' டெலிவரி எல்லாம் கூட பண்றோம்''

''எங்க வீட்ல ஏற்கனவே 'கதவு' போட்டுட்டோம்''

**-சிவ.இராமலிங்கம், ஆத்தூர்.**

கதவை திறந்துக் கொண்டு வந்தவளிடம், கனிகா, "நீ போய் தூங்குக்கா... நான் பாத்துக்கறேன்..." "ஏண்டி... இப்படி இருமறார், அப்பா... உடம்புக்கு என்ன....?" முன்னாடி இப்படி இருமல் வந்திருக்கா....?"

இதுக்கு முன்னே நாலைஞ்சு தரம் இப்படி இருமினாருக்கா... டாக்டர்கிட்டே காட்டினோம்... டாக்டர் ஒண்ணும் பயப்பட தேவையில்லைன்னு சொல்லி விட்டார். நான் காலைல சொல்றேன்க்கா...

அப்பா, இடை விடாது இருமிக் கொண்டிருந்தார். ஒரு அரை மணி நேரத்திற்கு நிற்காமல் இருமல் வந்துக் கொண்டேயிருக்கும் என கனிகா கூறினாள். நெஞ்சை பிடித்தவாறே, நெஞ்சை தடவிக் கொண்ட, அவர் இருமுவதைப் பார்க்க கஷ்டமாக இருந்தது. இருமல் மேலும் தொடர்ந்தவாறே இருக்க, மூக்கருகில் ஒன்றிரண்டு இரத்தத் துளிகள்.

பதறிப் போனாள், நிகிலா. அவசரமாக கனிகாவை கூட்டிக் கொண்டு, சமையலறைக்கு போனவள், "என்னடி மறைக்கறே, என்கிட்டேயிருந்து? நாளைக்கு காலைல சொல்றேன்னயே, என்ன அது?"

அதுவரை நிகிலா உள்ளே ஜெயேஷ் காத்துக் கொண்டிருப்பதையே மறந்து விட்டிருந்தாள். அப்பாவிற்கு என்னவோ, ஏதோவென்ற பதற்றமும், அதை தெரிந்துக் கொள்ளும் அவசரமுமே அவளிடம் காணப்பட்டது.

முதலில் மழுப்பிய கனிகா, பின் சொன்னாள்- "அக்கா, அப்பாவை டாக்டர் பாத்துட்டு, அப்பாவோட நுரையீரல்ல, சளி கோழையா அடைச்சிட்டிருக்காம். அது கரைய மருந்து கொடுத்துருக்கார். அதனால தான் இவ்வளவு இருமல். ரொம்ப ஸ்டிரெய்ன் பண்ணி, இருமறதால, லேசா இரத்தம் வருது. பயப்பட ஒண்ணும் இல்லேக்கா..." என்றதும் தான் நிகிலாவிற்கு சற்று நிம்மதியாக இருந்தது.

நிகிலாவை காணோமே, மாமா வேறு இருமிக்கொண்டிருக்கிறாரே, என்ன ஏதென்று பார்க்க வந்த ஜெயேஷ் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் தன் பிறந்த வீட்டின் மேல் வைத்திருந்த பாசத்தை அறிந்திருந்ததால், அவள் உணர்ச்சிகளை புரிந்து கொள்ள முடிந்தது. முதலில் அவள் மனதில் நல்ல இடத்தை பிடிக்க வேண்டுமென நினைத்தவன் சொன்னான்.

"நிகில்! நீவேணா, இன்னிக்கு மாமா, கனிகாவுக்கு துணையா இங்க இவங்க பக்கத்துலயே படுத்துக்கோ. நான் பிரணவ் எழுந்தா பாத்துக்கறேன்."

'சரி' என்று தலையாட்டிய நிகிலாவின் கண்களில் ஒரு நன்றி கலந்த அன்பு தெரிந்தது.

ஏதேதோ கனவு கண்டு கொண்டிருந்தவன், மெல்ல நடுநிசிக்கு மேல் உறங்கினான். தான் முன்பு சுனிதா நினைவிலேயே, அவளை புரிந்து கொள்ளாமல் இருந்ததுண்டு. ஆனால், இப்போது அவளை புரிந்து கொள்ள முயற்சித்து அன்புடன் நெருங்கி வரும்போது, விலகிப் போவதாகவே சந்தர்ப்பங்கள் அமைகின்றதே!

மறுநாள் மாலையே கிளம்பி விட்டனர். நிகிலாவின் சிந்தனையெல்லாம் அடுத்து அவள் எழுதவிருக்கும் கவிதைக்கான கருப்பொருளைப்



பற்றியதாகவே இருந்தது.

கமலக்கண்ணன் பிரபல பத்திரிகை ஒன்று நடத்தும் 'கவிதை திருவிழா'விற்கு அவளை கவிதை எழுதுமாறு வற்புறுத்தியிருந்தான். தன்மீது, ரொம்ப நம்பிக்கை வைத்து எழுதச் சொல்லும் அவனுக்காகவாவது சிறப்பாக எழுத வேண்டும் என நினைத்தாள்.

## 27

சும்மா பொழுதுபோக்கிற்காக படைக்கப்படும் படைப்புகளை விட, மற்றவர்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்ய சிரத்தை எடுத்து படைக்கப்படும் படைப்புகள் நன்றாகவே அமைவதுண்டு. அவை படைப்பாற்றலை மேலும் மேலும் செதுக்க வல்லவை.

நிகிலா நினைத்துப் பார்க்கிறாள். இக்கருத்து எல்லா படைப்புகளுக்கும் பொருந்தும். ரஜினி படம் என்பது ரஜினிக்காக மட்டுமே ஓடுவதில்லை. அதையும் மீறி அவர் படங்களில் நல்ல கதை இருக்கும். நல்ல இசை, பாடல்கள், எல்லாம் சிரத்தையோடு கலக்கப்பட்டிருக்கும். காரணம், 'அவரது இமேஜ்'. அதை ஈடு செய்யும் விதத்தில் அவரது எல்லா தரப்பு மக்களையும் கவரும் விதத்தில் அவர் படம் இருப்பதால், அது சூப்பர் ஹிட் ஆகிறது.

அதுபோலவே, யோசித்து யோசித்து மெருகேற்றி நல்லவிதமாக கவிதை எழுதியிருந்தாள். கமலக்கண்ணன் வந்ததும் கொடுக்க வேண்டும். அவன் அபிப்ராயம் கேட்டு பின் அனுப்பவேண்டும்.

அவளுக்கு திடீரென, தன்னுடைய கவிதைகளுக்கு சமீபகாலமாக, பாராட்டி விமர்சனம் எழுதி வரும் ஆர்.ஜெ. பற்றிய யோசனை வந்தது. அந்த பாராட்டு வரிகளைப் படிக்கும்போது, கவிதை பற்றின ஞானம் அதிகம் இல்லாமல் பாராட்டவே விமர்சனம் எழுதியது போலிருக்கும்.

அப்போதும் கூட, நிகிலாவிற்கு ஜெயேஷிடம் எதையும் காண்பிக்கவோ, அபிப்ராயம் கேட்கவோ தோன்றியதில்லை. அவளைப் பொறுத்தவரை, 'பிரணவ்வை வளர்க்கவென்றே உன்னை திருமணம் செய்து கொண்டிருக்கிறேன். அதற்கு மேல் என்னிடம் எதிர்பார்க்காதே' என்பது போல் கோடிட்டு காட்டிவிட்டான்.

நிறைய யோசித்து யோசித்து சராசரிப் பெண்ணைவிட, அதிக தன்மானம் பார்க்கும் நிகிலாவா தன்மானத்தை விட்டு, தானாகப் போய் வ... வாள்?

வீடு நெருங்க நெருங்க ஜெயேஷ் ரொம்ப சந்தோஷமாக இருந்தா... இருக்காதா பின்னே! நிகிலா பார்க்க ரொம்பவும் ஆசைப்பட்ட படத்... சி.டி. வாங்கிக் கொண்டு வந்திருக்கிறானே! எப்படியும் சி.டி. பா... முடிய மணி எட்டாகி விடும். பின் இரவு சமையலுக்கு ஆயத்தம் ெ... நிகிலா ஏன் கஷ்டப்பட வேண்டும். பேசாமல், நடுவிலே போய், ... பவனில் இருவருக்குமாக டிபன் பார்சல் வாங்கி வந்துவிட வேண்...

நிகிலா சி.டி. வாங்கி வரச் சொல்லி சொல்லவில்லைதான். அ... திரை விமர்சனம் போடும்போது அவள் அதை ரசித்து, ஆவலா... துக் கொண்டிருந்த ஒன்றே போதுமே, அவள் அந்த கூறாமல் அவள்...

பட்டதை வாங்கிக் கொண்டு போகிறோம். அவள் முகம் மெல்ல மலர்ந்து சந்தோஷத்திற்குப் போவதைப் பார்க்க வேண்டும்.

இவ்வாறெல்லாம் எண்ணியவாறே, கேட்டருகே வந்தவன், ஹாரன் அடித்தான். இவனுடைய வண்டிச் சத்தத்தை கேட்டவுடன், பிரணவ் ''அப்பா...'' என்று ஓடிவருவானே எங்கே காணோம்?

சற்றே நிதானித்து வாசல் கதவை பார்த்தவனை வாசலில் தொங்கிய பூட்டு வரவேற்றது. எங்கே போயிருப்பார்கள்? காலையில் ஏதேனும் சொன்னாளோ...? ஆமாம்... ''இன்னிக்கு கொஞ்சம் சீக்கிரமே வந்துவிடுவேன். பிரணவ்வை அழைத்துக் கொண்டு பார்க்குக்கு போய் வருகிறேன்.'' என்று கூட சொன்னாளே!

சை மறந்து விட்டோம். வண்டியை பார்க்கை நோக்கி திருப்பினான் ஜெயேஷ்.

பிரணவ் விளையாட நிகிலா பார்த்துக் கொண்டிருந்தாள். அது ஒரு பெரிய காலனி. காலனியில் வசிப்பவர்களின் குழந்தைகளுக்காக கட்டப்பட்டிருந்த பொழுதுபோக்கு பார்க் அது. எனவே, பார்க்கை ஒட்டியவாறே உள்ள ரோட்டில், எப்போதும் வண்டிகள் வருவதும், போவதுமாக பிஸியாக இருக்கும்.

எனவே, பிரணவ் ரோட்டிற்கு போகாமல், அவன் மேல் ஒரு கண் பதித்தவாறே இருந்தாள் நிகிலா. ''ஹாய் நிகிலா!'' குரல் கேட்டு திரும்பினாள். சுஜியின் அம்மா. சுஜி, பிரணவ்வுடன் க்ரீச்சில் ஒன்றாக விடப்படுபவள். அதற்குள் சுஜியும், பிரணவ்வை பார்த்து விட்டு, அவன் கூட விளையாட ஓடினாள். சுஜியின் அம்மாவும், நிகிலாவும் பெஞ்சில் உட்கார்ந்தனர்.

தங்கள் குழந்தைகளை பற்றி பொதுவான விஷயங்களை இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்ததில் பிரணவ் நிகிலாவின் பார்வையிலிருந்து நழுவினான். மெல்ல இருவரும், பந்தை தூக்கிப்போட்டு விளையாடிக் கொண்டே ரோட்டிற்கு வந்துவிட்டிருந்தனர்.

''ஏய் சுஜி...! நான் தான் முதல்ல கேச் பிடிப்பேன், பாக்கறயா...'' என்றவாறே, பிரணவ் ஓட, பின்னால் சுஜி ஓடினாள். திருப்பத்தில் திரும்பிய பைக்கில் வந்து கொண்டிருந்தவன் இப்படி சடாரென்று ரோட்டிற்கு இரண்டு குழந்தைகளும் ஓடிவருவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.


சட்டென்று வேகத்தை குறைக்கவே முயன்று தோற்றான். வேகம் மட்டுப்பட்டதே தவிர, சடாரென்று ப்ரேக் போட முடியவில்லை. எதிரே



''சுருட்டுச் சாமியார் கேள்விப் பட்டிருக்கேன், அதென்ன இருட்டுச் சாமியார்?''

''குறி சொல்லும் போது விளக்கை அணைத்துவிடுவார். அப்பதான் பெண்களை அணைக்க வசதியாக இருக்கும்''.

**-சிவ.இராமலிங்கம்,**
**ஆத்தூர்.**



ராட்சசன் போல பைக் வர, அதனால் தூக்கி எறியப்படும் தூரத்தில் பிரணவ். "சுஜி...! சுஜி...! நான் பிடிக்கப் போறேன்... உன்னால முடியாதே.." பந்தை பிடிக்கப்போகும் குதூகலத்தில் பைக் வருவதை கவனிக்காமல் பிரணவ்.

சாலையின் மறுபக்கம் பைக்கில் வந்து கொண்டிருந்த ஜெயேஷுக்கு இந்த காட்சியை கண்டவுடன் இதயமே நின்றுவிடும் போலிருந்தது. பிரணவ்வை சுஜி கூப்பிட்டு, அவன் நகர பொழுதில்லை. பைக்கில் வேகமாக போய் பிரணவ்வை ரோட்டோரமாய் தள்ளிவிடலாமா? அப்படி செய்தாலும், இவன் பைக், எதிரில் வருபவன் மேல் மோதி, கூழாக்கி விட்டுதான் நிற்கும்.

ஏதாவது செய்ய வேண்டும் என்ற பதைபதைப்புடன் வேகத்தை கூட்டினான் ஜெயேஷ். "ஐயோ... ப்ரணவ்..." இதோ பைக் உன்னை மோதி கூழாக்கப் போகிறதே! துடித்தான் ஜெயேஷ்.

**28**

நிகிலாவிற்கு எப்போதுமே எச்சரிக்கை உணர்வு அதிகம். அதிலும் பிரணவ் விஷயத்தில் அவள் எப்போதுமே கூடுதல் எச்சரிக்கை உணர்வுடன் இருப்பாள். தாயில்லா குழந்தை என்பது ஒன்று. போதாததற்கு ஏற்கனவே, பிரணவ்வை நிகிலா தன் குழந்தை போல் பார்த்துக் கொண்டிருந்தாலும், கண்கள் பிரணவ்வை தேடின. "எங்கே காணோம்...?" ஒருவேளை ரோட்டிற்குப் போயிருப்பானோ... அவசரமாக விடைப்பெற்று, அவசர நடையில் ரோட்டிற்கு வந்தாள்.

கண்ட காட்சி இதயத்தை உலுக்கியது. பிரணவ் பந்தினை பிடிக்க ஓட, அந்தப்புறம் சீறிக்கொண்டு பைக்... அதை கவனிக்காத பிரணவ்... சடாரென்று முடிவெடுத்தாள் நிகிலா. தன்னை பற்றி கவலையில்லை. பிரணவ்வை காப்பாற்ற வேண்டும். கணநேரத்தில் நடுவே பாய்ந்து, பிரணவ்வை ரோட்டில் தள்ளிவிட்டாள். தள்ளிவிட்டு தானும் திரும்புவதற்குள், அவள் காலில் வண்டி ஏறிவிட்டது.

ரோட்டோரமாய் விழுந்தவள், மயங்கிப் போனாள். பிரணவ் "அம்மா, அம்மா..." என்று கத்திக் கொண்டு வர, வண்டியை அவசரமாக ஸ்டாண்ட் போட்டுவிட்டு, ஜெயேஷ் ஓடிவர, எதிரே பைக் ஓட்டி வந்தவன் வேகவேகமாய் நிகிலா பக்கம் வந்தான்.

ஒரே எட்டில் பைக்காரனின் சட்டையைப் பிடித்த ஜெயேஷ் "என்னடா வண்டிய ஓட்டறே நீ...? குழந்தைக்கு ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தா நீயா போன உசிரை திருப்பி தருவே? இப்ப இவளுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆகட்டும்.."

ஜெயேஷின் கையை விலக்கி விட்டு சட்டையை இழுத்துவிட்டுக் கொண்டவன், "என்னங்க..! ரொம்ப பேசறீங்க.. நான் என்னவோ, வேணும்னே வந்து இடிச்ச மாதிரி பேசறீங்க... குழந்தைகளை கூட்டிட்டு வந்தா ஒழுங்கா பாத்துக்கணும்... வண்டிங்க வர ரோட்டுல விளையாட விட்டுட்டு என் சட்டைய ஏங்க பிடிக்கறீங்க.. ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போவீங்களா.. அத விட்டுட்டு..."



அப்போது தான் கோபத்தை விட்டு, நிகிலாவை பார்க்க திரும்பினான். பிரணவ் அருகில் நின்றிருக்க, சுஜிதா தாங்கி பிடித்திருக்க, நிகிலா மயங்கியிருந்தாள்.

அவசரமாக ஆட்டோ பிடித்து அருகிலுள்ள மருத்துவமனைக்கு போகச் சொல்லிவிட்டு கூடவே பைக்கில் போனான். சுஜிதா அவளை பிடித்தவாறே ஆட்டோவில் வந்தாள். கூடவே பிரணவ், சுஜி அம்மா என்ன ஏதென்று புரியவில்லையென்றவுடன் பிரணவ் அழத் தொடங்கி விட்டான்.

பரிசோதித்த டாக்டர், கால் பாதத்திற்கு சற்று மேலே ப்ராக்சர் ஆகியிருக்கிறதென்று கூறி, ஒரு மாதம் பெட்ரெஸ்டில் இருக்க வேண்டும் என்று கூறி விட்டார். "சாதாரண மயக்கம் தான்... இன்னும் சிறிது நேரத்தில் கண் விழிச்சுடுவாங்க. நீங்க பக்கத்திலேயே இருங்க... கண் விழிச்சதும் சூடா சாப்பிடதாங்க... காலை நகர்த்த வேணாம்னு சொல்லுங்க... நாளை ஒரு சின்ன ஆபரேஷன் பண்ணி கட்டு போட்டுடுவோம்... அதுவரை காலை அதிகம் நகர்த்தாம பாத்துக்கங்க.." சொல்லிவிட்டு சென்று விட்டார் டாக்டர்.

பிரணவ் "அம்மாக்கு என்னப்பா..." என்றவாறே அருகில் போக முயற்சிக்க அவனை தன்பக்கம் இழுத்துக்கொண்டான். "ஒன்னுமில்லைடா.. நீ அம்மா சொன்ன பேச்சை கேக்காம ரோட்டுக்கு ஓடினேயா... உன் மேல் வண்டி இடிச்சுடக் கூடாதேன்னு அம்மா உன்னை தடுக்க ஓடினாளா... அம்மா மேல வண்டி இடிச்சுடுச்சு..."

"அம்மா சாமிகிட்டே போயிடு வாங்களாப்பா...?"

ஒன்றும் பேசத் தோன்றாமல் அவனை அணைத்துக் கொண்டான் ஜெயேஷ். படத்தில் இருக்கும் சுனிதா தான் தனது அம்மா, அம்மா சாமியிடம் போய் விட்டாள். அதனால்தான் படத்திற்கு மாலை போட்டு வைத்திருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

பாவம். நிகிலாவை "அம்மா.. அம்மா..." என்று அவள் பின்னாலேயே போவான். அவள் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதைப் பார்த்ததும் அவளுக்கும் ஏதாவது ஆகிவிடுமோ.. என்று பயப்படுகிறான்.

பிரணவ்விற்கு என்ன? ஜெயேஷிற்கே, நிகிலா காலை அசைக்கக் கூட முடியாமல் படுத்திருந்தக் கோலத்தைப் பார்த்ததும் மனசு உறுத்தியது. பிரணவ்வை காப்பாற்றப் போய் தானே...? இவளையா, இன்னொரு குழந்தை பிறந்தால், பிரணவ்வை கவனிக்க மாட்டாள் என்று ஒதுக்கியே வைத்திருந்தேன்? மனம் நிகிலாவின் பால் நன்றியுணர்ச்சியால் நிரம்பியது.

மெல்ல கண்விழித்தவள் முதலில் புன்னகைத்தது பிரணவ்வை பார்த்துதான். அவனுக்கு ஒன்றுமில்லை என்ற நிம்மதி கண்களில் தெரிந்தது.

"எனக்கு என்னவாயிற்று...? பிரணவ்விற்கு ஒன்றுமில்லையே.." என்றவாறே எழ முயன்றப் போதுதான் கால்களை நகர்த்தவே முடியவில்லை என்பதை உணர்ந்தாள்.

அவளை மெல்ல திரும்ப படுக்க வைத்து, நடந்ததை கூறினான் ஜெயேஷ். பின், மறுநாள் ஆபரேஷனுக்கு தேவையான பணத்தை ரெடி

பண்ண, டாக்டரை பார்த்துவிட்டுப் போகிறேன் என்று கூறிவிட்டு, பிர ணவ்வை பக்கத்தில் விட்டுவிட்டுப் போனான்.

ஜெயேஷ் போனசிறிது நேரத்திலேயே, கனிகாவும், அப்பாவும் வந்து நிற்கவும் தான், ஜெயேஷ் போன் செய்து அவர்களுக்கு விஷயத்தைக் கூறி, நிகிலாவிற்கு துணையாக வரச் சொல்லியிருக்கிறான் என்பது புரிந்தது.

அது நிகிலாவிற்கு பெரும் ஆறுதலாக இருந்தது. அவளுக்கே, கனிகா விற்கு போன் செய்ய வேண்டும் என்றோ, வரச்சொல்ல வேண்டும் என்றோ தோணவில்லை.

ஜெயேஷ் புரிந்து கொண்டு செய்துள்ளான். பரவாயில்லை, இந்த மட் டும் அன்புள்ளதே என்று நினைத்துக் கொண்டாள்.

மெல்ல அன்றையப் பொழுது விடிந்து, ஆபரேஷனும் நடந்தது. ஆனாலும், அவள் முழு பெட் ரெஸ்ட்டில் ஒருமாதம் இருக்க வேண்டும் என்று டாக்டர் கூறி விட்டார். அவனும் அலுவலகத்திற்கு போன் செய்து கூறிவிட்டான்.

கனிகா, தன்னுடன் வந்து விடும்படி, ஆனமட்டும் கூறிப் பார்த்தாள். ஆனால், நிகிலா தான், பிரணவ்வை கொஞ்ச நாட்கள் கொண்டு வைத் துக்கொள் போதும். நான் சமாளித்துக் கொள்கிறேன் என்று பிடிவாதமாக மறுத்து, தன் வீட்டிற்கே வந்துவிட்டாள்.

பிரணவ் சித்தியுடன் போய் விட்டான். பொதுவாகவே, யாராக இருந் தாலும், எளிதாக ஒட்டிக் கொள்ளும் பிரணவ் கனிகாவுடன் போனதில் வியப்பில்லை.

சொல்லிவிட்டாளே தவிர, அவளுக்கு தனியாக சமாளித்துக் கொள் வதென்று அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. உதவிக்கு வந்தான் ஜெயேஷ். முதல் இரண்டு நாட்கள் கடையில் உதவிக்கு வந்தான் ஜெயேஷ். முதல் இரண்டு நாட்கள் கடையில் டிபன் வாங்கிவந்து, அவை வாயில் வைக்க முடியவில்லை.

## 29

தனக்கு வாய்க்கு ருசியாக சமைத்து போட்டவள் எழ முடியாமல் இருக்கிறாள். அவளுக்காகவாவது தான் சமைக்க கற்று நன்றாக சமைத்துப் போட வேண்டு மென தோன்றியது.

அவளை கேட்டு கேட்டு சமைத்து, பிசைந்து ஸ்பூன் போட்டு கையில் கொண்டு வந்து கொடுத்தான். சாப்பிட்டு தட்டி லேயே கை அலம்பவும், அப்படியே வாங்கிக் கொண்டு போனான். நிகி லாவிற்கே அதை பார்க்கப் பாவமாக இருந்தது. பாத்ரூம் போக மெல்ல நடத்திக் கூட்டிப் போனான்.

குளிக்க மெல்ல அழைத்தப் போய், பாத்ரூம் வரை விட்டு விட்டு அவளது உள்ளாடைகளையும், புடவையையும் கொண்டு வந்துக் கொடுத் தான். மாலை அலுவலகத்திலிருந்து ஜெயேஷ் திரும்பும் போது, அவன் கையில் துணிக்கடையின் பை.

யாருக்கு, என்ன துணி இப்போது வாங்கி வந்திருக்கிறான்? மறுநாள் அவளை மெதுவாக நடத்தி குளிக்க அனுப்பிவிட்டு உள்ளாடைகளை



கொண்டு வந்தவன் கைகளை பார்த்து வியந்தாள். புத்தம் புது நைட்டி. அவள் வீட்டில் கூட நைட்டி போடுவது வழக்கமில்லை என்றாலும், இரண்டு நாட்கள் முன்தான், இப்போதைக்கு அது வசதியாக இருக்குமே அடுத்த முறை கனிகா வரும்போது, அவளுடையது இரண்டை எடுத்துவ ரச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக்

கொண்டிருந்தாள். அதை புரிந்து கொண்டவன் போல் வாங்கி வந்தி ருக்கிறானோ! ஆசையாய் வாங்கிக் கொண்டாள்.

கம்மாவே உட்கார்ந்திருந்தவள் கண்களில் கனிதா புகைப்படம் பட் டது. அவளையறியாமல் கனிதாவை பற்றின நினைவு ஓடியது. ஜெயேஷ் மீது மிகுந்த அன்பு பற்றினை செலுத்தியிருக்க வேண்டும். ஜெயேஷ் அவளுக்கு செலுத்தியிருக்க வேண்டும். அதனால் தான், அதனால் தான், னும், அவள் நினைவுகளை மறக்க முடியாமல் தடுமாறுகிறான்.

தானும் அப்படிபட்டவளிடம், எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்திருக்க வேண்டுமோ? கொஞ்சம் டைம் கொடுத்திருந்தால், தானாகவே ஆசை யாய் வந்திருப்பானோ? உட்கார்ந்தே யோசித்துக் கொண்டிருந்ததில், நேரம் போனதே தெரியவில்லை.

இடையே தன் வீட்டிற்கு போன் செய்து, பிரணவுடன் பேசினாள். வெள்ளிக்கிழமை மெல்ல எழுந்து லைட் போட்டு விட்டு உட்கார்ந்தாள். உள்ளே பூவுடன் நுழைந்த ஜெயேஷ் அவள் மடியில் பூப்பந்தை போட் டான்.

கனிதா படத்திற்கல்லவா பூ போடுவான்? நான் எழுந்து போய் போட வேண்டுமோ? அது வேறயா! நானே எழுந்திருக்க முடியாமல் கிடக்கி றேன்! என்றவளுக்கு, அவன் டிரஸ் சேஞ்ச் செய்து கொண்டு வந்து, அதை தனக்காக ஆசையாய் வாங்கி வந்திருக்கிறான் என்று புரிந்தது.

அவளால், அவன் மாற்றத்தை நம்பமுடியவில்லை.

''என்னடா...! கதவை திறந்து போட்டுட்டு பகல்லயே ரொமான்ஸா....?'' திரும்பினால், கமலக்கண்ணன் கதவருகே அசடு வழிய விலகி வந்தான், ஜெயேஷ்..'' பாருங்க நிகிலா...! உங்களுக்கு ஆக் ஸிடெண்ட் ஆகி, கால் பிராக்சர் ஆகி படுத்திருப்பதை பற்றி, இவன் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. நானே, எதேச்சையாக உங்கள் ஆபீசுக்கு போன் செய்து விசாரிக்கவும், ஒரு மாசம் லீவு என்று சொன்னார்கள். இவ னுக்கு இன்னிக்கு தான் போன் செய்து ''என்னடா ஏதாவது விசேஷமா..



''என் மாமியார் என் னுன்னா என்னெய்யா நிப் பாங்க!''

''நீ என்ன பண்ணுவே?''

''அதை வாங்கி தாளிச்சிடு வேன்''

-வைகை. ஆறுமுகம், வழுதூர்.

என் லீவ்..'' என்று கேட்டால், சாவகாசமாக சொல்கிறாள்...''

''சாரிங்க... முன்னாடியே தெரியாம போயிடுத்து..'' வருத்தப்பட்டவன், உடல் நிலை விசாரித்த பின், ''எங்கடா, உன் ஜூனியர்... வந்தவுடனே ஓடி வருவானே..?''

''நிகிலாவே நடக்க முடியாமல் இருக்கா.. அவனை பாத்துக்கிறது கஷ்டம்னு நிகிலாவோட வீட்டுல விட்டுருக்கேன் நிகிலாவோட சிஸ்டர் கூட நல்ல ஒட்டிண்டுட்டானா... அவங்க பாத்துக்கறாங்க..''

''அப்ப ஜாலியா தனி குடித்தனம்னு சொல்லு..'' சொல்லி சிரித்தவன் கையோடு கொண்டு போயிருந்த, கவிதை தொகுப்புகளையும், இதர கவிதை நூல்களையும், நிகிலாவிடம் கொடுத்தான். ஒரு மாதம் லீவ் என்றதுமே நினைத்தேன்... போரடிக்குமே, உங்களுக்கு...! அதனால் தான் வீட்டில் இருந்ததையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து விட்டேன்....''

ஆவலாய் வாங்கிக் கொண்டாள். எல்லாமே கவிஞர் தாமரையும், சல்மாவும் எழுதியவை. அன்றொருநாள் 'பெண்கவிஞர்களுடைய படைப்புகளை படிக்க பிடிக்கும்'' என்று கூறியிருந்ததை நினைவில் வைத்துக் கொண்டு தேடி எடுத்து வந்திருக்கிறான்.

ச்சே..! என்றாவது ஜெயேஷ் அவ்வாறு தன் விருப்பத்தை உணர்ந்து, ஏதாவது வாங்கி வந்திருப்பானா..! சட்டென, ஒப்பிட்டு பார்க்க தோன்றியது.

சற்று முன்னே, ஜெயேஷ் பூ வாங்கி வந்ததோ, அதை ஆசையாக வைத்து விட்டதோ, அதற்கு உள்ளம் மகிழ்ந்ததோ சட்டென மறந்து போனது. பெண் மனம் என்பது இது தானோ...

ஒரு எதிர்பார்ப்பு பூர்த்தியடைந்தால் நிறைவு பெறாமல், அடுத்த பெரிய எதிர்பார்ப்பினுள் விழுகிறது. ஜெயேஷும், கமலக்கண்ணனும் பேசிக் கொண்டிருக்க, அவள் கவிதை புத்தகங்களுடன் ஒன்றினாள். ஜெயேஷ் உள்ளே போய், இன்ஸ்டன்ட் காபி போட்டு மூவருக்குமாக எடுத்துக் கொண்டு வர, ஹாலில் திரும்பிய போது, இருவரும் சிரித்துக் கொண்டிருந்தனர். நிகிலா முகத்தில் என்னவொரு சிரிப்பு.. தன்னுடன் அப்படி சிரிக்க என்றுமே பேசியதில்லையே.

''நிகிலா...! நான் இப்போ வந்ததே, ஒரு குட்நியூஸ் சொல்லத்தான்...., என்னன்னு சொல்லுங்க பார்ப்போம்...''

''என்னவாயிருக்கும்...? இனிமே யாரையும் கடி ஜோக்கால் கடிக்கிறதில்லைன்னு நல்ல முடிவு எடுத்திருக்காங்களா..''

''ஹ்ஊம்.. அது என் பிறப்புரிமை... அதை எதற்காகவும், விடமாட்டேன்... வேற ஒண்ணு...''

''என்ன! என்னுடைய கவிதையை அனுப்பினீங்களே... அதற்கு முதல் பரிசு கிடைச்சிருக்கும்..!''

''அதற்கு இன்னும் முடிவுகள் வெளியாகல.. என்னங்க அதற்கு பரிசு கிடைச்சிருந்தா எழுதின உங்களுக்குத்தான் முதல்ல தெரியப்படுத்திருப்பாங்க..''

''சரி... நீங்களே சொல்லுங்க..'' ''சொல்றதில்லை... காட்டறேன்..''



என்று கமலக்கண்ணன் பையிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து நிகிலாவிடம் காட்டிக் கொண்டிருக்க, வந்ததிலிருந்து கரடியாட்டம் சுத்திண்டிருக்கே... இந்தா, இந்த காபிய முதல்ல சாப்பிடு..'' ஜெயேஷ்.

''அது தான் நான் வரும் போதே தெரிஞ்சுப் போச்சே நான் கரடி.. அதுவும் பூஜை வேளை வந்த கரடின்னு..'' அவன் எதை சொல்கிறான் என புரியவும், நிகிலா தலை வெட்கத்தில் குனிந்தாள்.

கமலக்கண்ணனிடம் வாங்கி போட்டோவை பார்த்தான், ஜெயேஷ்.

அதில் நிகிலா, மெல்லிய ஜரிகையிட்ட ஆகாய வண்ண புடவையில் விரித்த தலையில் ஒற்றை ரோஜா சொருகி, கன்னத்தில் கை கொடுத்து ஆகாயம் பார்த்திருந்தாள். சுருக்கமாக சொன்னால், ஜெயேஷ் அடிக்கடி பார்த்து ரசிக்கும் அவனுக்கு பிடித்த போஸில் சிரித்தவாறு விழுந்திருந்தாள்.

தனக்கு தெரியாமல் எப்போது இந்த போட்டோ எடுத்திருப்பார்கள்..? தான் இல்லாத போது எப்போது கமலக்கண்ணன் வந்திருக்கிறான்...? குழப்ப ரேகைகள் முகத்தில் விழ, போட்டோவை நிகிலாவிடம் கொடுத்தான், ஜெயேஷ்.

''என்னடா.. முழிக்கறே...? அன்னிக்கு நிகிலா பிறந்த நாளைக்கு வந்திருந்தேன்ல.. அன்னிக்கு அவங்களுக்கே தெரியாமல் எடுத்தது தான் இந்த போட்டோ..

புகைப்படக் கண்காட்சிக்கானப் போட்டிக்கு இந்தப் புகைப்படத்தை அனுப்பியிருந்தேன். இந்த படத்தை கண்காட்சியில் வைக்கப் போறதா லெட்டர் போட்டிருக்காங்க. அந்த கண்காட்சியில் வைக்கப்படும் புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்து பரிசு தரப்போறாங்க... இதை சொல்லத்தான் வந்தேன்...''

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு விடை பெற்றா. கமலக்கண்ணன்.

'ச்சே..! என்ன ஒரு ரசனை...! தனக்கு தெரியாமல் எடுத்திருந்த போதும், ஏதோ தானே போஸ் கொடுத்து, காமிரா பார்ப்பது போல, என்னவொரு நேர்த்தியாக எடுக்கப்பட்டிருக்கிறது.' மீண்டும் போட்டோவைப் பார்த்தாள்.

## 30

கமலக்கண்ணனின் வருகை எப்போதாவது என்றிருந்தது, மாதமிருமுறை என்றாகி, வரமொருமுறை எனக் குறைந்தது. நிகிலாவும், அவனோடு பகிர்ந்து கொள்ள பல விஷயங்களோடு, விமர்சிக்க பல விமர்சனங்களோடு, அவனது வருகையை ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கியிருந்தாள். கால் சரியாகி மீண்டும் வேலைக்கும் போகத் தொடங்கியதில், இயல்பு வாழ்க்கைத் திரும்பியிருந்தது.

அன்றைய தினம், ஒரு கருத்தரங்கிற்கு, அவள் செல்வதாக இருந்தது. ஜெயேஷ் வரவில்லை என்று சொல்லிவிட்டான். கமலக்கண்ணனும் போவதாக இருந்ததால், இருவரும் சேர்ந்தே போகலாம் என முடிவு செய்து, அவனுக்காக காத்திருந்தாள், நிகிலா.

பிரணவ்வை, ஜெயேஷ் பார்த்துக் கொள்வதாக கூறிவிட்டிருந்தான். முன்பு ஒரு முறை இதே மாதிரியான சூழலில், ஜெயேஷ் நடந்து கொண்டது நினைவிற்கு வந்தது. ஜெயேஷ் மாறியிருக்கிறானோ, இல்லையோ பிரணவ் வளர்ந்து விட்டிருக்கிறான். தானே சாப்பிடுகிறான் டி.வி. போட்டு விட்டால் போதும். சத்தமே இருக்காது. நினைவிலிருந்து மீட்டது, வண்டி ஹாரன்.

கருத்தரங்கு முடிய மணி எட்டாகி போனது. காலியான ஆட்டோவை நிறுத்தி, நிகிலாவை ஏற்றிவிட்டு விட்டு போகலாம் என்று கமலக்கண்ணன் நினைத்தால், காலியான ஆட்டோ, கண்ணிலேயே படவில்லை.

''ஏன் ஆட்டோ..? நான் உங்க கூட வண்டிலயே வந்துடறேனே..? என்னை வீட்டில் டிராப் பண்ணிட்டு அப்படியே போயிடுங்க.. உங்களுக்கு சிரமம் ஒண்ணுமில்லையே?. கேட்டாள் நிகிலா.

''ச்சே.. என்னங்க சிரமம்..! நீங்க என் கூட வண்டில வருவீங்களோ, மாட்டீங்களோன்னு தான்.. இழுத்தான், கமலக்கண்ணன்.

''இரவு வேளை முன் பின் தெரியாத ஆட்டோவில் தனியா போறத விட, உங்க கூடயே வரேன்..''

ஒரு திருப்பத்தில் விழப் போனவள் சுதாரித்துக் கொள்ள, அவன் தோள்பட்டையை ஒரு நிமிடம் பற்றினாள். பின் ஒரே நிமிடத்தில் சுதாரித்துக் கொண்டு கையை எடுத்து விட்டாலும், அந்த ஒரு நிமிடத்தின் தாக்கம் கமலக்கண்ணனிடம் வெகுநேரம் தொடர்ந்தது.

அவளை வீட்டில் இறக்கி விட்டு விட்டு போய் விட்டான். நிகிலாவும் எதும் பேசாமல், தனது வழக்கமான வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள். கவியரங்கத்தில் எல்லாம் அவனுக்கு ஈடுபாடு இல்லை. அதை பற்றி பேசினாலும், அவனுக்கு என்ன புரிய போகிறது...?

நிகிலா போயிருந்த போது, ஜெயேஷுக்கு மறுபடி அந்த வலி நெஞ்சில் வந்தது. அதை பெரிதாக எண்ணி, மீண்டும் டாக்டரிடம் போவதா..? அப்படியே விட்டுவிடுவதா.? குழம்பி, பின், இன்னொரு முறை வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டான்.

அவள் வந்துபின் சமைத்து கஷ்டப்பட வேண்டாம். என்று, அவனாகவே, தோசை ஊற்றி ஹாட்பேக்கில் வைத்து விட்டு, மீதமிருந்த சாதத்தை சுடவைத்து வைத்திருந்தான். அவற்றை சாப்பிபாட்டு மேஜைக்கு எடுத்துக் கொண்டு வந்து வைத்தவள் அவன் தன் வேலையை எளிதாக்கியதற்கு



''மன்னர் காசியாத்திரை போறாராம்''

''எதிரி நாட்டு மன்னர் போருக்குத் தயாராக இருக்கும்படி ஓலை அனுப்பியிருக்கிறார். அதுதான் காசிக்கு கிளம்பிட்டிருக்கிறார்''.

**-ச.ஆ. கேசவன்,**
**இனாம் மணியாச்சி.**



ரொம்பவும் சந்தோஷப்படவில்லை. அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. உள்ளுக்கு ஜெயேஷ் ஏமாற்றமாக உணர்ந்தான்.

''நிகிலா இந்த பய கண்ணன், பாரேன்..! என்ன வேலையெல்லாம் செஞ்சிருக்கான். அவன் எதுக்கும் [illegible] புகைப்படங்களை ஸ்கேன் பண்ணி, அவற்றை லாமினேட் செய்து, கிராபிக்ஸ் வேலைகள் செய்து, ஒவ்வொன்றையும் பெரிதாக, அழகாக ஆக்கியிருக்கிறான். அவற்றை எல்லாம் வைத்து புகைப்படக் கண்காட்சி அமைக்கப் போகிறான்... அடுத்த மாதம் ஒன்றாம் தேதி என்று சொன்னான். என நினைக்கிறேன்...

உன்கிட்டே சொல்ல சொன்னான். அப்புறம் போன் பண்ணுவான்னு நினைக்கிறேன்.. அவன் எப்பவும் ஏதோ விளையாட்டு தனமாய் இருப்பான்.. இப்போது தான் ஏதோ பொறுப்பு வந்திருக்கிறது...!''

நிகிலாவிற்கு அவன் சொல்லும் போதே, அவற்றையெல்லாம் பார்க்க வேண்டும் போலிருந்தது. கமலக்கண்ணன் ஏன் போன் கூட செய்யவில்லை. போனவாரமும் சரி.. அதற்கு முந்தைய வாரமும் சரி.. ஏன் வரவில்லை..? கேள்வி தன்னை துளைக்க அலுவலகம் போய் சேர்ந்ததும் கமலக்கண்ணனுக்கு டயல் செய்தாள்.

பதறிப் போய் விட்டான் கமல கண்ணன்.

''என்னங்க.. இது? கோபம், கீபம்னு பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிண்டு.. ஜெயேஷ் சொல்லியிருப்பானே, கண்காட்சி பத்தி.. அதுக்கான வேலையில மும்மரமா இருந்துட்டேன். அவ்வளவு தான்.. உங்களுக்கு கால் பழையபடி ஊன்றமுடியதில்லையா... ஒண்ணும் ப்ராப்ளமில்லையே?..

''அதெல்லாம் ஒண்ணுமில்லை.. ஏன்.. என்னை எல்லாம் உங்க கண்காட்சிக்கு கூப்பிட மாட்டீங்களா..?''

இது வாயை பிடுங்கி வார்த்தையை வரவழைக்கும் வித்தை. நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய், என்பதை உன் வாயாலேயே வரவழைக்கிறேன் பார் என்று வார்த்தையைப் போட்டு வாங்கும் உத்தி. அவள் நினைத்தது போலவே பதறி போய் வந்தன, வார்த்தைகள்.

''ஐயோ.. நீங்க இல்லாமலா..? இந்த வாரம் சன்டே வீட்டுக்கே வந்து கூப்பிடலாம் என்றிருந்தேன்.. ஆனால், சண்டே என்னுடைய அம்மா ஊரிலிருந்து வராங்க.. அதனால,

நிகிலா.. தயவு செய்து தப்பா எடுத்துக்காதீங்க. அவசியம் நீங்க வரணும். வி.கே.பப்ளிக் ஸ்கூல்ல தான் அரேன்ஜ் பண்ணியிருக்கேன். அவனும், நீங்களும் வாங்க..''

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு போனை வைத்தவளின் உள்ளே, கவிதை வரிகள் ஓடின.

''உன்னால்,
புகழப்பட்ட பின்பே,
என்...
படைப்புகள்
பூர்த்தியடைகின்றன..!''

**31**

அன்று ஞாயிற்றுக்கிழமை. மற்ற நாட்கள் எல்லாம் வேலைகளை ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைத்து விட்டு, ஞாயிறன்று அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் பெண்களை கண்டாலே அவளுக்கு எரிச்சல் வரும்.

அவள் அந்த விதத்தில் மேலை நாட்டவரின் பாணியை பின்பற்றுபவள். வார நாட்களில் கூடுதலாக உழைத்தேனும், கடமைகளை முடித்துவிட்டு வார இறுதி விடுமுறை நாட்கள் தன்னை புதுப்பித்துக் கொள்ள, தனக்கு பிடித்தமானவற்றை செய்ய விழைவாள்.

அன்றும் அப்படித்தான். பார்த்து, பார்த்து அவள் செய்திருந்த சமையல் அமர்க்களமாயிருந்தது. கணவனுக்கு மனைவி மீது மோகம் வரக்கூடிய விஷயங்களில், அவள் கைப்பக்குவத்துடன் ருசியாக செய்தும் போடக்கூடிய சாப்பாடும் ஒன்று என நினைத்தான், ஜெயேஷ்.

பிரணவ் தூங்கிய பின், ஹாலுக்கு போகப்போனவளை தடுத்து ''என் இங்கேயே படுத்துக் கொள்ளேன்'' என்றான், கெஞ்சலான பார்வையிலே.

அரைமனதாக, பிரணவை அடுத்து படுத்தாள், நிகிலா. காலை வழக்கம் போல, எழுந்தவளுக்கு வித்தியசமாய் ஏதோ பட, பார்த்தால், ஜெயேஷின் கை பிரணவை தாண்டி, இவள் மேல், அணைத்திருந்தது. இவளை இறுக பற்றியிருந்த கை எதேச்சையாக மேலே பட்டது போலில்லை. கையை எடுத்து நகர்த்தியவள், மெல்ல மென்மையாய் புறங்கையில் இதழ்களை பதித்தாள்.

அவளுடைய ஸ்பரிசம் மூளை வரை போய் தாக்கி, அவனை முழிக்க வைக்க, கண் விழித்தவன்,

''நிகி! ரொம்ப அழகா தெரியறே..'' புன்னகையிலும், வெட்கத்திலும் விரிந்தன, உதடுகள். சட்டென ஓடியே போய்விட்டாள். அழகாய் இருப்பதற்கும், அழகாய் தெரியும் போது, மனம் அந்த அழகை அடி மனதிலிருந்த ரசிக்கிறது எனப் பொருள்.

அப்புறம் உறக்க மேது? எழுந்தான், ஜெயேஷ், நிகிலாவும், சாயங்காலம் பிரணவ்வோடு கண்ணனின் கண்காட்சிக்கு போய் வருவதென முடிவு செய்திருந்தனர். ஒரு வாரகாலம் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியில், அன்று முதல் காலையிலே திறப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தான், கமலக்கண்ணன்.

மதியம் நிகிலாவிற்கு திடுமென ஜெயேஷிடமிருந்த போன்.

''நிகிலா..! ஆபீஸில் இன்றைக்கு திடீரென சர்ப்ரைஸ் ஆடிட் பீப்பிள் வந்துட்டாங்க.. நான் இரவு வர லேட்டாகும். அனேகமா, அவங்களுக்கு கம்பெனி கொடுக்க, அவங்க கூடயே சாப்பிட்ட வந்துடுவேன். நீ எனக்காக வெயிட் பண்ண வேண்டாம், நீ சாப்பிடு...''

''என்னங்க..! இன்னிக்கு உங்க பிரண்ட்டோட கண்காட்சிக்கு போறதா இருந்தோமே, மறந்துட்டீங்களா..?''

''அடடா.. அதுவேற இருக்குல்ல.., நாளைக்கு போய்க்கலாமா.. ஆனா, அவன் கத்துவானே..? நீ வேணா போய் வாயேன் ... உனக்குத்தான் இதிலெல்லாம் ரொம்ப இன்ட்ரெஸ்ட்..''



''தனியா வா.. நாளை..? அதுவும் பிரணவ்வை தூக்கிண்டு.. வேண்டாங்க.. இன்னொரு நாள் பார்த்துக்கலாம்..''

போனில் அவள் குரலில் எதிரொலித்த ஏமாற்றம் அவனை என்னவோ செய்தது. அவளை திருப்திப்படுத்த, மூளை மின்னல் வேகத்தில் யோசித்தது.

கமலக்கண்ணனுடன் பேசிவிட்டு ஜெயேஷ் போனை வைக்க, அடுத்த நிமிடம் கமலக்கண்ணன் போனில் நிகிலாவை கூப்பிட்டான்.

''ஜெயேஷ் சொன்னாங்க... நிகிலா நீங்க சுமார் ஆறு மணிக்கு, ரெடியாகி உங்க வீட்டுல இருங்க, நான் அஸிடெண்ட்ட பார்த்துக்கச் சொல்லிட்டு, உங்கள வந்து பிக்கப் பண்ணிக்கிறேன். இரவு ஜெயேஷ் அப்படியே நேரா வந்துடறேன்னான்... அவன் கூட டின்னர் ஆயிடலாம்..''

நன்றி சொல்லிவிட்டு செல்லை அணைத்தவள், பர்மிஷனில் சீக்கிரமே வீட்டிற்கு வந்துவிட்டாள். பிரணவ்வை க்ரெச்சிலிருந்து கூட்டிக் கொண்டு வர அரை மணி நேரமிருந்தது. ஐந்தரைக்கு போய் அழைத்து வந்தால் போதும்.

கமலக்கண்ணன் வந்து அழைத்துக் கொண்டுப் போக வருவானே! என்ன புடவை கட்டிக் கொண்டுப் போக, என அலமாரியை தலைகீழாகப் புரட்டினாள்.

அன்று, கமலக்கண்ணன் சொன்னானே.

''என்னங்க.. நீங்க இந்த ஆகாய வண்ண புடவை கட்டியிருக்கும் போது, வானத்துக்கும் உங்களுக்கும் வித்தியாசம தெரியல, ச்சே..! கையோட காமிரா கொண்டு வராம வந்துட்டேனே...''

அந்த ஆகாய வண்ண புடவையை எடுத்து வைத்தாள். ''என்னங்க.. இது! நகைக் கடை விளம்பரத்துக்கு மாட்டிக்கிற மாதிரி மாட்டிட்டிருக்கீங்க.. ஒரு மெல்லிசா செயின் போட்டாலே, எளிமையா, நல்லா இருப்பீங்களே..!

டாலர் செயின் போட்டுக் கொள்ளும் எண்ணத்தை கைவிட்டு, பீரோவில் வைத்தாள். மெல்லிய தாலியுடன் சேர்ந்த செயின் போதும்.

தலையை பின்னி, முடிக்கும் தருவாயில், அன்று தலையை விரித்துப் போட்டவாறே, இருக்கும் போது தான் எடுத்த போட்டோவை காண்பித்த போது, கமலக்கண்ணன் கூறினானே.

''மயிலுக்குப் போட்டியா இப்படி தோகைய விரிச்சுப் போட்டுண்டு நின்னீங்கன்னா, சென்னை சில்க்ஸ்க்காரங்க, மாடலிங்க்கு புக் பண்ண வந்துடப் போறாங்க..''

பின்னிய தலையை அவிழ்த்து, விரித்துப் போட்டுக் கொண்டாள்.

''மேக்கப்ன்னாலே, பவுடரை எடுத்து அப்பிக்கறதுன்னு யாருங்க சொல்லிக் குடுத்துருக்காங்க...? ஒவ்வொரு கல்யாணத்துக்கு வீடியோ எடுக்கப் போவேனே... அப்போ பாத்தா, அரை இன்ச்சுக்கு பவுடரா இருக்கும். அதையும் வீடியோ காமிரா வழியா பார்க்கும் போது கொடுமைடா சாமி... பேசாம ஒரு துணிய எடுத்துண்டுப்போய், பரபரன்னு முகமெல்லாம் துடைச்சு விட்டுடணும்னு தோணும்... எளிமையா, அதே நேரம் மனசுலேர்ந்து ஒரு சிரிப்பு வருது பாருங்க... அது தாங்க உண்மையான

அழகு...'' என்றோ கமலக் கண்ணன் கூறியது.

முகத்தை நன்றாக அலம்பிவிட்டு, சின்ன ஸ்டிக்கரை வைத்தபோது திருத்திக் கொண்டாள்.

மணி ஐந்தேகால் ஆயிற்று. போய் பிரணவ்வை கூட்டிக் கொண்டு வந்தாள். ஆக்க... கமலக்கண்ணன் வந்ததும் போக வேண்டும்...

அப்போது அடித்தது தொலைபேசி... எடுத்தாள், அழைத்தது...?

## 32

''மிஸஸ் ஜெயேஷ்...''

''எஸ்...! நான் ஜெயேஷோட வைப் தான் பேசறேன்... சொல்லுங்க...''

''நீங்க உடனே புறப்பட்டு, சுபஸ்ரீ ஹாஸ்பிடலுக்கு வர முடியுமா...?''

''நீங்க யார் பேசறீங்க...! நான் எதுக்கு ஹாஸ்பிடலுக்கு வரணும்...? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க...?

''ஒண்ணுமில்லை, மிஸஸ் நிகிலா... கொஞ்சம் முன்னாடி, ஜெயேஷ், ஹார்ட் வலிக்குதுன்னு செக்கப்பிற்கு வந்தார்... பரிசோதிக்கும் போதே மயக்கமாயிட்டார்.

அவர் தனியாதான் வந்திருந்தார். சரின்னு அவர் செல்போன்ல, வீடுன்னு போட்டு இந்த நம்பர் ஸ்டோர் பண்ணி வைச்சிருந்தார்... அதை வச்சுதான் உங்களை காண்டாக்பண்ண முடிஞ்சது... நீங்க கொஞ்சம் உடனடியாக வந்தா தேவலை...''

''உடனே கிளம்பிட்டேன் ஸிஸ்டர்...''- நிகிலா.

பிரணவ்வுடன் அவசர அவசரமாய் ஆட்டோ பிடித்தாள், நிகிலா. போகும் வழியில் தான் நினைவு வந்தது, கமலக்கண்ணன் வேறு வந்து காத்திருப்பானே... உடனே, அவனை தொடர்பு கொண்டு, தன்னால் வர முடியாத சூழ்நிலையை விளக்கி, விபரம் கூறினாள்.

ஜெயேஷ் ஒரு தலைவலி, காய்ச்சல் என்று கூட படுத்துப் பார்த்ததில்லையே... ஆடிட், அதனால் லேட்டாகும், என்றான்... தானே செக்கப்பிற்கு போன இடத்தில், மயக்கமாகிவிட்டதாக ஹாஸ்பிடலில் கூறுகிறார்களே...

இரண்டு டாக்டர்கள் பரிசோதித்துக் கொண்டிருந்தனர். அவள் போன போது, ''நடுவில் ஒரு முறை கண் விழித்துப் பார்த்தார். மேடம்...! உங்களுக்குத் தகவல் தெரிவிக்கச் சொன்னார்... அவருக்கு ஏற்கனவே இரண்டு, மூன்று முறைகள் இது மாதிரி நெஞ்சுவலி வந்திருக்கிறதாமே... உங்களுக்குத் தெரியுமா...?''

கலங்கிய விழிகளுடன் ''இல்லை''யென்று தலையாட்டினாள், நிகிலா.

''உங்களுக்கு தெரிந்திருக்கவில்லை. ஆனால், அவரே நடுவில், நினைவு வந்தப் போது சொன்னார். மேலும் அப்போது, அவர் டெஸ்ட் எடுத்ததெல்லாம் வீட்டில் இருப்பதாக கூறினார். இப்போ, மீண்டும் ஒரு முறை ஆரம்பத்திலிருந்து டெஸ்ட் எடுத்து, அவருக்கு என்ன ப்ராப்ளம் என்று கண்டறிய, நேரம் அதிகமாகும்... அதனால மேடம்... நீங்க முன்னமேயே எடுத்த ரிசல்ட் தேடிப்பாருங்க... அதை கொண்டு வந்தீங்கன்னா, மேற்கொண்டு சிகிச்சையை உடனே ஆரம்பிக்கலாம்...''

''அவருக்கு என்ன டாக்டர்... ஒண்ணும் பயமில்லையே...''

''அதான்மா சொல்றேன்... இப்போதைக்கு ஒண்ணும் பயமில்லை. கொஞ்ச நேரத்துல மயக்கம் தெளிஞ்சுடும். ஆனா, மூச்சு குழல்ல ஏதேனும் ப்ராப்ளம் இருந்தாதான், இது மாதிரி திடீரென மயக்கம் வரும்... அடிக்கடி இப்படி மயக்கம் வரதும் ரொம்பவும் ரிஸ்க்...'' சொல்லி, நிறுத்தியவர், தீர்க்கமாய் தலையாட்டியவாறே தொடர்ந்தார்.

''அது தான் நான் சொன்னபடி நீங்க உடனே வீட்டுக்குப்போய், பழைய ரிசல்ட் காப்பீஸ் கொண்டு வாங்க... இப்போதைக்கு ஒண்ணும் பயமில்லை...''

'சரி'யென்று தலையாட்டினாள், நிகிலா. வேறு என்ன செய்வாள்? அவனுக்கு இதுவரை இரண்டு, மூன்று முறைகள் நெஞ்சு வலித்து டாக்டரிடம் போயிருப்பதே, இப்போது இந்த டாக்டர் சொல்லிதான் தெரிகிறது.... இவள் பழைய டாக்டரிடம் காண்பித்த ரிசல்ட்டை எங்கே என்று தேடுவாள்...? இவள் வீட்டிற்கு போயிருக்கும் போது, ஜெயேஷுக்கு நினைவு திரும்பினால்... தன்னை தேடுவானே... தனியே ஜெயேஷை விட்டு விட்டு எங்கே தான் போவது...!

சிந்தனை வயப்பட்டவளுக்கு ஆபத்பாந்தவன் போல் வந்து நின்றான், கமலக்கண்ணன். ''ஜெயேஷுக்கு என்ன நிகிலா...? ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆயிருக்கான்னு உடனே என்னவோ, ஏதோன்னு பதறிட்டேன்''

நிகிலா விஷயத்தை கூறினாள். கூடவே, ஜெயேஷ், கமலக்கண்ணன் இவர்களுடைய இன்னொரு நண்பனான நவீனும் வந்திருந்தான். ''நிகிலா...! நீங்க கவலைபடாதீங்க... நான் கண்காட்சி நடக்கற இடத்துக்கு போக வேண்டியிருக்கு... நீங்க வீட்டுக்கு போய் அவனுடைய மெடிக்கல் ரிப்போர்ட்டை எடுத்துட்டு வாங்க... இவன் இங்கே இருக்கட்டும்... என்னடா...''

நவீனைப் பார்த்துக் கேட்டான்... ''நீங்க போய்ட்டு வாங்க, சிஸ்டர்... நான் இங்க ஜெயேஷ் பக்கத்துல இருக்கேன்... பிரணவ் கூட இங்கேயே இருக்கட்டும்... விட்டுட்டு போங்க...''

''பிரணவ் சமத்தாக அங்கிளோட இருக்கேம்மா...'' என்று சொல்லி விட்டான். பரபரப்பில் எதுவும் ஓடவில்லை. இருவருமாக புழங்கக்கூ



''நோயாளியை பரிசோதிக்கும் போது படம் பிடிக்க கேமிரா மேனையும் டாக்டர் ஏற்பாடு பண்ணி இருக்காரே ஏன்?''

''டாக்டர் சினிமாவில் நடிக்கப் போறாராம் அதுக்கு இப்பவே ஒத்திகை பார்க்கிறார்''.

-தங்கம்.

டிய இடங்களில், ஜெயேஷ் மெடிக்கல் ரிப்போர்ட்சை வைத்திருந்தால் எப்படியும் இவள் கண்ணில் பட்டிருக்கும்... ஒருவேளை அவனுடைய பீரோவில் வைத்திருக்கிறானோ, என்னவோ...! இதுவரை ஜெயேஷுடைய பீரோ பக்கம் கூட அவள் போனதில்லை.

பீரோ அருகில் போனவள் சட்டென நினைவு வந்து, ஜெயேஷுடைய அம்மாவிற்கு போன் செய்து விஷயத்தை கூறினாள்.

பீரோவை திறந்ததுமே, அவனுடைய துணிகளுக்கிடையில், பளிச் சென்று கண்ணில் பட்டது, அந்த புடவை.

ஒருவேளை புடவை கவிதாவுடையதாக இருக்குமோ... முன்பெல்லாம், அவளுடைய உடைமைகளை அவள் பயன்படுத்தியவைகளை பத்திரமாக வைத்திருந்து பார்த்து, பார்த்து உருகுவான், என்று அன்று கூட கமலக்கண்ணன் கேலியாக பேசினானே! அப்புறம் இவர்கள் கல்யாணம் நிச்சயமானதும், எல்லாவற்றையும் ஜெயேஷுக்கு தெரியாமல், வேலைக்காரிக்கு கொடுத்துவிட்டதையும், அது தெரிந்து ஜெயேஷ் அவன் அம்மாவிடம் சண்டை போட்டதையும் நிகிலா கேட்டறிந்திருக்கிறாள்.

அதுபோலவே, கவிதா புடவையை எடுத்து வைத்திருக்கிறானோ, என்று எண்ணியவள் அதை நகர்த்திவிட்டு, மெடிக்கல் ரிப்போர்ட்டை தேடிப்போக, சரிந்து கீழே விழுந்தது, புடவை.

புடவை கூடவே அதனுள் இருந்து விழுந்தது, அந்த வாழ்த்து கார்டு. எடுத்து பார்த்தவள், திடுக்கிட்டாள். ஒரு காதலர்களுக்கான வாழ்த்து கார்டு. அதில், அன்புள்ள நிகிலா என எழுதி, கீழே உன்னை லேட்டாக புரிந்துக் கொண்ட ஜெயேஷ் என்று கையொப்பம் இட்டிருந்தான்.

[illegible] வாங்கி வைத்திருக்கிறான். தேதியை பார்த்தாள். அவளுடைய பிறந்த நாள் அன்றைய தேதி. அப்புறம் ஏன் தன்னிடம் கொடுக்கவில்லை.

அடுத்து, டைரி போலிருந்ததை எடுத்தாள். அது டைரி இல்லை, டைரியின் அட்டை உள்ளே நிறை பேப்பர்களாக இருந்தன. பிரித்து பார்த்தால் எல்லாம் அவள் கவிதைகள்.

பத்திரிகையில் வெளியான அவள் கவிதைகளின் பேப்பர் கட்டிங்குகளை எடுத்து வைத்திருக்கிறான். அவளே கூட அதையெல்லாம் அவ்வளவு பொறுப்பாக எடுத்து வைத்துக் கொண்டதில்லை. படித்து விட்டு அப்படியே போட்டுவிடுவாள்.

அவற்றை பொக்கிஷம் போல் சேர்த்து வைத்திருக்கிறான். அவ்வளவு அன்பா, அவள் மேல்! சிலிர்த்துப் போனாள் நிகிலா.

கூடவே ஏதோ கடிதங்களின் காப்பி இருப்பதைப் போலிருக்கவும், அவற்றை விரித்துப் பார்த்தாள். விரிக்கும் போதே, அதில் இருந்த வார்த்தைகள் பரிச்சயமாய் இருப்பதைப் போலிருந்தது. பார்த்தால், அத்தனையும் இவளது கவிதையைப் பாராட்டி, பத்திரிகைகளுக்கு ஜெயேஷ் அனுப்பியிருந்த விமர்சன கடிதங்கள். ஒரு காப்பி எடுத்து வைத்துக் கொண்டு அனுப்பியிருந்திருக்கிறான்.

நேரில் ஒரு வார்த்தை கூட பாராட்டாத ஜெயேஷா, இவள் கவிதை வெளிவரும் இதழுக்கு அடுத்த இதழில் தவறாமல் விமர்சனம் எழுதும்



ஆர்.ஜெ.

அதற்கு அடியில் இருந்தது, கபிலனின் கவிதை புத்தகம். அன்பு நிலா... என்று ஆரம்பித்து, ''இன்று கபிலனின் புத்தகம்... நாளை-

இதே வரிசையில் உன் புத்தகம்! என்று முத்துமுத்தாக எழுதி கையெழுத்திட்டிருந்தான். அதுவே, ஒரு குட்டிக் கவிதை போலிருந்தது.

நிகிலாவிற்கு ''ஓ''வென அழவேண்டும் போலிருந்தது. அன்றொரு நாள், அலுவலகத்திலிருந்து, உள்ளே நுழையும் போது, ஜெயேஷ் இந்த புத்தகத்தை நீட்டியது நினைவிற்கு வந்தது.

இவள் அதை ஏற்கனவே படித்திருந்ததால், அசுவாரசியமாக, மேசை மேல் போட்டு விட்டு போய்விட்டாள்... சிறிது நேரம் கழித்து பார்த்தப் போது, அது அங்கே இல்லை. நிகிலாவும், அதற்காக பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை.

தன்னை நிறைய முறை நெருங்கி வர முயற்சித்தது, பின் தயங்கியிருக்கிறான், என புரிந்தது அவளுக்கு.

சிலர் கமலக்கண்ணன் மாதிரி முகத்திற்கு நேரே பட்டென பேசி பாராட்டி சுலபமாக மற்றவரை கவருவார்கள்.

சிலரோ இப்படித்தான். தான் நேசிப்பவருக்கு கூட தெரியாமல், நேசித்து, ரசிப்பவர்க்கே தெரியாமல் ரசித்து, அந்த கனவுகளை கட்டிக் காப்பவர்கள், ஜெயேஷ் இந்த ரகம்தான்.

ச்சே...! இவ்வளவு நாள் புரிந்து கொள்ளாமல் போய் விட்டோமே, என்றிருந்தது, நிகிலாவிற்கு. கடைசியாய் அவள் தேடி வந்த மெடிக்கல் ரிப்போர்ட் கவர் கைகளுக்கு அகப்பட்டது. மற்றவற்றை பழையபடி, திணித்து பீரோவை மூடி, கதவை பூட்டி விட்டு, மருத்துவமனைக்கு விரைந்தாள்.

போகும் வழியிலேயே ஆட்டோவில் பிரித்துப் பார்த்தாள்... நுரையீரலுக்கு செல்லும் சுவாசக்குழாயில் சிறு அடைப்பு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை கூட தன்னிடம் ஏன் சொல்லாமல் போனான்.. தான் நேசித்ததை தான் வெளிப்படுத்த வில்லை. வியாதியை கூடவா மறைக்க வேண்டும்?

இவள் வார்டுகளை கடந்து, ஜெயேஷ் படுத்திருந்த, கட்டிலின் அருகே போய் சேர்ந்தப் போது... அந்தக் காட்சி...!

## 33

ஜெயேஷ் கையால் நெஞ்சை பிடித்துக் கொண்டு, மூச்சுவிட முடியாமல் திணற, நவீன் ஜெயேஷை கவனிப்பதா... அதற்குள் டாக்டரைக் கூப்பிடப் போவதா என்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

''நிகிலா ...! ஒரு நிமிஷம் இங்க இவனைப் பிடிங்க ... நான் போய் டியூட்டி டாக்டரை கூட்டிட்டு வந்துடறேன்...!

ப்ரணவ் ஒருபுறம் பயமாய் அப்பாவை பார்த்தபடி அமர்ந்திருந்தான்..வந்த டாக்டர், நிகிலாவை பார்த்ததும், ''என்ன...பழைய ரிப்போர்ட்ஸ்ஸை எல்லாம் எடுத்துட்டு வந்துட்டீங்களா...?

மௌனமாய் எடுத்துக் கொடுத்தாள்.

''ஒரு நிமிஷம் ரூமுக்கு வந்துட்டுப் போங்க... டாக்டர் செய்த முதலுதவியினால், ஜெயேஷின் மூச்சு திணறல் மட்டுப்பட்டு சாதாரணமாக மூச்சு விட முடிந்தது அவனால்.

''என்ன டாக்டர்...? -ரூமுக்குள் என்ன குண்டைத் தூக்கிப் போடப் போகிறாரோ என்ற பதைபதைப்புடன் நிகிலா.

''நான் எதிர்பார்த்த மாதிரியே தான் ரிப்போர்ட்ஸ் இருக்கு, மிஸஸ். ஜெயேஷ். அவருக்கு சுவாச குழாயில் உள்ள சின்ன அடைப்பை ஆபரேஷன் பண்ணி, சரி செய்துட்டப் போதும். மூச்சு விட சிரமம் இருக்காது. மயக்கமும் வராது... என்ன? எறிட்டார், நிகிலாவை.

''ஆபரேஷன்னா... உயிர்க்கு ஒண்ணும் ஆபத்தில்லையே, டாக்டர்..''

அதெல்லாம் ஒண்ணுமேயில்லைமா. மைனர் ஆபரேஷன் தான், என்ன, ஒரு இருபதாயிரம் செலவாகும் அவ்வளவுதான்... புரட்டிடுவீங்கள்ள...?

''முடியும்'' என்று தலையசைத்தாள். பணத்திற்கு கவலையில்லை, ஜெயேஷ் ஓரளவு நல்ல சம்பளத்தில் வேலையில் இருப்பதால், நிகிலா தன் வீட்டிற்கு பாதி சம்பளம் கொடுத்தாலும் கூட அவர்களால் ஓரளவிற்கு நிறையவே சேமிக்க முடிந்திருக்கிறது.

ஆபரேஷன் மறுநாள் செய்ய சம்மதம் சொல்லிவிட்டு, ஜெயேஷ் படுக்கைக்கு அருகே வந்தாள். நவீன் பாவம்... ரொம்ப நேரமாக இருக்கிறான். அவனுக்கு நன்றி கூறி, தானே பார்த்துக் கொள்ள முடியும் எனக் கூறி, விடை கொடுத்தாள்.

பிரணவிற்கு ஆஸ்பத்திரி கேன்டீனிலேயே வாங்கி ஊட்டியவள், தான் ஏதும் சாப்பிடக்கூட மனமின்றி, ஜெயேஷின் அருகிலேயே அமர்ந்தாள்.

நல்ல உறக்கத்தில் இருந்தான், ஜெயேஷ். ஜெயேஷின் அம்மாவும், அப்பாவும் மறுநாள் மாலை கிளம்பி, இரவுக்குள் வந்து விடுவதாகக் கூறினார்கள்.

பிரணவ்வை தூங்கப் பண்ணி, பக்கத்தில் இருந்த பெஞ்சில் படுக்க வைத்தவள், ஜெயேஷ் கட்டிலின் அருகிலேயே, சேரிலேயே, உட்கார்ந்திருந்தாள். உட்கார்ந்திருந்தவள் அவளையும் அறியாமல் தூங்கிப்போனாள்.

காலையில் அவளை எழுப்பியதே ஜெயேஷ்தான். முதல் நாளைய சம்பவங்களின் சுவடுகள் ஏதுமின்றி, பிரெஷ்ஷாக இருந்தான். நடந்தவற்றை நிகிலா மூலம் கேட்டறிந்தவன், ''பணத்துக்கு என்ன பண்ணே, நிகிலா..?

''அப்பா தான் தரேன்னிருக்காரு... கனிகா கல்யாணத்துக்கு சேத்தது கொஞ்சம் போல, பாங்கில் இருக்கு அதுல இருந்து எடுத்து தரேன்னாரு... நீங்க மயங்கினதும், எனக்கு கையும் ஓடல, காலும் ஓடல...

''ச்சேச்சே...! உங்க அப்பாகிட்ட எதுக்கு கேட்ட...? என்னோட பேகிலேயே, செக் புக் இருக்கும் பாரு, எடு... கையெழுத்து போட்டு தரேன்... என்னுடைய அக்கௌண்டிலிருந்து எடுத்து வா...''

ஆபரேஷன் நடத்தும் முன்பு, மீண்டும் அவனுக்கு, சட்டென மயக்கம் வரும் வாய்ப்பு அதிகம் இருப்பதால், அவன் தனியாக வெளியே



போகக்கூடாது என்று டாக்டர் கூறியிருந்தார்.

காசோலையை வாங்கிக்கொண்டுப் போய், நிகிலா பணம் இருப்பத்தைந்தாயிரம் எடுத்து வந்தாள்.

மதியம் ஒரு மணி வாக்கில் ஜெயேஷுக்கு ஆபரேஷன் துவங்கியது. நிகிலா, திடீரென, தான் மருந்து வாங்கிக் கொள்ள வெளியே போக வேண்டியிருந்ததால், பிரணவ்வையும் உடன் இழுத்துக் கொண்டு அலைய வேண்டுமே, என, அவனை காலையிலேயே கிரெச்சில் கொண்டு விட்டிருந்தாள்.

ஆபரேஷன் முடிய, எப்படியும் ஒரு மணி நேரமாகும் என டாக்டர் கூறியிருந்தார்.

அங்கே, இருந்த பேப்பரை புரட்டி, புரட்டி படித்தாகி விட்டது. சரி என்று, அங்கே இருந்த வார இதழையும் புரட்டினாள். அவள் கைகள் ஆவலுடன் ''என் டைரி'' பக்கத்தை தேடின. அதில் பெண்கள் தங்கள் வாழ்க்கையின் தீர்வுகாண முடியாத சிக்கல்களை வாசகர்களிடம் தீர்வு கேட்டு எழுதியிருந்தீர்கள். நாம் காண்பதே உலகம் என்றிருக்கிறோம், நாம் பார்வைக்கும் அப்பாற்பட்டு, எவ்வளவு கொடுமைகள், கஷ்டங்கள் பெண்களின் வாழ்வில், என நிகிலா நினைப்பதுண்டு.

அந்த இதழில், ஒரு வாசகி, உணர்ச்சிகளின் கொந்தளிப்பில், தவறு செய்ய இருந்து கடைசியில் மனம் மாறி நல்வழியில் திரும்பியதைக் குறிப்பிட்டிருந்தாள்...

கணவரோ, சாப்ட்வேர் இன்ஜினியர். மனைவியோ வீட்டரசி. கணவர் பணத்தின் பின்னால் போக, வீட்டோடு இருக்கும் மனைவியோ உணர்ச்சிகளின் பிடியில். அவருக்கு பழக்கமாகிறார், ஒரு நண்பர். மனம் விட்டு பேசுவதில், ஆரம்பமாகும் பழக்கம், எல்லை தாண்டிப் போகக்கூடிய ஒரு கட்டத்தில்...

34

அந்த வாசகி எழுதியிருந்தார் ''என் நல்ல நேரம் என்றுதான் எண்ண வேண்டும். ஏதேச்சையாக மகரிஷி ஒருவரின் கேள்வி பதில் ஒன்றை பத்திரிகை ஒன்றில் படிக்க நேர்ந்தது.

கேள்வி: ''கணவனுக்கோ, மனைவிக்கோ துரோகம் செய்பவர்களை பற்றி...''



''இந்த டாக்டர் ஆபரேஷன் பண்ணி யாருமே பிழைச்சது இல்ல நீ மட்டும் எப்படி தப்பினே?''

''மறதியிலே எனக்கு பதிலா இன்னொருத்தருக்கு டாக்டர் ஆபரேஷன் பண்ணிட்டார்''

-தங்கம்.

பதில்: ஒருமுறை செய்த தவறை, மறுமுறை செய்ய மனம் தூண்டப்படுவதில் ஆச்சரியமில்லை. உண்மையிலேயே, முதல்முறை தவறு செய்வதற்கான, உந்துதல் மனதில் எழும் போதே, அதை முளையிலேயே கிள்ளி எறிதல் என்பது மிகவும் கஷ்டம். அது உண்மையிலேயே வேதனையான கேள்விதான். ஆனால், அதன் பலனோ, வாழ்நாள் பூரா குற்ற உணர்வு இன்றி, உங்களை, நிம்மதியாக வாழ செய்யும். இது பல தம்பதியினருக்குத் தெரிவதில்லை. உணர்ச்சிகளின் பிடியில் சிக்கி கொள்கிறார்கள்.

ஒருவர் வெள்ளை வேட்டி அணிந்திருக்கிறார் என்றால், அதன் மேல் ஒரு சிறு அழுக்கோ, கறையோ படாதவாறு கவனமாக இருப்பார். அவர் கவனக்குறைவால், வண்டி ஒன்று லேசாக சேறை தெளித்துவிட்டு போகிறது என வைத்துக் கொள்வோம். எப்படியோ சேறு பட்டு அழுக்கான வேட்டி தானே, என்ற நினைப்பு வந்துவிடும்.

அதுபோலதான் தாம்பத்தியமும்...! நண்பர்களிடையே பேசலாம், பழகலாம், அது ஆண் நண்பர்களோ, பெண் நண்பர்களோ...! ஆனால், எல்லைக்கு மீறின பந்தம் கணவனுடன், அல்லது ஆண் என்றால் மனைவியுடன் மட்டுமே இருக்க வேண்டும். ஒருமுறை தப்பு செய்துவிட்டால் 'நம்மை யாரும் கண்டுபிடிக்கவில்லை, என்ற எண்ணமே, செய்த தப்பு தரும் தைரியமே மீண்டும் மீண்டும் தப்பு செய்யத் தூண்டும். அதனால், முதல்முறை தப்பு செய்யாமலிருப்பதே, தப்பு நடக்கவிடாமல் மனதை காத்தலே உண்மையான துறவு!...

''இக்கேள்வி பதில் என் கண்களை திறந்தன. என்னுடன் பழகியவர் மனதில் என்ன இருந்ததோ, ஆனால் என் மனம் தடுமாற இருந்தது, உண்மை. தப்பு செய்து மாட்டிக்கொள்ளாமல் இருக்கலாம். அதனால், மாட்டிக்கொள்ளாதவாறு நான் நடந்துக் கொள்வதால், அது சரியென்று ஆகிவிடுமா, என்று நினைத்தேன்...ஒரு வேளை, நான் சறுக்கி, அது தெரியவரும் போது, வயதுவந்த என் பையன் முன்னால் எவ்வாறு கூனிகுறுகி நிற்க நேரிடும்... நல்லவேளை ' என நினைத்தேன். ஆனால், இதுநாள் வரை நன்றாக பழகிவிட்டு, அந்த நண்பரை எப்படி விலக்கி, ஒதுக்குவது எனப் புரியவில்லை. அவரும் அதை தப்பாக நினைக்காதவாறு அந்த உறவை விலக்க வழி சொல்லுங்கள் ' என முடித்திருந்தாள், அந்த வாசகி.

அதற்கு, மனோதத்துவ நிபுணர் ஒரு பதில் கூறியிருந்தார். ''நீ அவ்வாறு ஒரு நினைப்பில் இருந்ததைப்போல், அந்த நண்பர் மனசில் எந்த நினைப்பும் இல்லாமல், அவர் ஒரு நண்பராக மட்டுமே பழகியிருக்கலாம். நீ பேசுவதை குறைத்துக் கொள். அவருக்கும் அந்த தவறான எண்ணம் ஏதுமில்லையென்றால், நாளடைவில் இது சரியாகிவிடும். அவ்வாறில்லாமல் தப்பான எண்ணத்துடன் பழகியிருந்தால், கூப்பிட்டு சொல்லிவிட்டு, அதோடு அந்த உறவை முறித்துக் கொள். இப்போது உன் மனதில் சலனம் ஏதுமில்லையென்றால், இவ்விரண்டுமே உனக்கு எளிதாகத்தான் இருக்கும். உன் கணவர் உன்னை ரசித்து பார்த்து பாராட்டும் பாராட்டே உண்மையானது.

மற்ற ஆண்களுடைய பாராட்டெல்லாம், நரி, காக்காவைப் பார்த்து



''நீ அழகாய் இருக்கிறாய்'' அழகாய் இருக்கிறாய்... என்று புகழ்ந்துவிட்டு, காக்கா ஏமாற தருணம் பார்த்திருப்பதைப் போன்றது.''

நிகிலாவும் நினைத்துப் பார்க்கிறாள். கமலக்கண்ணன் தன்னை, தன் ரசனையை, தன் கவிதையைப் புகழ்ந்த போதெல்லாம் அவன் கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்த்துப் பெருமிதப்பட்டிருக்கிறாள். அவனுடைய வார்த்தைகள் அவள் மனதில் ஆழமாக பதிந்திருந்ததால் அல்லவா, கமலக்கண்ணனுடன் கண்காட்சிக்கு போகப்போகிறாள், என்றவுடன் அவளையறியாமல் புடவையிலிருந்து, நகை, தலை வரை, அவன் என்ன பிடிக்கும் என்று கூறியிருந்தானோ, அவற்றைத் தேர்வு செய்திருந்தாள்.

ச்சே...! அவளுக்கு இப்போது நினைத்தாலும், வெட்கமாயிருந்தது. அன்று ஏதேதோ நடந்து, இன்று ஹாஸ்பிடலில் இருக்கிறாள். எல்லாம் சரியாக நடந்து கமலக்கண்ணனுடன் கண்காட்சிக்கு போயிருந்தால்...

ச்சே...தனக்கு பிடித்ததாக கூறியவாறு, இவள் அலங்கரித்துக் கொண்டு வந்திருக்கிறாளே என்று, ஒருவேளை அவன் மனம் தூய்மையாக இருந்திருந்தால், என்னை எவ்வளவு கேவலமாக எண்ணியிருப்பான்?

இனிமேல் ஜெயேஷ் தவிர வேறு எந்த ஆணுடைய வார்த்தைகளிலும் அந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று எண்ணிக்கொண்டாள்.

''மேடம்...! உங்களை டாக்டர் கூப்பிடுறார்.. நினைவுகளை கலைத்தது, நர்ஸின் குரல்.

''மிஸஸ்.ஜெயேஷ்! ஆபரேஷன் ஓவர். அடைப்பை நீக்கியாச்சு... இன்றைக்கு பூரா நல்ல ஓய்வில் இருந்துட்டு நாளை மதியத்துக்கு மேல், டிஸ்சார்ஜ் ஆகிக்கலாம். ஜெயேஷ் மார்பில் கட்டு தெரிய, உறக்கத்தில் இருந்தான். முகத்தை மட்டுமே பார்க்க முடிந்தது. பின், ஒரு மணி நேரத்தில், ரூமில் கொண்டு விட்டு விட்டார்கள்.

''ஜெயேஷ்...! என்னடா இது? நெஞ்சு வலின்னெல்லாம் நீ இதுவரை ஒருமுறை கூட கூறியதில்லையேடா... அம்மா செண்பகம் ஜெயேஷை பார்த்து பதறிப் போனாள். ஒரே பையன், இப்படி படுக்கையில் கிடக்கவும், அவளால் ஆதங்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

நிகிலா, ஒண்ணும் பயப்பட வேண்டாம், அத்தை... என்று ஆரம்பித்து, நடந்தவற்றை கூறினாள். அவளுக்கும் அத்தையும், மாமாவும் உடன் இருந்தது பெரும் ஆறுதலாக இருந்தது.

மறுநாள் டிஸ்சார்ஜ் ஆகிப் போனபின், நார்மலுக்கு வந்திருந்த, ஜெயேஷ் பேப்பரில் பார்வையை பதித்திருந்தான்.

''எப்படிடா ஜெயேஷ் இருக்க...? என்ன, எங்களையும், சிஸ்டரையும் ரொம்ப பயப்படுத்திட்டே...? என்றவாறே வந்தான், நவீன்.

''இல்லைடா... நானே அதை பெருசா எடுத்துக்காம விட்டுட்டேன்... ஏதோ, இரண்டொரு முறை மயக்கம் வந்திருக்கு... டாக்டர்கிட்டே செக் கப் பண்ணி என்ன, ஏதுன்னு பார்க்கணும்னு நினைச்சேன். தள்ளிப் போட்டது தப்பாயிச்சு... இனிமே ஒன்னும் இல்லைடா...!

''ஆமா... எங்க? நீ மட்டும் வந்திருக்க? அவன், கண்ணன் எங்கே?''

''உனக்கு விஷயமே தெரியாதாடா... இரண்டு நாளா, பேப்பர் பூரா அவன் நியூஸ் தான்...

காபி கலந்து, நவீனுக்கு எடுத்துக் கொண்டு வந்த நிகிலா திடுக்கிட்டாள். ஒருவேளை அவனுடைய புகைப்பட கண்காட்சி நன்றாக நடைபெற்று அதைப் பற்றி பேப்பரில் எழுதியிருக்கிறார்களோ... அவர்கள் இருந்த நிலைமையில் பேப்பர் படிப்பதெங்கே...?

நவீன் போனபின், ஜெயேஷ் நிகிலாவை கூப்பிட்டான்.

''நிகிலா... கேட்டியா விஷயத்தை...! நம்ம கமலக்கண்ணன் எவ்வளவு அப்பாவின்னு நினைச்சிட்டிருக்கோம்...

அவன் என்னடான்னா, தன்னை கவர்ச்சியாக போஸ் கொடுக்கச் சொல்லி, புகைப்படம் எடுத்து, அதில் கிராபிக்ஸ் மூலம் ஆபாசமாக இரித்து அதை வைத்து, தன்னை பிளாக்மெயில் பண்ணுவதாக, பிரபல நடிகைப் புகார் கொடுக்கப்போய், போலீஸ் கைது பண்ணத் தேடுகிறாமே? அவன் தலைமறைவாய் இருக்கானாம்.

நவீன் சொல்றான்... தான் பெரிய அளவில் புகைப்பட கண்காட்சி நடத்தி புகழ் பெறுவதை விரும்பாத, போட்டி போட்டோகிராபர்கள் பணம் கொடுத்து நடிகையை புகார் கொடுக்க வைத்திருக்கிறார்கள்னு அவன் சொல்றானாம். எந்த புத்துல எந்த பாம்பு இருக்குமோங்கிறது சரியா இருக்குப் பாரேன்...''

பெரும் மூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது.

''பாவம்..தான் அந்த நடிகை.. அதேபோல் எத்தனை பெண்களிடம் ஆசை வார்த்தைகளால் மயக்கினானோ...'' பேச்சை திசை திருப்ப எண்ணி, பிரணவ் உங்ககிட்ட ஒன்று சொல்லனுமாம்...

''என்னடா பிரணவ்! அப்பா கிட்டே வா... என்ன வேணும் சொல்லு...''

''அப்பா...! அம்மா, நீ, நான், தாத்தா, பாட்டி வெளியே இதுவரை போனதேயில்லை, இல்லையா...! இன்னிக்கு எங்களை வெளியே கூட்டிட்டு போப்பா...

சிணுங்கினான், பிரணவ்.

''மேலிடமே சொன்னபிறகு, டம்மி நான் என்ன சொல்லப் போறேன்... பாட்டி..தாத்தாகிட்ட சொல்லி ரெடியாகச் சொல்லு, எல்லாருமா எங்கயாவது போய்ட்டு வரலாம்...

பிரணவ் குதித்துக் கொண்டு ஓடினான்.

தனக்காக வாங்கி, கொடுக்கத் தயங்கி, உள்ளே, தன் மனதை போல் பத்திரமாய் வைத்திருந்த புடவையை எடுத்து, கட்டிக்கொண்டு, சர்ப்ரைஸாக எதிரே வந்து நின்றாள், நிகிலா.

''வாவ்...! என்ன அழகு என் மனைவி...'' என்று அவன் வியப்பாய் வியந்தது, விழிகளில் விரிந்தது. அவள் தலை, வெட்கத்தில் குனிந்தது. உரிமை உள்ளவனின் பாராட்டு இவ்வளவு வெட்கத்தை, நெகிழ்ச்சியை தரக்கூடுமோ

-நிறைவு-